விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

டிஸ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில்
கிடைக்கும்
dishtv
SATS-TECH
சாட்ஸ் ஏர் இன்ஜினியரிங்ஸ்
இல. 56/15 ஸ்ரான்லி வீதி ஒழுங்கை,
(பழைய தபால் கந்தோர் வீதி,
யாழ்ப்பாணம்.)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-3646)

வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk
Valampurii

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆவணி 16 சனிக்கிழமை (01.09.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 256

முஸ்லிம்களை வெளியேற்றிய புலிகளின் தீர்மானம் சரியானது

மறைமுகமாக ஏற்றுக்கொள்கிறார் அஸ்மின்

(யாழ்ப்பாணம்) வட பகுதியில் இருந்து முஸ்லிம் மக்களை விடுதலைப் புலிகள் வெளியேற்றியமை அன்றைய கால சூழ்நிலையில் தவிர்க்க முடியாதது என்பதை வடக்கு மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் மறைமுகமாக ஏற்றுக்கொண்டார்.

நேற்று முன்தினம் வடக்கு மாகாண சபையின் 130-வது அமர்வு நடைபெற்றது. உறுப்பினர் அஸ்மின் அங்கு உரையாற்றினார். அவரது உரையில்,

மக்கள் ஆட்சி தத்துவத்துக்கு மாறாக இருந்தாலும் விடுதலைப் புலிகள் போல் செயற்பட வேண்டும்.

மக்களுக்கு நம்பிக்கையாக – விசுவாசமாக நடக்காத சந்தர்ப்பங்களில் முக்கிய முடிவுகளை நாங்கள் எடுக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் சில தீர்மானங்களை இப்படியான சந்தர்ப்பங்களில் எடுத்திருந்தார்கள்.

மாத்தையாவுக்கு என்ன நடந்தது? கருணாவுக்கு என்ன நடந்தது? இவை மக்கள் ஆட்சிக்கு புறம்பாக இருக்கலாம். ஆனால் அப்படியான தீர்மானங்கள் சில இடங்களில் தேவைப்படுகின்றன என்று உறுப்பினர் அஸ்மின் குறிப்பிட்டிருந்தார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் அஸ்மினின் மேற்போந்த உரை 23

கழுத்திலிருந்த பட்டியை கொண்டே கொலை செய்தேன்

சந்தேக நபர் ஒப்புதல் வாக்குமூலம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இடம்பெற்ற கர்ப்பிணிப் பெண் படுகொலை தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலைய குற்றப்பிரிவு விசேட குழுவினரால் ஒருவர் கைது செய் யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கிளிநொச்சியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார். குறித்த பெண்ணை தானே கழுத்து நெரித்து கொலை செய்ததாக பொலிஸாரிடம் ஒப்புக்கொண்டுள்ளார்.

குறித்த அவரது ஒப்புதல் 23

இராணுவ மயமாக்கல் வடக்கில் அதிகரிப்பு!

ஐ.நா ஆணையாளர் கண்டனம்

(கொழும்பு)

இலங்கையின் வட பகுதியில் இராணுவ மயமாக்கல் அதிகரித்து வருவதற்கு ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் தனது கடும் கண்டனத்தை வெளியிட் 23

நல்லூர் கந்தனின் தங்க விமானத்துக்கு மகா கும்பாபிஷேகம்

நல்லூர் கந்தசுவாமி ஆலய ஸ்ரீ சண்முக சுவர்ண சபா மண்டபத்தில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட தங்க விமானத்துக்கான மகா கும்பாபிஷேகம் நாளை காலை இடம்பெறும்.

இதற்கு முன்னதாக நாளை காலை 6.15 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று முருகப் பெருமான் உள்வீதி எழுந்தருளும் வேளை இக்கும்பாபிஷேகம் இடம்பெறும்.(மு)

ஈரமண் சரிந்து வீழ்ந்ததில் இளைஞன் ஒருவர் உயிரிழப்பு

முல்லைத்தீவு உடையார்கட்டில் சம்பவம்

(பனிக்கன்குளம்)

ஆற்று மணலை ஏற்றிக்கொண்டிருந்த வேளை ஈரமண் சரிந்து வீழ்ந்ததில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் நேற்று முல்லைத்தீவு உடையார்கட்டு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்று உடையார்கட்டு பாவாடைக்கல்லு ஆற்றில் மணல் ஏற்றிக் கொண்டிருந்த குடும்பஸ்தர், உழவு இயந்திரபெட்டி மணலுடன் சரிந்து விழுந்து விபத்துக்குள்ளானதில் குறித்த குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் புதுக்குடியி 23

தமிழ் மக்கள் பேரவையின்

உத்தியோகபூர்வ பணிமனை திறப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையின் உத்தியோகபூர்வ பணிமனை நேற்று பலாலி வீதி கந்தர்மடம் பகுதியில் திறந்துவைக்கப்பட்டது.

தமிழ் மக்கள் பேரவையின் செயற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்குடன் மேற் குறித்த உத்தி 23

மாகாணசபையின் ஆட்சி முடிந்ததும்

வடமாகாணத்தில் ஆளுநரால் பௌத்த விகாரைகள் திறப்பு

தகவல்கள் கசிவு என வடக்கு முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபை பதவிக் காலம் முடிவடைந்ததும் வடக்கு ஆளுநரால் பௌத்த விகாரைகள் திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதை தான் அறிந்துள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஆளுநரின் ஆட்சிக்காலத்தில் எமக்கு பாதிப்பான நடவடிக்கைகள் நடைபெறுவதை தடுத்து 23

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
IELTS Life Skills A1 Exam-Sponsor Settlement Visa
IELTS (Academic/ General) Students Migration Visa
Diploma / Advanced Diploma in English
Spoken English With Grammar
Diploma in Sinhala Spoken in Sinhala
புதிய பிரிவுகள் ஆரம்பம்
(C-1681)
Tel: 021 222 4550 / 076 536 7818
No.15,Sirambiyady Lane, off Stanley Road Jaffna.

தமிழ்த் தலைமைத்துவத்தில் கூட்டமைப்பினர் தோல்வி!

பேரவை கூட்டத்தில் முதல்வர் விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

2009-ல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொண்ட தலைமைப் பாத்திரம் மற்றும் அதன் அணுகுமுறை போன்றவற்றில் அது தோல்வியடைந்து விட்டது என்றே கூற வேண்டியுள்ளது.

வரலாறு உங்களுக்கு வழங்க முன்வந்துள்ள தலைமைப் பாத்திரத்தை நீங்கள் ஏற்று முன்னெடுக்கத் தயாரா என தமிழ் மக்கள் பேரவையும் மக்களும் நீண்ட காலமாக என்னிடம் கேட்டு வருகின்றார்கள். 23



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

அச்சுவேலிப் பகுதியில் 2 ஏக்கர் காணி இராணுவத்தால் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

23 வருடங்களாக இராணுவத்தினர் வசமிருந்த அச்சுவேலி பகுதியை சேர்ந்த ஆறு குடும்பங்களுக்கு சொந்தமான 2 ஏக்கர் காணி நேற்று வெள்ளிக்கிழமை விடுவிக்கப்பட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டு வலிகாமம் பகுதியில் இருந்து இந்த மக்கள் இடம்பெயர்ந்த நிலையில், குறித்த காணி இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டிருந்தது.

தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி கடந்த 2014ஆம் ஆண்டு காணி உரிமையாளர்கள் அச்சுவேலி இராணுவ முகாமிற்கு முன்பாக பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில், ஏற்கெனவே ஒன்றரை ஏக்கர் காணி விடுவிக்கப்பட்ட நிலையில், எஞ்சியிருந்த 2 ஏக்கர் காணியும் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

ஜெனிவா அமர்வை மக்கள் எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என ஆராய பேரவை சார்பாக குழு அமைப்பு

(யாழ்ப்பாணம்)

ஜெனிவா அமர்வை தமிழ் மக்கள் எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக ஆராய்வதற்கும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் தமிழ் மக்கள் பேரவை சார்பாக குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் பேரவையில் 12 ஆவது கூட்டம் நேற்று இடம்பெற்றது அதன் போதே மேற்குறித்த குழு அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த குழு எதிர்வரும் ஜெனிவா அமர்வை மக்கள் எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்றும் அது தொடர்பாக விழிப்புணர்வையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தவுள்ளது.

அத்துடன் இலங்கையில் இருந்து ஜெனிவாவில் நடைபெறும் மகாநாட்டுக்கு செல்பவர்களை ஒன்றிணைத்து அவர்கள் ஓரணியாக வலியுறுத்தும் கருத்துக்கள் நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கான விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

புலம்பெயர் தமிழர்கள் ஜெனிவா அமர்வில் இலங்கை அரசை தண்டிக்கும் முயற்சியில் உள்ளார்கள். அவர்களை ஒருமுகப்படுத்துவதற்கான முயற்சியையும் எடுப்பது தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

மனித உரிமை பேரவையில் இழுத்தடிப்பு செய்த விடயங்கள் அனைத்தையும் சமாளிக்க கூடிய வகையில்முன்னோக்கி செல்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அதாவது பாதுகாப்பு சபைக்கு இப் பிரச்சினை கொண்டு செல்வது தொடர்பான விடயங்கள் ஆராயப்படவுள்ளன. புலம்பெயர்ந்தவர்களும் இங்குள்ளவர்களும் இணைந்து இந்த விடயத்தை செயற்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்குறித்த குழுவால் முன்னெடுக்கப்படவுள்ளது. இதில் பேரவை உறுப்பினர்கள் 50 வீதம் பேரவைக்கு வெளியே இருப்பவர்கள் 50 வீதமானோர் இக் குழுவில் இணைக்கப்பட்டு பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தமிழ் மக்கள் பேரவை அறிவித்துள்ளது. (ம-9)

பேரவையின் இளைஞர் அணி மாநாடு ஒக்டோபர் மாதம்

தமிழ் மக்கள் பேரவையின் இளைஞர் அணி மாநாடு வடக்கு மாகாணத்தில் எதிர் வரும் ஒக்டோபர் மாதம் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் பேரவையின் 12ஆவது கூட்டம் நேற்று இடம்பெற்றது இதன்போது மேற்குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தமிழ் மக்கள் பேரவையினர் அறிவித்துள்ளனர். மேலும் குறித்த கூட்டத்தில் இளைஞர்கள் மத்தியில் தமிழ் தேசியம் தொடர்பான தெளிவான அறிவை புகட்ட வேண்டும் எனவும் அவர்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. (ம-9)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

நிறஞ்சன் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, உடுப்பிட்டி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும். நிறஞ்சன் நகைமாடம் தொடர்பு: சந்தை வீதி, உடுப்பிட்டி. 0763836129 (5527)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

மதுரம் கல்வி நிறுவனம்
Mathuram Institute
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான விசேட சிங்கள, ஆங்கில வகுப்புக்கள்
3 மாதங்களில் சிங்களம், ஆங்கிலம் எழுத, வாசிக்க, பேச அடிப்படையில் இருந்து பிரபல ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்
ஆரம்பம்: 01.09.2018 சனி மாலை 4.00
அனுமதிகள் வழங்கப்படுகின்றன
வாரத்தில் 3 நாட்கள் சிங்களம், 3 நாட்கள் ஆங்கிலம்
விரும்பிய பாடத்தினை மாணவர் தெரிவு செய்யலாம்
மேலதிக விபரங்களுக்கு:0779122918 (சி-3690)

J/194 பிரிவு தாவடி விவசாய சம்மேளனத்தில் கட்டாக்காலி மாடும் கன்றும் பிடிக்கப்பட்டு கட்டி வைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தலைவருடன் தொடர்பு கொள்ளவும்.
T.P.No:-0771642519 (5535)

விற்பனைக்கு
யாழ்.றக்கா ஒழுங்கையில் 3 பரப்பு காணியுடன் மேல்மாடி வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-கணேஸ்
0764734160 (5532)

வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை (5527)
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

கண்ணீர் அஞ்சலி

திருமதி சந்திரசேகரம் இரத்தினம்

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியர் திருமதி சி.புவிதா அவர்களின் அன்பு மாமியார் திருமதி சந்திரசேகரம் இரத்தினம் அவர்களது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-3694)

ஆசிரிய சகோதரத்துவம்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

31ஆம் நாள் நினைவஞ்சலி

சுதாகர் ஆகீவ்

தாயின் மடியில்
08.11.2012
கர்த்தரின் மடியில்
02.08.2018

ஆகீவ்! உன்னை இழந்து இதயம் நொந்து அழுகின்றோம்
எம் ஆசைகள் நிராசையானது
யாதுமில்லா வெறுமையை நாம் உணர்கின்றோம்

-குடும்பத்தினர்

(5530)

சேவைநலன் பாராட்டு

திரு.முருகேசு சிவநாதன்

(நூலகக் கவனிப்பாளர் விசேட தரம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் நூலகக் கவனிப்பாளராக பணியாற்றி 01.09.2018 இன்றுடன் பணியிலிருந்து ஓய்வுபெற்றுச்செல்லும் திரு.முருகேசு சிவநாதன் அவர்களின் சேவையினை பாராட்டி மகிழ்கின்றோம்.

நூலகத் துறையில் இருபதாண்டுகள்
சாலவே நற்பணி புரிந்தவரே!
அன்புடன் அனைவரோடும் பழகி–உம்
ஆளுமையால் எமைக் கவர்ந்தவரே!
ஒய்வுகாலம் உமக்கு உவப்பானதாகட்டும்
ஒப்பில்லா மகிழ்வோடு ஒளிரட்டும்
உன் வாழ்வெனை
சந்தோசமாய் வாழ்த்துகின்றோம்
சகபணியாளர் நாம்.

(5534)

-நூலகக் கவனிப்பாளர் நண்பர்கள்

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் கந்தையா நடராசா

தோற்றம்:-1936.11.15
மறைவு:-2018.08.02



சரசாலை தந்த சாந்தமிகு முத்தொன்று
சரிந்தது கண்டு கண்ணீருடன் நாங்கள்
சேராத செல்வம் எல்லாம் சேர்த்துவிட்டு
சேர்ந்திருக்க மறந்து சென்றதெங்கே நீங்கள்
ஆறாத்துயரில் அழுது புலம்புகின்றோம்
அருகில் உம் நினைவுகளுடன்
என்றும் நாங்கள் ஆத்ம சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம் இந்நாளில்

அன்னாரின் வீட்டுக்கிரியைகள் 2018.09.01 இன்று சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்கள் அனைவரும் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

சரசாலை வடக்கு, சாவகச்சேரி. (சி-3693) -குடும்பத்தினர்

போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராக உலக மக்கள் அனைவரும் அணிதிரள்க

பிம்ஸ்டெக் மாநாட்டில் ஜனாதிபதி மைத்திரி வலியுறுத்து

(காத்மண்டு)

சட்டவிரோத போதைப் பொருள் கடத்தலுக்கு எதிராக உலக மக்களும் அனைத்து அரசாங்கங்களும் ஒன்றிணைந்து ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தியுள்ளார்.

சட்டவிரோத போதைப் பொருள் கடத்தலானது உலக நாடுகள் எதிர்நோக்கியுள்ள பாரிய சவாலாக அமைந்துள்ளதாகவும் அதற்கான தீர்வை பெற்றுக்கொள்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நேபாளத்தின் காத்மண்டு நகரில் இடம்பெற்றுவரும் வங்காள விரிகுடா வலய நாடுகளின் பல்துறை தொழில்நுட்ப, பொருளாதார ஒன்றியம் எனும் பிம்ஸ்டெக் (BIMS TEC) அமைப்பின் நான்காவது அரச தலைவர் களின் சந்திப்பில் நேற்று முன்தினம் பிற்பகல் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காலநிலை மாற்றங்களால் வலய பொருளாதார திட்டங்கள் சவாலை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்த ஜனாதிபதி அத்துடன் அதிகரித்து வருகின்ற வறுமை காரணமாக பாரிய பொருளாதார சிக்கல்கள் தோன்றியுள்ளதாகவும், அச் சவால்களை தீர்ப்பதற்கு வலய நாடுகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார்.

வங்காளவிரிகுடாவை அண்மித்த தெற்காசிய மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுக்கிடையில் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை ஏற்படுத்தும் நோக்கில் செயற்பட்டுவரும் பிம்ஸ்டெக் மாநாட்டின், நான்காவது அரச தலைவர்கள் சந்திப்பு "சமாதானம், சுபீட்சம் மற்றும் பேண்தகு தன்மை வாய்ந்த வங்காள விரிகுடாவை நோக்கி" என்ற கருப்பொருளின் கீழ் நேற்று தலைநகர் காத்மண்டுவில் நேபாள பிரதமரின் தலைமையில் அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது.

பிம்ஸ்டெக் மாநாட்டில் பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மியன்மார், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய தெற்காசிய மற்றும் தென்கிழக்காசிய நாடுகளின் ஜனாதிபதிகள், பிரதமர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்துகொண்டுள்ளனர்.

மாநாட்டில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி வங்காள விரிகுடாவை அண்மித்த நாடுகளின் பங்களிப்பால் அமைக்கப்பட்டுள்ள பிம்ஸ்டெக் அமைப்பு இலங்கைக்கு மிகவும் முக்கியமானதென்று தெரிவித்தார்.

பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளுக்கிடையே காணப்படும் பொதுவான வரலாறு மற்றும் கலாசார உரிமைகள், அந்நாடுகளுக்கிடையிலான பல்தரப்பு புரிந்துணர்வு மற்றும் பரஸ்பர கௌரவத்தை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ள பரஸ்பர நம்பிக்கையினாலும் புரிந்துணர்வினாலும் பிம்ஸ்டெக் இலட்சியங்களை அடைவது எளிதாகும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

பிம்ஸ்டெக் மாநாட்டின் கொள்கையின் படி பசுமைப் பொருளாதாரத்தை நோக்கி பயணிக்கும் போது ஊழல், இலஞ்சம், சட்டவிரோத செயற்பாடுகள் மற்றும் அரச சொத்துக்களை முறைகேடாக பயன்படுத்துவதை எதிர்த்து செயற்படுவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த ஜனாதிபதி கடந்த மூன்றரை வருடங்களாக இலங்கையில் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் உறுதிப்படுத்துவதுடன், ஊழல் மற்றும் மோசடிகளுக்கு எதிராக விசேட நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கட்சி பேதமின்றி ஊழல் புரிந்தோருக்கு எதிராக தான் நடவடிக்கை எடுத்ததாகவும் சட்டத்தின் ஆளுமையை வலுவூட்டி, நீதிமன்றத்தின் சுயாதீன தன்மையை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் தெரிவித்த ஜனாதிபதி பிம்ஸ்டெக் மாநாட்டின் மூலம் எதிர்பார்க்கும் இலட்சியங்களை அடைந்துகொள்வதற்கு மேற்குறிப்பிட்ட அனைத்து துறைகள் மீதும் கவனம் செலுத்துவது அவசியம் என்றும் தெரிவித்தார்.

பன்முக இலட்சியங்களையுடைய பிம்ஸ்டெக் அமைப்பு எத்துறைக்குள்ளும் வரையறுக்கப்பட தேவையில்லை என்று குறிப்பிட்ட ஜனாதிபதி பிம்ஸ்டெக் அமைப்பின் 20 வருட அனுபவத்தை உபயோகித்து கலாசார சின்னங்களின் பெருமையை பாதுகாத்து முன்னோக்கி செல்ல வேண்டும் என்றும் தெரிவித்தார். (இ-7)

ஆயுத குற்றச்சாட்டு பின்னணியில் இனவாத சக்திகள்-ஹிஸ்புல்லாஹ்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளிடம் இருந்த ஆயுதங்களை கொள்வனவு செய்து முஸ்லிம் இளைஞர்களுக்கு வழங்கியதாக தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை முற்றாக நிராகரித்த நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் எம். எல்.ஏ. எம். ஹிஸ்புல்லாஹ், இந்த விடயம் தொடர்பில் முறையான தீவிர விசாரணையொன்று மேற்கொள்ளுமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை, இக் குற்றச்சாட்டின் பின்னணியில் தேச விரோத, இனவாத சக்திகள் செயற்படுவதாகவும் இதனால் தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜெயசூரிய, சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர ஆகியோருக்கு இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் நேற்று முன்தினம் அனுப்பி வைத்த விசேட கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

'புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சி 2018.08.18 ஆம் திகதி கொழும்பில் நடத்தியிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அதன் தலைவர் இன்பராசா கந்தசாமி முன்வைத்த கருத்துக்கள் எவ்வித ஆதாரமும் அற்ற, பாரதூரமான போலிக் குற்றச்சாட்டாகும்.

விடுதலைப் புலிகளிடம் இருந்த 5 ஆயிரத்துக்கும் அதிகமான ஆயுதங்களை நானும் அமைச்சர் றிசாத் பதியுதீனும் பெற்று அதனை கிழக்கு மாகாணத்திலுள்ள மூதூர், கிண்ணியா, காத்தான்குடி உள்ளிட்ட முஸ்லிம் பிரதேசங்களில் உள்ள இளைஞர்களுக்கு வழங்கியதாக தெரிவித்திருந்தார்.

இந்த குற்றச்சாட்டை நான் முற்றாக நிராகரிப்பதோடு, ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் இவ்வாறான போலிக் குற்றச்சாட்டொன்றை முன்வைத்தமை தொடர்பில் தீவிர விசாரணை நடத்தப்பட வேண்டும். அத்துடன், அவ்வாறு ஆயுதங்கள் இருக்குமாயின் அது எங்குள்ளது? விற்பனை செய்யப்பட்டுள்ள தாயின் அது யாருக்கு? எப்போது? எவ்வாறு? விற்பனை செய்யப்பட்டுள்ளன போன்ற தகவல்களை வெளிப்படுத்த வேண்டும்.

இவ்வாறான போலிக் குற்றச்சாட்டுக்கள் காரணமாக சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் மத்தியில் எழுந்துள்ள சந்தேகங்கள் எனது கௌரவத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன், எனது பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

இக்குற்றச்சாட்டின் பின்னணியில் தேச விரோத, இனவாத சக்திகள் செயற்படலாம். நாட்டின் அமைதியை சீர்குலைத்து சாதாரண மக்களை குழப்பி நாட்டில் மீண்டுமொரு யுத்த சூழலை ஏற்படுத்துவதே குறித்த சக்திகளின் எதிர்பார்ப்பும் முயற்சியுமாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

120 கோடி ரூபா பெறுமதியான

20 கிலோ தங்கத்துடன் இந்தியப் பிரஜை கைது

(கொழும்பு)

20 கிலோ கிராம் நிறையுடைய தங்கத்துடன் இந்தியப் பிரஜை ஒருவரை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து குற்றப் புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் 20 கிலோ கிராம் நிறையுடைய தங்கக் கட்டிகளை மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்து கொண்டு வர முயற்சித்த போதே கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட தங்கங்களின் பெறுமதியானது சுமார் 120 கோடி ரூபாவாகும் என தெரிவித்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

இலங்கை-சீனா உறவுக்கு முக்கியத்துவம்

மைத்திரிக்கு ஜின்பிங் பிறந்தநாள் வாழ்த்து

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் பிறந்த நாள் வாழ்த்துச் செய்தியை அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாளை மறுதினம் 3ஆம் திகதி 67 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடவுள்ளார்.

இந் நிலையில், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் கொடுத்தனுப்பிய வாழ்த்துக் கடிதத்தை, ஜனாதிபதி மைத்திரியிடம் கடந்த செவ்வாய்க்கிழமை சீனத் தூதுவர் செங் ஷியுவான் நேரில் சென்று கையளித்துள்ளார்.

அதில், எமது இருதரப்பு உறவுகளின் அபிவிருத்திக்கு நான் மிகுந்த முக்கியத்துவத்தை வழங்கியிருக்கிறேன், சீன-இலங்கை மூலோபாய ஒத்துழைப்பு கூட்டை மேலும் புதிய உயரத்திற்கு கொண்டு செல்வதற்கு உங்களுடன் இணைந்து செயற்பட விரும்புகிறேன் என்று சீன ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

சீன ஜனாதிபதியின் வாழ்த்துக் கடிதத்துக்கு நன்றி தெரிவித்து ஜனாதிபதி மைத்திரி அன்றே பதில் கடிதம் ஒன்றையும் கொடுத்தனுப்பியுள்ளார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான அபிவிருத்தி ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கு உங்களுடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறேன் என்று ஜனாதிபதி மைத்திரி தெரிவித்துள்ளார். (இ-7)

கழுத்து நெரித்து நித்தியகலா படுகொலை

இரு தினங்களுக்குள் குற்றவாளியை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை

மாங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

இதுவரை எமக்கு கிடைக்கப்பெற்றுள்ள சாதகமான தகவல்களின் அடிப்படையில் இரண்டு நாட்களுக்குள் படுகொலையுடன் தொடர்புபட்ட குற்றவாளிகளைக் கைது செய்ய தேவையான சகல நடவடிக்கையையும் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

விசாரணைகள் நடைபெற்று வருவதாக மாங்குளம் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி ஜானக புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட நிலையில் கிளிநொச்சி பன்னங்கண்டி பகுதியில் நீர்ப்பாசன வாய்க்காலில் சடலமாக மீட்கப்பட்ட முல்லைத்தீவு முறிகண்டி வசந்தபுரம் பகுதியை சேர்ந்த கறுப்பையா நித்திய கலா என்ற பெண்ணின் படுகொலைக்கு நீதிகோரி முறிகண்டி மற்றும் இந்துபுரம் கிராமமட்ட பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 10 மணியளவில் முறிகண்டிப்பகுதியில் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. இங்கு கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் பகுதியை சேர்ந்த குறித்த பெண் இங்குள்ள ஆடைத்தொழிற்சாலையில் பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமையாற்றிய சம்பவதினத்தன்று அங்கிருந்து சென்ற நிலையில் கிளிநொச்சி பொலிஸ் பிரிவில் உள்ள பகுதியொன்றில் சடலமாக மீட்கப்பட்டார். இதனை தொடர்ந்து நேற்றுமுன்தினம்மாலை தான் உடற்கூற்று அறிக்கை கிடைக்கப்பெற்றது. இதனடிப்படையில்தான் இவர் கொலை செய்யப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் எமது மாங்குளம் பொலிஸ் நிலையம் கிளிநொச்சி பொலிஸாருக்கு தேவையான சகல தகவல்களையும் வழங்கி வருகிறோம். இதுவரை எமக்கு பல தகவல்கள் கிடைத்துள்ளன. தொடர்ச்சியாக விசாரணைகள் இடம்பெற்று வருவதனால் அவற்றை இங்கு கூறமுடியவில்லை. அதேவேளை இதுவரை எமக்கு கிடைக்கப்பெற்றுள்ள சாதகமான தகவல்களின் அடிப்படையில் இரண்டு நாட்களுக்குள் குற்றவாளிகளை கைது செய்ய தேவையான சகல நடவடிக்கையையும் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

விசேடமாக பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாக பெற்றோர் மற்றும் வயதானவர்கள் மிகுந்த பொறுப்புடன் செயற்படுமாறும் அவர்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உண்டு எனவும் தெரிவிக்கிறேன் .

அத்தோடு இந்த மக்களால் தொடர்ச்சியாக கோரப்பட்டு வருகின்ற குறித்த பகுதிக்கு பொலிஸ் நிலையம் அமைப்பது தொடர்பான கோரிக்கையை எனது உயரதிகாரிகளின் கவனத்துக்குகொண்டு செல்வதாகவும் தெரிவித்தார்.

இந்த பகுதியின் குற்றச் செயல்களை கட்டுப்படுத்த பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பு தேவை. வழங்கி உதவுங்கள். அதன்மூலம் எமது சேவையை மென்மேலும் வழங்க முடியும் என வும் தெரிவித்தார். (2-281)

அலியின் 'அனல்பறந்த' பந்துவீச்சு மத்தியில் 'தூண்' புஜாரா துணிச்சல் சதம்

அலியின் அனல் பறந்த பந்துவீச்சின் மத்தியில், தூணாக நின்ற புஜாரா துணிச்சலாக சதம் கடந்து கைகொடுக்க இந்திய அணி முன்னிலை பெற்றது.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதலிரண்டு போட்டிகள் நிறைவில் இந்திய அணி 1-2 என பின்தங்கி உள்ளது. நான்காவது டெஸ்ட் சவுத்தாம்ப்டனில் நடக்கிறது.

இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 246 ஓட்டங்கள் எடுத்தது. தொடர்ந்து தமது முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்தியா முதல் நாள் ஆட்ட நேர நிறைவில், முதல் இன்னிங்சில் விக்கெட் இழப்பின்றி 19 ஓட்டங்களை எடுத்திருந்தது.

தவான் (3), லோகேஷ் ராகுல் (11) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஏமாற்றிய ராகுல்

நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் நடந்தது. பிரோட் 'வேகத்தில்' ராகுல் (19), தவான் (23) சிக்கினர். புஜாரா, அணித் தலைவர் ஹோலி இணைந்து பொறுப்புடன் விளையாடினர். இரண்டாவது விக்கெட்டுக்கு 92 ஓட்டங்கள் சேர்த்தபோது, கர்ரான் பந்தில் ஹோலி (46) ஆட்டமிழந்தார்.

புஜாராஅபாரம்

புஜாரா நிதானமாக விளையாடினார். ஸ்ரோக்ஸ் பந்தில் ரகானேவுக்கு எல்.பி. டபிள்யு., முறையில் அவுட் கொடுக்கப்பட்டது. ரகானே 'ரிவியூ' கேட்க, ஸ்ரோக்ஸ் 'கிரீசை' தாண்டி கால் வைத்தது போல தெரிந்தது. ஆனால், மூன்றாவது நடுவர் அவுட்டை உறுதி செய்ய, ரகானே (11) திரும்பினார். மொயீன் அலி 'சுழலில்' ரிஷாப் (0), பாண்ட்யா (4), அஷ்வின் (1) உள்ளிட்டோர் சிக்கினர்.

அபாரமாக ஆடிய புஜாரா டெஸ்ட் அரங்கில் 15ஆவது சதம் கடந்தார். பும்ரா (6) கிளம்ப, இந்திய அணி முதல் இன்னிங்சில் 273 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து. 27 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது. புஜாரா (132) ஆட்டமிழக்காமல் இருந்தார். பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பில் அதிகபட்சமாக மொயீன் அலி 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

தொடர்ந்து இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த இங்கிலாந்து அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில், விக்கெட் இழப்பின்றி 6 ஓட்டங்கள் எடுத்து 21 ஓட்ட்ங்களால் பின்தங்கி இருந்தது. குக் (2), ஜென்னிங்ஸ் (4) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

சதமடித்த புஜாரா

இந்திய அணியை தனது பந்துவீச்சால் சுட்டெரித்த மொயின் அலி

6000

நேற்றைய ஆட்டத்தில் அணித் தலைவர் ஹோலி 9 ஓட்டங்களை எடுத்தபோது, டெஸ்ட் அரங்கில் 6 ஆயிரம் ஓட்டங்களை எட்டினார். இதன்மூலம், இந்த இலக்கை குறைந்த இன்னிங்சில் (119) எட்டிய இந்திய வீரர்கள் பட்டியலில் சச்சினை (120) முந்தி இரண்டாவது இடம் பிடித்தார். முதலிடத்தை கவாஸ்கர் (117) வகிக்கிறார்.

யு.எஸ்., ஓபன் 3ம் சுற்றில் பெட்ரர்

யு.எஸ்., ஓபன் டென்னிஸ் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்றுக்கு சுவிட்சர்லாந்தின் பெடரர், செர்பியாவின் ஜோகோவிச், ஜேர்மனியின் கெர்பர், ரஷ்யாவின் ஷரபோவா உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்கள் முன்னேறினர்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடப்பு ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடரான யு.எஸ்., ஓபன் நடக்கிறது.

இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு 2வது சுற்றில் உலகின் 'நம்பர் 2' சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், பிரான்ஸின் பெனாய்ட் பேயர் மோதினர். அபாரமாக ஆடிய பெடரர் 7-5, 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு 2ஆவது சுற்றுப் போட்டியில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், 6-1, 6-3, 6-7, 6-2 என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் டெனிஸ் சான்ட் கிரனை தோற்கடித்தார்.

மற்றைய 2ஆவது சுற்றுப் போட்டிகளில் ஜப்பானின் கெய் நிஷிகோரி, ஜேர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வெரேவ், குரோஷியாவின் மரின் சிலிச் உள்ளிட்டோர் வெற்றி பெற்றனர்.

ஷரபோவா அசத்தல்

பெண்கள் ஒற்றையர் பிரிவு 2ஆவது சுற்றில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா, ருமேனியாவின் சொரானா சிர்ஸ்டி மோதினர்.

அசத்தலாக ஆடிய ஷரபோவா 6-2, 7-5 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, 3ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

மற்றொரு போட்டியில் ஜேர்மனியின் கெர்பர் 6-2, 5-7, 6-4 என, சுவீடனின் ஜோஹன்னா லார்சனை தோற்கடித்தார்.

மற்றைய 2ஆவது சுற்றுப் போட்டிகளில் செக்குடியரசின் பெட்ரா கிவிட்டோவா, அமெரிக்காவின் மடிசன் கீஸ், பிரான்ஸின் கரோலின் கார்சியா உள்ளிட்டோர் வெற்றி பெற்றனர்.

டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி 4-6, 2-6 என, உக்ரைனின் லெசியா டிசுரன்கோவிடம் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார்.

திவிஜ் சரண் ஜோடி வெற்றி

ஆண்கள் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் திவிஜ் சரண், நியூசிலாந்தின் ஆர்டம் சிடாக் ஜோடி 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்கில் அமெரிக்காவின் மார்டின் ரெட்லிக்கி, ஈவன் சூ ஜோடியை வீழ்த்தியது.

பயஸ் ஜோடி ஏமாற்றம்

ஆண்கள் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், அமெரிக்காவின் ஜேம்ஸ் செரிடானி ஜோடி 3-6, 4-6 என்ற நேர் செட் கணக்கில் பிரான்சின் ஜெரிமி சார்டி, பேப்ரைஸ் மார்டின் ஜோடியிடம் தோல்வியடைந்து ஏமாற்றியது.

மற்றொரு போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன், உஸ்பெகிஸ்தானின் டெனிஸ் இஸ்டோமின் ஜோடி 3-6, 2-6 என்ற நேர் செட் கணக்கில் கொலம்பியாவின் ஜுவான் காபல், ரொபர்ட் பராக் ஜோடியிடம் வீழ்ந்தது.



டென்மார்க்கின் வோஸ்னியாக்கியை வீழ்த்திய உற்சாகத்தில் உக்ரேனின் லெசியா.

'கூட்டமைப்பு வேழக்கை அரசியல்'

காணாமல் போனோருக்கு நடந்தது என்ன? உண்மை வெளிக்கொண்டு வரப்பட வேண்டும்

டக்ளஸ் எம்.பி.வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

காணாமல் போனோர் தொடர்பான முறைப்பாடுகள் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெறுகின்ற விசாரணைப் பொறிமுறை ஒன்றின் ஊடாக விசாரிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மை வெளிக்கொண்டுவரப்பட வேண்டும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

காணாமல் போனோர் தினம் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது அரசாங்கத்தால் அமைக்கப்பட்டுள்ள காணாமல் போனோர் அலுவலகத்தின் செயற்பாடுகள் மீதான நம்பிக்கையை இழந்தவர்களாகவே தமிழ் மக்கள் இருக்கின்றனர். எனவே அமைக்கப்பட்டுள்ள காணாமல் போனோர் அலுவலகத்தினரின் செயற்பாடுகள் உறவுகளைத் தொலைத்து நீதி கேட்டுப் போராடிவரும் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ளும் வகையில் வலுவாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகள் 1983 ஆம் ஆண்டுகளிலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும். யுத்தகாலத்திலும் சமாதான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றதாகக் கூறப்பட்ட காலப் பகுதியிலும் பலர் காணாமல் போயுள்ளார்கள். அவர்கள் பற்றிய முழுமையான விசாரணைகளும் அவசியமாகும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள்ளவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய பரிகாரங்கள் காணப்படவேண்டும் என்று வலியுறுத்தி பல நாட்களாக வீதிகளில் தங்கியிருந்து அவர்களின் உறவினர்கள் போராடி வருகின்றார்கள். யுத்தம் முடிவுக்குக்கொண்டு வரப்பட்டு ஒன்பது வருடங்கள் கடந்துவிட்ட போதும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக நீதி கேட்டுப் போராடும் தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டவர்களை மீட்டுத் தருவோம் என்றும் சிறைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளை மீட்டுத் தருவோம் என்றும் படையினர் வசமுள்ள மக்களுக்குச் சொந்தமான காணி, நிலங்களை முற்று முழுதாக மீட்டுத் தருவோம் என்றும் வடக்கு-கிழக்கில் 'நிலை கொண்டுள்ள படையினரை வெளியேற்றுவோம் என்றும் தன்னாட்சி அதிகாரம் கொண்ட அரசியல் தீர்வைப் பெற்றுத் தருவோம் என்றும் வாக்குறுதி வழங்கிய கூட்டமைப்பினர் இப்போது வாக்களித்த தமிழ் மக்களை மறந்தவர்களாக அரசின் ஆசியுடன் எதிர்க்கட்சியாக இணக்க அரசியல் நடத்திக்கொண்டு இருக்கின்றார்கள்.

இவ்வாறான நிலையில் மண் அபகரிப்பையும் வளங்கள் அபகரிப்பையும் எதிர்த்து மக்கள் நடத்தும் தன்னெழுச்சியான போராட்டங்களில் வலிந்து கலந்து கொள்ளும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேடைகளில் அரசாங்கத்தை எதிர்ப்பது போலவும் அரசுக்கு எதிராக எச்சரிக்கை விடுப்பதுபோலவும் உரையாற்றுவதைப் பார்த்தால் வேடிக்கையாக இருக்கின்றது.

தெற்கில் அரசின் ஆசிபெற்ற எதிர்க்கட்சியாக இணக்க அரசியல் உறவு கொண்டாடும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர், வடக்கில் அரசை எதிர்ப்பதுபோல் நாடகமாடி தமிழ் மக்கள் தன்னெழுச்சியாக நடத்தும் உரிமைப் போராட்டங்களை வலுவிழக்கச் செய்வதை மக்கள் கண்டிக்க வேண்டும்.

இன்றைய அரசியல் சூழலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியாளர்களின் பாதுகாப்புக் கவசமாகவே செயற்படுகின்றது. இந்த நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க கூட்டமைப்பு உளப்பூர்வமாக முயற்சி செய்தால் அதை நிறைவேற்றும் கட்டாயத்தில் ஆட்சியாளர்கள் இருக்கின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

மரண அறிவித்தல்

அமரர் கணேசு திலகவதி

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் தற்பொழுது அரசடி லேன் சுதுமலை வடக்கை (ரான்ஸ் போமர் அருகில்) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணேசு திலகவதி அவர்கள் 29.08.2018 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் லக்ஷ்மி தம்பதியரின்மகளும், கணேசு அவர்களின் அன்பு மனைவியும், புவனேஸ்வரி, இரத்தினம், காலஞ்சென்றவர்களான சிங்கராஜா, ஜெகநாதன் (இராசு), ருக்குமணி, வேவி, யோகா, கலா (கனடா), சந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரியும், குமார் (சவுதி), கங்கா, கவி, செல்வி (ஜேர்மன்), பிரபா (ஜேர்மன்), புனிதா (ஜேர்மன்), பவிதா (ஜேர்மன்), துசி (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும், சாந்தினி, விஜயகுமார், சுந்தரலிங்கம் , Wolf gang (கியூமெடிக்கா ஸ்தாபகர்- ஜேர்மனி), குமார் (ஜேர்மனி), ஜோன்சன் (ஜேர்மனி), ரெடன்ஸ் (ஜேர்மனி), கிருபா (கனடா) ஆகியோரின் மாமியாரும்.

எப்சிபா, எபூசி, ரதீபன் - நிவேதா, காயா -துஷ்யந்தன், லக்ஷன், லக்கி, ரெபேக்கா, பிறிசில்லா, பெஞ்சமீன், அபிகாயில், காலேப், யோசுவா, சியான், சோபிகா, அஸ்வின், மேசாக், அபிஷேக் ஆகியோரின் பேர்த்தியும், கிஷான், கர்னிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதி அடக்க ஆராதனை 02.09.2018 நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பின் தாவடி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(5528)

அரசடி லேன்,
சுதுமலை வடக்கு.
(ரான்ஸ் போமர் அருகில்)

தகவல்:- குடும்பத்தினர்
077 635 1801 , 077 661 2018

BRITISH COLLEGE OF ENGLISH

IELTS Academic + General
IELTS Life Skills

Cambridge English Courses
- Cambridge Preliminary Test (PET) (B1)
- Cambridge First Certificate in English (FCE) (B2)
- Cambridge Advanced English (CAE) (C1)

University of Cambridge Certificate வாழ்நாள் முழுவதும் பயன்படுத்தக்கூடியவை. F.C.E - CAE இல் சித்தியடைந்திருந்தால் IELTS ற்குப் பதிலாக அவற்றை உலகத்தின் பல பல்கலைக்கழகங்களுக்கு பயன்படுத்தலாம்.

2004 ஆம் ஆண்டு எமது கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து இதுவரை சுமார் 5000 மானவர்கள் IELTS இல் சித்தியடைந்து UK, Australia, Canada, USA போன்ற நாடுகளில் நிரந்தரமாக வசித்து வருகின்றனர்.

A1, பரீட்சையில் சுமார் 750 இற்கு மேல் City & Guilds மற்றும் IELTS - Life Skills பரீட்சையில் நமது நாட்டு இல்லத்தரிசிகள் சித்தியடைந்து UK ல் வசித்து வருகின்றனர்.

வகுப்புக்கள் நடைபெறும் இடம்

JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPARTMENT
NO.464, Hospital Road, Jaffna.
021 222 0384
077 880 3887

இராசி பலன்

கிரகநிலை
சந்திராஷ்டமம்
சித்திரை, சுவாதி
இரவு 1.15 மணிக்கு
இட-சந்

சந் | ராகு | கேது, செவ் | சனி | குரு, சுக் | சூரி, புத

01.09.2018
ஆவணி 16, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
சஷ்டி முன்னிரவு 7.06 மணிவரை
பரணி முன்னிரவு 7.24 மணிவரை
சுபநேரம் 3.05-4.35 மணிவரை
இராகுகாலம் 9.05-10.35 மணிவரை

வளவன்

மீனம்

விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பொதுநல ஈடுபாட்டில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

மேடம்

சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், குடும்பத்தினர் உங்களுக்கு பக்கபலமாக இருப்பர், ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

இடபம்

பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச்சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள்.

மிதுனம்

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

கும்பம்

பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக்கொள்ளுவீர்கள், உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம்.

மகரம்

பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைச் சொல்லலாம், பயணங்களால் பலனுண்டு.

தனுசு

மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.

விருச்சிகம்

பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு.

துலாம்

பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

கன்னி

எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம்.

கடகம்

எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், தலைமைப் பொறுப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், நண்பர்கள் மத்தியில் பாராட்டும் புகழும் கூடும் நாள்.

சிம்மம்

சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

மூன்றாம் தவணை பாடசாலை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த.(உ/த) பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறுவதன் காரணமாக மூன்றாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் 06.09.2018 வியாழக்கிழமை ஆரம்பமாகும் என யாழ்.மத்திய கல்லூரி அதிபர் சி.க.எழில்வேந்தன் அறிவித்துள்ளார். (இ)

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் பாடநெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் மும்மொழிக் கற்கை நிலையத்தில் 2018 இல் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு இரண்டாம் மொழி சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் பாடநெறிகள் ஒக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை மும்மொழிக் கற்கை நிலையத்திலும், கல்வி அமைச்சின் www.edumin.np.gov.lk என்ற இணையத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

இவ்விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து 28.09.2018 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்க கூடியதாக நேரிலோ, தபால் மூலமோ பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த கற்கை நிலையம் தற்போது அமைந்திருக்கும் முகவரி யாழ். கலட்டி மெதடிஸ் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, இராம நாதன் வீதி, கலட்டி, யாழ்ப் பாணம். மேலதிக விபரங்களுக்கு 021 223 1344 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (இ)

கணனி மென்பொருள் உருவாக்கும் தொழில்நுட்ப பயிற்சிநெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்கில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் விதாதா வள நிலையத்தினால் Java programming மூலம் கணனி மென்பொருள் உருவாக்கும் இலவச தொழில்நுட்ப பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியினை பின்பற்றுவதற்கு விருப்பமுள்ளவர்கள் பிரதேச செயலக வரவேற்புப் பீடத்தில் 6/9/2018 முன்னதாக பதிவுகளை மேற்கொள்ள முடியுமென பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ-7)

முதியோர் தின விழாவும் முதியோர் கௌரவிப்பும்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் மாகியப்பிட்டி முதியோர் சங்கத்தின் முதியோர் தின விழாவும் முதியோர் கௌரவிப்பு நிகழ்வும் நாளை பிற்பகல் 2.30 மணியளவில் மாகியப்பிட்டி சந்தி அருகாமையிலுள்ள முதியோர் இல்லத்தில் ஓய்வு பெற்ற அதிபர் லயன் சின்னத்தம்பி நாகையாவின் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் வி.சிவராஜா, வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக ஜே/144 மாகியப்பிட்டி கிராம உத்தியோகத்தர் மோகணவாணி இராஜயோகம், வலி.தென்மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் அன்ரன் ஜோன்சன், கிருபா லேணர்ஸ் உரிமையாளர் அ.கிருபாகரன், வலி.தென்மேற்கு முதியோர் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.எச்.ஜே.ஜீவரட்ணம், அளவெட்டி மேற்கு றோ.க.த.க.பாடசாலை அதிபர் வி.துசாங்கர் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

நாவாந்துறை சென்.மேரிஸ் சனசமூக நிலைய அனுசரணையில் கவிஞர் நாவாயூரான் வென்சிலாஸ் அனுராவின் "நாவாய் மண்ணின் பெருமைமிகு பராம்பரியமும் வல்லோர்களும்", "கிறிஸ்தோ மரியாம்பிள்ளை புலவரின் வாழ்வும் படைப்புகளும்" ஆகிய இரு நூல்கள் வெளியீட்டு விழா நாவாந்துறை சென்.மேரிஸ் முத்தமிழ் அரங்கில் கவிஞர் நாவாயூரான் வென்சிலாஸ் அனுரா தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ். மறைமாவட்ட ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கலந்து கொண்டார். நூல்கள் அறிமுக உரையை தமிழ் நேசன் அடிகளார் வழங்கினார். இதில் நூலாசிரியருக்கு நாவியன் ஆய்வியல் வித்தகர் மற்றும் கவி ஞாயிறு போன்ற விருதுகள் வழங்கப்பட்டன.

கனரக வாகனம் மின்கம்பத்தில் மோதி விபத்து

சாரதி மயிரிழையில் உயிர்தப்பினார்

(யாழ்ப்பாணம்)

பூநகரியிலிருந்து மண்கும்பான் நோக்கிச் சென்ற கனரக வாகனம் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியிலிருந்த மின்கம்பத்துடன் மோதுண்டு பாரிய விபத்துக்குள்ளானது.

மண்கும்பான் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் நேற்று முன்தினம் இரவு 11.30 மணிக்கு இடம்பெற்ற இந்த விபத்தில் மின்கம்பம் முற்று முழுதாக சேதமடைந்ததுடன் வாகனம் தலைகீழாக கவிழ்ந்து விபத்துக்குள்ளாகனது.

சாரதி சிறு காயங்களுடன் மயிரிழையில் உயிர்தப்பினார். (இ-9)

மோ.சைக்கிள் விபத்தில் சிக்கிய ஆறு வயதுச் சிறுவன் காயம்

(சாவகச்சேரி)

மந்துவில் பகுதியில் வீதியைக் கடக்க முற்பட்ட 6 வயது சிறுவனை மோட்டார் சைக்கிள் மோதியதில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டுள்ளான்.

கடந்த புதன்கிழமை மாலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் மந்துவில் மேற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த 6 வயது சி.அதர்சன் என்ற சிறுவனே காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறான். (இ-30)

குளவி கொட்டி இருவர் பாதிப்பு

(சாவகச்சேரி)

கச்சாய் அம்மன் ஆலயப் பகுதியில் குளவிக் கொட்டுக்கு இலக்கான நபர் ஒருவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

பாலாவி வீதி கொடிகாமத்தைச் சேர்ந்த 58 வயது சி.கனகசபை என்பவரே இவ்வாறு சிகிச்சை பெற்று வருகிறார்.

இதே வேளை சாவகச்சேரியைச் சேர்ந்த 30 வயது செள.நர்மதா என்ற பெண்ணும் கடந்த புதன்கிழமை குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.(இ-7)

பரிசளிப்பு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி ரவீன்ஸ் E.M.C கல்வி நிறுவனத்தின் க.பொ.த சாதாரண தர மாணவர்கள் பங்கு பற்றும் முன் ஆலயத் தமில்லா ஆங்கிலப் பேச்சும் 10 ஆவது ஆண்டு பரிசளிப்பு விழாவும் நாளை காலை 8 மணியளவில்அல்வாய்மாலை சந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் ரவீன்ஸ் E.M.C நிர்வாகி ப.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கணக்கியல் துறைப் பேராசிரியர் பி.நிர்மலதாசன் கலந்து கொள்வார்.

திருமதி.தாரணி நிர்மலதாசன் பரிசில்களை வழங்குவார். (இ)

நுண்கடன் பற்றி விழிப்புணர்வுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தினால் (VOGT) பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு சேமிப்பின் முக்கியத்துவம் பற்றியும் நுண்நிதி கடனால் ஏற்படும் பாதிப்புகள் பற்றிய விழிப் புணர்வுக் கூட்டம் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தினால் இணைப்பாளர்க.ஆ.குலநாதன் தலைமையில் கடந்த 29 ஆம் திகதி புதன்கிழமை வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் வளவாளராக ஓய்வு பெற்ற இலங்கை வங்கி முகாமையாளர் சி.சிறிகாந்தன் கலந்து கொண்டார். (இ-7)

புதிய கிளை திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.-கிளிநொச்சி பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தின் புதிய கிளை சித்தன்கேணியில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திறந்து வைக்கப்படும். இதில் பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலர் திருமதிசிசெந்தூரன், கௌரவ விருந்தினராக வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் த.நடனேந்திரன், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப் பாளர் லோ.ஸ்ரானிஸ்லாஸ், சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி அதிபர் திருமதி. ச.சிவகுமார் ஆகியோர் கலந்து கொண்டு அங்குரார்ப்பணம் செய்து வைப்பர். அத்துடன் கிருஷ்ணஜெயந்தி விழா கலை நிகழ்வுகளும் இடம் பெறும்.

இதனைத் தொடர்ந்து மூன்று தினங்கள் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை சுகவாழ்வு வீடியோ காட்சியும் பட விளக்கமும் இடம்பெறும். நாளை மறுதினம் 03.09.2018 திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு சமூக சேவகர்களுக்கான விசேட நிகழ்ச்சியும் நடைபெறும். (இ



யாழ்ப்பாணம் YMCA நிறுவனத்தினால் 2017 ஆம் ஆண்டு க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் தோற்றி மாகாண மட்டத்தில் முதலாம், இரண்டாம் நிலைச் சித்திபெற்ற மாணவர்களுக்கும் மேலும் வேறு பலதுறைசார் மாணவர்களுக்கும் கௌரவிப்பு நிகழ்வு கடந்த 25 ஆம் திகதி YMCA மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி கே.சர்வேஸ்வரன், சிறப்பு விருந்தினராக பேரசிரியர் எஸ்.இரட்னஜீவன், எச்.கூல் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பொ.தயானந்தன், யாழ். வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் ஏ.சுபாஸ்கரன், யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட பதிவாளர் ஈ.எஸ்.ரெஜீனோட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

World Class UK Degree @ICBT Jaffna Campus

EQAA Institutionally Accredited (European Quality Assurance Agency)

Apply now for New Intake 2018

ICBT HND IN BUSINESS MANAGEMENT

Finance/ Marketing/ Human Resource Management

TVEC REGISTERED

Duration
- Full Time: 18 Months (Mon-Fri)
- Part Time: 2 Years (Sat & Sun Evening)

Part Time Entry qualifications: GCE A/L + Work Experience

Cardiff Metropolitan University

BSc (Hons) BUSINESS MANAGEMENT

Offered by Cardiff Metropolitan University, UK

Duration
- 1 year

Entry Qualifications
- Higher National Diploma in Business Management or any other accepted programs.

UGC RECOGNIZED

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes

0770 746 553 | 021 477 7888

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector

www.icbt.lk



World Class British IT Degree Programme @ ICBT Jaffna Campus

EQAA Institutionally Accredited (European Quality Assurance Agency)

Apply Now For New Intake 2018

ICBT DUAL HNDs Software Engineering + Computing

Duration 2 Years

Cardiff Metropolitan University

UGC RECOGNIZED

BSc (Hons) SOFTWARE ENGINEERING

Offered by Cardiff Metropolitan University, UK

Duration 1 year

Entry Qualifications

Higher National Diploma in Computing/ IT/ Networking/ Systems Development or any other accepted programs.

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes

A/L|O/L → HND → BSc DEGREE COMPLETION IN SRI LANKA

0770 746 553 | 021 477 7888

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector

www.icbt.lk

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகோரி லண்டனில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

காணாமல் ஆக்கப்பட்டோர் சர்வதேச தினத்தை முன்னிட்டு பிரித்தானியாவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் London Trafalgar square North terrace இல் மாலை 4 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக இடம் பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தை நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் மனித உரிமை அமைப்பு ஒழுங்கு செய்திருந்தது. இதில் இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் நிலை என்ன? என கேள்வி எழுப்பப்பட்டதுடன் போர் முடிந்து பல ஆண்டுகள் ஆகியும் இன்னும் சிறையில் இருக்கும் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. மேலும் பிரித்தானிய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திற்கு காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பொறுப்புக் கூறலுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் பெருந்திரளான தமிழ் உணர்வாளர்கள் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை பதிவு செய்தனர். (இ-7)

V CHILLI POWDER
மிளகாய்த்தூள்

சுத்தமான முறையில் தரமாக யாழ்ப்பாண பாரம்பரிய முறையில் தயாரிக்கப்பட்ட மிளகாய்த்தூள்.

சைவ, அசைவ உணவுகளுக்கு ஏற்றபடி தயாரித்துக் கொடுக்கப்படும்.

Home Delivery Available

வெளிநாடுகளுக்கும் வெளிநாட்டுக்கு எடுத்துச் செல்வதற்கும் பிரத்தியேகமாக பொதி செய்தும் கொடுக்கப்படும்.

விதானை வளவு
பொன்னாலை வீதி,
மானிப்பாய்.

V Darling Sweets
TP No:- 077 944 7977,
077 508 4685

கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: சுவாதி
உயரம்: 175cm
தகைமை/தொழில்:DME/சொந்த தொழில்
எதிர்பார்ப்பு:விவாகரத்தானவரும் ஏற்கப்படும்,வெளிநாடுமட்டும்
தொ.இ: B/8825

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 20
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/L/மலேசியா
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: B/8826

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 25 செவ் 7 இல்
உயரம்: 185cm
தகைமை/தொழில்:A/L/ ஜேர்மன் PR
தொ.இ: B/8828

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 31செவ் 4 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:HNDA/அரச தொழில்
தொ.இ: B/8829

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: மகம்
உயரம்: 4'9"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/8872

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 30செவ் 8 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
தொ.இ: G/8873

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 65 செவ் 1 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L/ சொந்ததொழில்
தொ.இ: G/8890

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூராடம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:Diploma/ கணக்காளர்
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/8898

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

'காமுகர்களின் பசிக்கு பெண்கள் இரையா?'

நித்தியகலாவின் படுகொலைக்கு நீதிகோரி முறிகண்டியில் நேற்று மாபெரும் போராட்டம்

(பனிக்கன்குளம்)

கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட ஐந்து மாத கர்ப்பிணியான கிளி நொச்சி பன்னங்கண்டி பகுதியில் நீர்ப்பாசன வாய்க் காலில் சடலமாக மீட்கப்பட்ட முல்லைத்தீவு முறிகண்டி வசந்தபுரம் பகுதியைச் சேர்ந்த கறுப்பையா நித்தியகலா (வயது-32) என்ற பெண்ணின் படுகொலைக்கு நீதிகோரி முறிகண்டிப் பகுதியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்ட மொன்று முன்னெடுக்கப்பட்டது.

முறிகண்டி மற்றும் இந்துபுரம் கிராம மட்ட பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப் பாட்டப் பேரணி திருமுறி கண்டி பிள்ளையார் ஆல யத்துக்கு அண்மையாக வுள்ள பகுதியில் ஆரம்ப மானது. இந்தக் கண்டன

ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டவர்கள், "அன்று வித்தியா இன்று நித்தியகலாவா, ஒன்று சேர் வோம் பெண்களைப் பாது காப்பதற்காக இருப்பவர்கள் இருந்திருந்தால் இவ்வாறு நடக்குமா? போராடுவோம் போராடுவோம் நீதிக்காகப் போராடுவோம், காமுகர்க ளின் பசிக்கு பெண்கள் இரையா?" உள்ளிட்ட பல் வேறு வாசகங்களை எழு திய பதாகைகளை தாங்கிய வாறும் "வேண்டும் வேண் டும் நீதி வேண்டும், குற்ற வாளிகளை உடன் கைது செய் உள்ளிட்ட கோசங் களை எழுப்பியவாறும் ஏ-9 வீதி வழியாக திருமுறி கண்டி பொதுநோக்கு மண்ட பம் வரை சென்று அங்கு மகஜர் கையளிக்கப்பட்ட தோடு கண்டன உரைக ளும் இடம்பெற்றன.

இந்தப் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் களான திருமதி. சாந்தி சிறிஸ்கந்தராஜா, சிவஞா னம் சிறிதரன் மற்றும் வடக்கு மாகாணசபை உறுப்பினர் களான து.ரவிகரன், ஆ.புவ னேஸ்வரன், த.குருகுல ராஜா, சு.பசுபதிப்பிள்ளை மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் செ.பிறேமகாந்த் மற்றும் பிரதேச சபைகளின் உறுப்பி னர்கள், முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பொது மக்கள் மற்றும் சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதி கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டு தமது எதிர்ப்பினை வெளி யிட்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதி யில் ஜனாதிபதிக்கான மக ஜரை பாராளுமன்ற உறு ப்பினர் திருமதி. சாந்தி சிறிஸ்கந்தராஜாவிடமும் எதிர்க்கட்சித் தலைவருக் கான மகஜரை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனிடமும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக் கான மகஜரை வடக்கு மாகா ணசபை உறுப்பினர் து.ரவிக ரனிடமும் பொலிஸ்மா அதி ருக்கான மகஜரை மாங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்ப திகாரி புஸ்பகுமாரவிடமும் கையளித்தனர். (2-281)

யுத்தம் நிறைவடையும் வரை பெண்கள்

கண்ணியமாகவும் பாதுகாப்பாகவும் வாழ்ந்தார்கள்

சாந்தி எம்.பி. தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

நாட்டில் யுத்தம் நிறை வடையும் வரை பெண்க ளுக்கு இவ்வாறான ஒரு அவல நிலை ஏற்பட்ட தில்லை. பெண்கள் கண்ணி யமாகவும் கௌரவமாகவும் பாதுகாப்பாகவும் வாழ்ந்தார் கள் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா தெரி வித்துள்ளார்.

கழுத்து நெரிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட நிலையில் கிளிநொச்சி பன் னங்கண்டி பகுதியில் வாய் க்காலில் சடலமாக மீட்கப்ப ட்ட முல்லைத்தீவு முறிக ண்டி வசந்தபுரம் பகுதியைச் சேர்ந்த கறுப்பையா நித்திய கலா (வயது-32) என்ற பெண்ணின் படுகொலை க்கு நீதிகோரி முறிகண்டி மற் றும் இந்துபுரம் கிராம மட்ட பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் முறிகண்டிப்பகுதி யில் நேற்று முற்பகல் 10 மணியளவில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்ட மொன்று முன்னெடுக்கப் பட்டது. நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போது அவர் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொலை செய்யப்பட்ட நித்தியகலாவுக்கு ஒரு கணம் தலைசாய்த்து நல்லாட்சி நல்லிணக்கம் என்று மேடை களிலே உரக்கக் கூறுகின்ற அரசு, அநியாயமாக படு கொலை செய்யப்பட்ட இந்த நித்தியகலாவின் படுகொ லைக்கு என்னபதில்சொல்கிறது.

எம்மைச் சூழ இராணு வப் பாதுகாப்பு, மாவட்டம் தோறும் பாதுகாப்பு படைகள், வீதிதோறும் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு இவை கள் எல்லாவற்றையும் தாண்டி இவர்களின் கண் களில் மண்ணைத் தூவி விட்டு ஏ-9 வீதியில் எவ் வாறு இவ்வாறான ஒரு துணிகர படுகொலைக்கு திட்டமிடல் நடைபெற்றது. இதனுடையபின்னணிஎன்ன? இதற்கு நிச்சயமாக அரசு பதில் கூற வேண்டும்.

யுத்தம் நிறைவடையும் வரை பெண்களுக்கு இவ் வாறான ஒரு அவல நிலை ஏற்பட்டதில்லை. பெண்கள் கண்ணியமாகவும் கௌர வமாகவும் பாதுகாப்பாகவும் வாழ்ந்தார்கள். அன்று 16 வயது பதிமவயதுச்சிறுமி முதல் படு கிழவி வரை நடுவீதியிலே நடுராத்திரி யிலே சென்று உலவி வந்தார்கள். வேலைக்கும் சென்று வந்தார்கள். இன்று வீட்டு க்குள்ளேயே பெண்ணினத் துக்கு பாதுகாப்பில்லாத நிலை தோன்றியுள்ளது. இதனை இவ்வாறே வளர விட முடியாது. இந்த அரசு நிச்சயமாக சிவில் நிர்வா கத்தை அமுல்படுத்தி இருக்கின்ற இந்த வேளை யிலே பெண்களுக்கு பாது காப்பு பெற்றுக்கொடுக்க வேண்டியது இந்த அரசின் தலையாய கடமையாகும்.

நீதி தேவதையின் நீதி தராசு போல் இந்த காமுகர்க ளுக்கு தண்டனை வழங்க வேண்டியது நீதித் துறை யின் ஒரு தலையாய கடமை யாக உள்ளது.

இந்த நிலைமை இன் னும் தலைவிரித்தாடாத வகையில் நாங்கள் அனை வரும் இணைந்து கவன மாக விழிப்புணர்வோடு பெண்கள் வாழ வேண்டும். என்னிடம் கையளித்த மகஜரை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்து இதற்குரிய தொடர் நடவடிக்கையை எடுக்க ஆவன செய்வேன் என்றார். (2-281)

வவுனியாவில் வரட்சியால் 9 ஆயிரத்து 516 மேட்டு நிலப் பயிர்ச்செய்கையாளர் பாதிப்பு

தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் மாவட்ட இணைப்பாளர் தெரிவிப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் வரட்சி காரணமாக 9 ஆயிரத்து 516 மேட்டு நில பயிர்ச்செய் கையாளர்கள் பாதிப்படை ந்துள்ளதாகவும் அவர்களு க்கு நிவாரணத்தைப் பெற் றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் மாவட்ட இணைப்பாளர் பி.தனராஜ் தெரிவித்துள் ளார்.

வவுனியா மாவட்ட வர ட்சி நிலை தொடர்பில் நேற்றைதினம் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற கால நிலை காரணமாக வவுனியா மாவட்டமும் வர ட்சியால் பாதிக்கப்பட்டுள் ளது. அந்த வகையில் வவு னியா மாவட்டத்தில் 9 ஆயிரத்து 516 மேட்டு நில பயிர்ச்செய்கையாளர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

வரட்சி காரணமாக பலர் மேட்டு நில பயிர்ச்செய்கை யில் ஈடுப முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், பயிர்ச் செய்கை மேற்கொண்ட சிலரின் பயிர்களும் அழிவ டைந்துள்ளன. இதன்படி வவுனியா பிரதேச செயலக பிரிவில் 4 ஆயிரத்து 437 பேரும், வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில் ஆயிரத்து 351 பேரும், வவுனியா தெற்கு பிரதேச செயலக பிரிவில் ஆயிரத்து 323 பேரும், வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் இரண்டாயிரத்து 405 பேரும் பாதிப்படை ந்துள்ளனர்.

இவர்களுக்கான வரட்சி நிவாரணத்தை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித் தார். (2-250)

பெண்நோயியல் மகப்பேற்று வைத்திய நிபுணரை நிரந்தரமாக உடனடியாக நியமிக்க வேண்டும்

(கண்டாவளை)

கர்ப்பவதிகளுக்கான சிகி ச்சைகளை வழங்கக் கூடிய வாறு நிரந்தரமான பெண் நோயியல் மகப்பேற்று வைத் திய நிபுணர் ஒருவரை மத் திய சுகாதார அமைச்சு உட னடியாக நியமிக்க வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலை நோயாளர் நலன் புரச் சங்கத்தின் தலைவர் கிட்ணபிள்ளை சின்னராஜா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலைக்கான பெண்நோயியல் மகப்பேற்று வைத்திய நிபுணர் ஒரு வரை நிரந்தரமாக நியமிக் குமாறு கோரி மாவட்ட பொதுவைத் தியசாலை முன்பாக நோயாளர் நலன் புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று போராட்டம் ஒன்று முன் னெடுக் கப் பட் டுள் ளது.

இதில் கலந்து கொண்டு கருத்துத்தெரிவித்த நோயா ளர் நலன்புரிச்சங்கத்தின் தலைவர், ஒரு ஆபத்தின் விளிம்பில் இருப்பதாக கரு தப்படுகின்ற கர்ப்பவதிக ளுக்கான சிகிச்சைகளை வழங்கக்கூடிய வகையில் கிளிநொச்சி மாவட்ட மகப் பேற்று வைத்திய நிபுணரை நிரந்தரமாக நியமிக்க மத்திய சுகாதார அமைச்சு மற்றும் ஜனாதிபதி விரை வாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேபோன்று ஏனைய பிரிவுகளுக்கான வைத்திய நிபுணர்களையும் நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண் டும். அனுமதிக்கப்பட்ட கர்ப் பவதிகள் பெரும் கஷ்டங் களை எதிர்கொள்ள வேண் டிய நிலை காணப்பட்டது.

ஜனாதிபதி, மத்திய சுகா தார அமைச்சும் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண் டும் என அவர் மேலும் தெரி வித்துள்ளார். (2-315)

நித்தியகலாவின் பூதவுடல் நேற்று நல்லடக்கம்

கிளிநொச்சியில் கழுத்து நெரித்து படுகொலை செய்யப்பட்ட முறிகண்டி பகு தியைச் சேர்ந்த கறுப்பையா நித்தியகலா என்ற யுவதியின் சடலம் நேற்றைய தினம் பிற்பகல் 3 மணியளவில் நல்லடக்கம் செய்யப்பட்டது. முறிகண்டி பகுதியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் இறுதி வழிபாடு இடம்பெற்றதை அடுத்து பூதவுடல் முறிகண்டி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய் யப்பட்டது. குறித்த யுவதியின் உடலுக்கு அரசியல்வாதிகள், பொதுமக்கள் எனப் பலரும் அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை குறித்த யுவதிக்கு நீதி கோரிப் போராட்டங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-315)

பெண்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்கு

நித்தியகலா கொலையாளிகளை உடன் கைது செய்

கிளிநொச்சியில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம்

(பரந்தன்)

வடக்கில் அண்மைக் காலமாக பெண்களுக்கெதி ராக இடம்பெற்று வருகின்ற வன்முறைகளுக்கு எதிராக வும் பெண்களின் பாதுகா ப்பை வலியுறுத்தியும் கொலை செய்யப்பட்ட முறிகண்டியைச் சேர்ந்த கர்ப்பிணியான கறு ப்பையா நித்தியகலா விடயத் தில் விரைவாக குற்றவாளி கள் கண்டுபிடிக்கப்பட்டு நீதி நிலைநாட்டப்பட வேண்டி யும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

சமத்துவம்சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த குறித்த ஆர்ப்பா ட்டத்தில் கிராம மட்ட அமைப் புக்கள் பலவும் கலந்து கொண் டன. கிளிநொச்சி சேவை சந்தைக்கு முன்பாக இடம் பெற்ற ஆர்ப்பாட்டக்குழுவினர் ஏ-9 வீதி ஊடாக நகர்ந்து கிளி நொச்சி பொலிஸ் நிலையம் வரை பேரணியாக சென்றனர். அங்கு பொலிஸ்மா அதிபரு க்கான மகஜரை கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரிடம் கைய ளித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் "அரசே ! பெண்களின் பாதுகாப்பை உறுதி செய் அரசே!" பெண் களின் பாதுகாப்பிற்கான சட் டத்தை வலுவாக்கு! நித்திய கலா கொலையாளிகளை விரைந்து கைது செய், தாம தியாது நீதி வழங்கு நாட் டில் கேள்விக்குள்ளாகிறது சிறுமிகள் , பெண்களின் பாது காப்பு. சட்டவிரோத போதைப் பொருள் பாவனையாளர்கள் மீதும் கடும் சட்ட நடவடிக்கை வேண்டும், வழங்கும் தண் டனைகள் வருங்காலத்தில் குற்றங்களை தடுக்க வழி செய்ய வேண்டும்.

வேண்டும் பெண்களு க்கு பாதுகாப்பு வேண்டும், வழங்கு வழங்கு சட்டத் தின் பாதுகாப்பை பெண் களுக்கு வழங்கு, பெண் களை பாதுகாக்க சமூகமே விழித்துக்கொள்!, எங்கள் பெண்களுக்கு ஏன் இந்த நிலை?" போன்ற வாசகங் கள் எழுதப்பட்ட சுலோகங் களையும் ஏந்தியிருந்த னர்.

இதன் போது சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் ஸ்தாபகர் மு.சந் திரகுமார் கருத்துத் தெரி விக்கையில்,

கொடூரமாக படுகொலை செய்யப்பட்ட நித்தியகலா விற்கு நீதிகிடைக்கவேண்டும். குறித்தசெயலை செய்த குற்ற வாளிகளை விரைந்து கைது செய்ய வேண்டும், மாவட்ட த்தில் காணப்படும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்த வேண்டும் என அவர் குறிப் பிட்டார்.

போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் குறிப்பிடுகையில், தொடர்ச்சியாக பெண்களிற் கெதிரான கொடுமைகள் இடம் பெற்று வருவதாகவும், அவ ற்றை கட்டுப்படுத்த நடவடி க்கை எடுக்க வேண்டும்.

அதேவேளை மாவட்டத் தில் நிலவுகின்ற போதைப் பொருள் பாவனை உள்ளிட் டவற்றை விரைந்து கட் டுப்படுத்த வேண்டும் என வும் அவர்கள் குறிப்பிட்ட னர். (2-315-312)

கிளிநொச்சி வைத்தியசாலையில்

பெண்நோயியல் மகப்பேற்று வைத்தியரை நியமிக்கக்கோரி நேற்று கண்டனப்பேரணி

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நிரந்தரமான பெண்நோயி யல் மகப்பேற்று வைத்திய நிபு ணர் ஒருவரை நியமிக்கு மாறு கோரி வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச்சங்கத் தின் ஏற்பாட்டில் நேற்று காலை 9 மணிக்கு கண்ட னப் பேரணியொன்று முன் னெடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றிவந்த இரண்டு பெண் நோயியல் மகப்பேற்று வைத்திய நிபுணர்களில் ஒருவரை வேறு மாவட்டத் திற்கு இடமாற்றம் செய்தமை மற்றும் மற்றைய வைத்திய நிபுணர் மேலதிக கல்விக் காக வெளிநாடு சென்றுள் ளமை காரணமாகவும் மேற் படி வைத்தியசாலையில் கட ந்த 12ஆம் திகதிக்கு பின்னர் மகப்பேற்று வைத்திய நிபு ணர் எவரும் இல்லாத நிலை யில் இங்கு பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட கர்ப்பி ணித்தாய்மார் முல்லைத் தீவு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

அத்துடன், கடந்த 19ஆம் மற்றும் 20 ஆம் திகதிகளில் இரண்டு கர்ப்பவதிகள் பிர சவத்திற்காக அனுமதிக்கப் பட்ட நிலையில் வைத்திய நிபுணர் இல்லாத காரணத் தால் உயர்குருதி அழுத்தம் காரணமாக ஆபத்தான நிலை யில் யாழ்.போதனா வைத்தி யசாலைக்கு மாற்றப்பட்ட னர்.

இவ்வாறான நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு நிரந் தரமான பெண்நோயியல் மகப்பேற்று வைத்திய நிபு ணர் நியமிக்கப்பட வேண்டும் என்றும் ஏனைய பிரிவுக ளில் காணப்படுகின்ற வைத் திய நிபுணர்களின் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யு மாறும் கோரி மேற்படி பேரணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட பொது வைத்திய சாலை முன்பாக இடம்பெ ற்ற கவனயீர்ப்பு போராட்டத் த்தில் வைத்தியசாலை நோயா ளர்கள், நலன்புரிச்சங்க நிர் வாகத்தினர், பொதுமக்கள், கர்ப்பவதிகள்,அரசியல் பிரதி நிதிகள், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஞா. குணசீலன் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களான த. குருகுலராஜா, சு. பசுபதிப் பிள்ளை எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மத்திய சுகாதார அமைச்சு, மாவட்ட அரசாங்க அதிபர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஆகி யோருக்கான மேற்படி கோரிக் கைகள் அடங்கிய மகஜர் கள் கையளிக்கப்பட்டுள்ளன.

பேரணியில்கலந்துகொண் டவர்கள் "பெண்நோயியல் மத்திய வைத்தியசாலையாக தீர்மானிக்கப்பட்ட நிலையில் நீங்கள் செய்வது சரியா? சுகாதார அமைச்சே உயரதி காரிகளின் பாரபட்சத்தை வன்மையாக கண்டிக்கின் றோம், மத்திய அரசே கிளி நொச்சிமக்களின்வறுமையை உங்களால்அறிய முடியுமா?" ஆகிய பதாகைகளை ஏந்தி யிருந்தனர்.

மேலும் இந்த வாரம் தனது வெளிநாட்டுக் கற் கையை பூர்த்தி செய்து நாடு திரும்பவுள்ள ஒரு மகப் பேற்றியல் நிபுணரை கிளி நொச்சிக்கு நியமிக்க அமை ச்சு ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டது. (2-315-312)

கள்ள நோட்டுடன் ஒருவர் கைது

(குருமன்காடு)

வவுனியாவில் வர்த்தக நிலையம் ஒன்றில் பொருட் கள் கொள்வனவு செய்து விட்டு 5ஆயிரம் ரூபா கள்ள நோட்டை வியாபார நிலை யத்திற்கு கொடுத்தவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலி ஸார் தெரிவித்துள்ளனர். குறித்த சம்பவம் நேற்று முன் தினம் இரவு இடம் பெற்றுள் ளது. இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதா வது.

வேப்பங்குளம் பட்டாணிச் சூர் பகுதியிலுள்ள வியாபார நிலையம் ஒன்றில் மோட் டார் சைக்கிளுக்கான உதி ரிப்பாகங்களை கொள்வ னவு செய்துவிட்டு 5ஆயி ரம் ரூபாய் கள்ள நோட்டை வர்த்தக நிலையத்திற்கு வழங்கியுள்ளார்.

இதன்போது, குறித்த 5 ஆயிரம் ரூபா நோட்டில் வர் த்தக நிலைய உரிமையாள ருக்கு சந்தேகம் ஏற்பட்டதை யடுத்து அவர் பொலிஸாரு க்கு தகவல் வழங்கினார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் 5ஆயிரம் ரூபா வைத்திருந்த 24வயதுடைய நபரைக் கைது செய்துள்ள துடன் மேலதிக விசாரணை களையும் மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ள னர். (2-250)

சர்வதேச தென்னை தினத்தை முன்னிட்டு தென்னை பயிர்ச்செய்கை சபையின் வேலைத் திட்டம் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆரம்பிக் கப்ப ட்டது.

சர்வதேச தென்னை தினமான செப்டெம்பர் 02 ஆம் திகதியை முன்னிட்டு கரைதுறைப் பற்று கற்பகதரு சங்கங்களின் அங்கத்தவர்க ளினால் அளம்பிலில் தென்னை நாற்று மேடைக்கு கிணறு ஒன்று வெட்டப்படும் நிகழ்வு பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தலைமையில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்ட போது...

சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–163

களைகொல்லி கிளைபோசேற்று மனிதக் கொல்லியானதனால்....

பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

பயிர்களில் பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அசேதன இரசாயனங்கள் பயன்படுத்தப்படுவது நீண்டகாலமாகவே வழக்கத்திலிருந்து வருகின்றது.

ஆனால் முந்திய காலங்களில் விவசாயத் திணைக்களத்தின் பரிந்துரைக்கேற்பவே பீடைநாசினிகள் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றமையால் அதன் எதிர்த்தாக்கமும் கட்டுப்பாட்டிலேயே இருந்தது.

காலஞ்செல்லச் செல்ல பயன்படுத்தப்பட்ட பீடைநாசினிகளின் அளவு பரிந்துரைக்கப்பட்ட அளவிலும் கூடிய அளவில் பிரயோகிக்கப்பட்ட போது பீடைகளை அழித்தது போக, மிஞ்சியவை எமது சூழலில் மாசாக்கிகளாக தேங்கத் தொடங்கின.

இவ்வாறான மாசாக்கிகளினால் பல நன்மை தரும் உயிரினங்களும் எமது சூழலைவிட்டு அழியத் தொடங்கின. இது தற்போது பல மடங்காகி எமது உயிருக்கே உலைவைக்கும் அளவுக்கு செறிவூட்டப்பட்டு விட்டன. இதன் தாக்கத்தை பலரும் உணரத் தலைப்பட்டுள்ளனர். இது எமக்கான பிரச்சினை மட்டுமல்ல, பல மக்களின் உயிர்களைக் காவு கொள்ளும் உலகளாவிய பிரச்சினையாகவும் இருக்கின்றது.

பீடை நாசினிகளில் பல வகைகள் இருக்கின்றன. பூச்சி பீடைகளைக் கட்டுப்படுத்தும் பூச்சி நாசினிகள், சிற்றுண்ணிப் பீடைகளைக் கட்டுப்படுத்தும் சிற்றுண்ணி நாசினிகள், நோயாக்கும் பங்கசுக்களைக் கட்டுப்படுத்த பங்கசு நாசினி, நெமற்றோட்டுப் பீடைகளைக் கட்டுப்படுத்த நெமற்றோட்டு நாசினி, களைகளைக் கட்டுப்படுத்த களை நாசினி, எலிகளைக் கட்டுப்படுத்த எலிநாசினி இவ்வாறாக பலவகைகள் காணப்படுகின்றன.

இவற்றுள் அநேகமானவை தனித்துவம் மிக்கவையாகவும் அவற்றினை அந்தந்த பீடைகளுக்கு மட்டுமே பயன்படுத்த முடியும் என்பதும் நாம் அறிந்திருக்க வேண்டியதாகும்.

இலங்கையில் களைநாசினிகளின் பயன்பாடு அதிகமாகவே காணப்படுவதனால் அதற்கான முக்கியத்துவமும் அதிகமாகவே இருக்கின்றது. இக்களைநாசினிகள் விளைநிலத்தில் பயிர்செய்யப்படும் பயிர்களுக்குப் போட்டியாக வளரும் களைகளைக் கட்டுப்படுத்தவே பயன்படுத்தப்படுகின்றன.

அதிலும் தொகுதிக் களைநாசினிகள் ஊடுபுகுந்து தாக்கக்கூடியனவாகவும் தொடுகைக் களைநாசினிகள் களைகளில் படும்போது களைகளை அழிக்கக்கூடியனவாகவும் மேலும் முழுக் களைநாசினிகள் ஒட்டுமொத்தமாக களைகளை அழிக்கும் திறனுள்ளவையாகவும் இருக்கின்றன.

அந்தவகையில் களைநாசினிகளின் வகைப்படுத்தலானது அவற்றின் செயற்றிறன், பிரயோகித்த பின் செயற்படும் காலஅளவு மற்றும் அவற்றினது இரசாயனச் சேர்வை என்பனவற்றில் தங்கியிருக்கின்றது.

களைநாசினிகள் களைகளின் தன்மைக்கேற்ப பிரயோகிக்கப்படும். இருப்பினும் அவற்றை அளவுக்கதிகமாக, தேவையற்ற வகையில் பிரயோகிக்கும் போது களைகளினாலான சூழல் தாக்கம் அதிகமாகவே இருக்கும்.

இது சூழல் மாசடைவதற்கு காரணமாக அமைந்து விடுகின்றது.

இலங்கையில் களைநாசினிகளில் கிளைபோசேற்று என்னும் தொகுதிகளை நாசினி ஒகனோ பொசுபேற்று குடும்பத்தைச் சேர்ந்ததாகும். இந்த களைநாசினியை பயன்படுத்தி அநேகமான களைகள் கட்டுப்படுத்தப்பட்டாலும் இதன் பயன்பாட்டினால் வடமத்திய மாகாணத்தில் இனந்தெரியாத சிறுநீரக நோய் ஏற்பட்டிருப்பதாக நம்பப்படுகின்றது.

நெல்வயல்களுக்கு விசிறப்படும் இக்களைநாசினி நீரில் கழுவப்பட்டு வாய்க்கால்களில் செல்லும் போது அதனை மக்கள் குடிப்பதற்கும் தமது அன்றாடத் தேவைகளுக்கும் பயன்படுத்துவதனால் இக்களைநாசினியின் கூறுகள் மனிதருக்குள் உட்செல்ல வாய்ப்பாகி விடுகின்றன. அதனால் பல்வேறுபட்ட நோய்கள் விவசாயப் பெருமக்களுக்கு ஏற்பட்டதனால் 2015ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் இந்த களைநாசினியை பயன்படுத்துவதற்குத் தடை செய்திருந்தது.

மக்களின் சுகாதாரத்தை கருத்தில் கொண்டே அவசரமாக இந்த முடிவு எடுக்கப்பட்டதெனலாம். இதனை உலகின் பல நாடுகளும் செய்திருந்தன. கனடா, அவுஸ்திரேலியா, பிரேசில், நியூசிலாந்து, அமெரிக்காவின் பல மாகாணங்கள் உள்ளிட்ட பல நாடுகள் இந்தத் தடையை அல்லது பயன்பாட்டிலிருந்து குறைக்கும் செயற்பாட்டை செய்திருக்கின்றனர்.

கிளைபோசேற்று வர்த்தக ரீதியில் ரவுண்டப் எனப் பெயரிட்டு சந்தையில் விற்கப்படுகின்றது. இதனைப் பொதுவாக அனைவரும் அவசியமான களைநாசினியாகவே கருதி அதிகளவில் விசிறுவதனையும் அவதானிக்க முடிந்தது.

இதனால் கிளைபோசேற்று என்னும் களைநாசினி பிரச்சினைக்குரிய நஞ்சுப் பொருளாகவே கருத முடிகின்றது. கிளைபோசேற்றுவினால் ஏற்படும் தாக்கம் மனிதனில் பலவிதமானதாக அறிய முடிகின்றது.

அதிலும் மனிதனில் சிறுநீரகநோய் மற்றும் புற்றுநோயையும் உருவாக்குவதாக ஆய்வு முடிவுகள் அறியக் கிடைத்தாலும் களைகளைக் கட்டுப்படுத்துவதில் வேறெந்த முறையும் இதைப் போல வினைத்திறனானதாக இல்லையென்பதனால் கிளைபோசேற்று தடைசெய்யப்பட்ட பின்னரும் திருட்டுத் தனமாக இலங்கைக்குள் தருவிக்கப்பட்ட செய்திகளையும் ஊடகங்கள் மூலமாக அறிய முடிந்தது.

மேலும் தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களில் களைகளைக் கட்டுப்படுத்த முடியாதிருந்ததாலும் அதனால் பெருந்தோட்டப் பயிர்களின் விளைச்சல் பாரியளவில் பாதிக்கப்பட்டிருந்தமையாலும் மீண்டும் கிளைபோசேற்றின் பாவனையை மட்டுப்படுத்திய அளவில் அனுமதிக்கும் சட்டம் இவ்வருடம் (2018) ஏப்ரல் மாதம் எடுக்கப்பட்டிருக்கின்றது.

களைநாசினியை பயன்படுத்தாது விட்டால் ஏற்படும் இழப்பினைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டாலும் இதனை மேலும் பயன்படுத்துவது பற்றி அதிகம் விழிப்புணர்ச்சி எடுக்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.

களைநாசினியின் தாக்கத்தை மக்களுக்கு உணரச்செய்து அதனது தீங்குகளை விலக்கி மக்களை தயார்ப்படுத்துவதும் இதற்குள் அடங்கும். அந்த வகையில் கிளைபோசேற்றுகளை நாசினியை பயன்படுத்துவது பற்றி இன்னும் மக்களுக்கு விளங்கப்படுத்துங்கள்.

இந்தக் களைநாசினியின் தீங்கு பற்றி தெரியாதவர்களுக்கு இன்னும் அறியத் தாருங்கள். நஞ்சற்றதேசம் என்பது வெறும் வார்த்தையினாலான சொற்பதமல்ல. அதற்குள் ஆழ்ந்த கருத்து பொதிந்திருக்கின்றது.

கிளைபோசேற்றுகளை நாசினியை ரவுண்டப் என்னும் வர்த்தக பெயரில் உற்பத்தி செய்யும் மொன்சன்ரோ எனப்படும் பல் தேசிய கம்பனி இந்த உற்பத்தியை வருடந்தோறும் அதிகரிக்கச் செய்து அதனை வெற்றிகரமாக பதிவிலிடவும் வழி பிறந்திருக்கின்றது.

அந்தவகையில் கிளைபோசேற்று பயன்பாட்டுக்கு உங்கள் கைகளில் கிடைத்தாலும் மேற்கூறிய கருத்தை ஏற்றுக்கொண்டு அதன் வழி அதனைக் கவனமாக பயன்படுத்தும் அதே நேரத்தில் அதனது தாக்கம் பற்றியும் மக்களுக்கு அறிவுறுத்த தவறக்கூடாது.

இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 177

நல்லைப்பதியில் அருணகிரிநாதர் உற்சவம்

முருகப் பெருமானின் பேரழகையும் அருளாற்றலையும் தமிழழகால் அலங்கரித்தவர் அருணகிரிநாதர். ஞான பண்டிதனான முருகப் பெருமானே குருவாக வந்து தனது செங்கரத்தால் தாங்கியவராய் "சும்மாயிரு சொல்லற" என்று உபதேசஞ் செய்து வேலினாலே அவரது நாவில் பிரணவத்தை எழுதி முத்தி என்று பாடுமாறு பணித்தருளினார். அன்றிலிருந்து திருமுருகன் மீது பக்தித் தமிழ் புனைந்து அதனை பக்தியும் முத்தியும் தரும் ஞான வெள்ளமாக பெருக்கெடுத்து பாயச் செய்தார். இத்துணை பக்திச் சுவை ததும்பும் அருட்பிரவாகத்தில் அருணகிரிநாதர் மட்டுமன்றி, அவர்தம் பாடல்களை அனுபவித்தவர்கள் யாவருமே நனைந்து திளைத்தவர்களாயினர்.

இவ்வண்ணம் அவர் பாடியருளிய திருப்புகழ், திருவகுப்பு, கந்தரனுபூதி, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், வேல்விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம் ஆகிய எல்லாப் பாடல்களிலும் பக்தியும் தமிழும் இரண்டறக் கலந்து கேட்போர், படிப் போர் யாவரிடத்தும் மெய்ஞானத் தைக் காணும் பேற்றைக் கொடுத் தது. இவற்றுள்ளே திருப்புகழானது பக்திச் சுவை சொட்டச் சொட்ட சந்தச் சிறப்போடு பாடப்பெற்ற பாடல்களாக அமைந்துள்ளன. இவ்வாறு பாடப்பெற்ற திருப்புகழ் பாடல்கள்

திருவண்ணாமலை தொடக்கம் ஈழ நாட்டிலுள்ள கதிர்காமம், யாழ்ப்பாணம், நல்லூர் வரைக்கும் எல்லாத் தலங்கள் மீதும் குடிகொண்டிருந்த முருகப் பெருமானை போற்றிப் பாடுவதாக அமைந்தன.

இத்தகு திருவருட் திறத்தோடு பாடப்பெற்ற திருப்புகழ் பாடல்களிலே "பூத்தார் சூடுங் கொத்தவர் குழவியர்..." எனத் தொடங்கும் பாடலிலே "யாழ்ப்பாணாயன் பட்டின மருவிய பெருமாளே" என்று நல்லைக் கந்தப் பெருமானை விழித்துப் பாடியிருப்பதானது எமது மண்ணிலே சைவமும் தமிழும் நீடுகாலம் தழைத்தோங்க வேண்டுமென்ற அருணகிரிநாதரது திருவருட் பார்வையாலாகும்.

அதுமட்டுமன்றி கந்தப் பெருமானுடன் இணைத்து யாழ்ப்பாணத்தை விழித்திருப்பதானது இந்த மண்ணிற் குரிய திருவருட் திறத்தை எடுத்தியம்பும் தெய்வீக உணர்வினாலேயாகும். ஏனெனில் நல்லைக் கந்தப் பெருமானது திறத்தை அருணகிரியார் பாடும் போது "யாப்பாராயுஞ் சொற்றமிழருள் தருமுருகோனே..." என்று பாடியிருப்பது இந்த மண்ணுக்குரிய புலமையையல்லவா உட்பொருளாக எழுத்தியம்புகிறது.

இவ்வாறு நல்லைக் கந்தப் பெருமானையும் அவன் குடிகொண்டிருக்கும் பதிமருவி அமையப் பெற்ற யாழ்ப்பாணப் பட்டினத்தினதும் அங்குள்ள குடிகளதும் பெருமை பகர்ந்து பாடுகின்ற அருணகிரியார் இப்பாடலிடையே "வாக்கால் ஞானம் பெற்றினி வழிபட அருளாயே..." என்று கேட்டிருப்பதானது நல்லைப் பதியில் உறைந்தருளும் இறைவன் தமிழ்த்திறத்தால் மட்டுமன்றி, ஞானப் பேற்றையும் வழங்க வல்லோன் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகும். வாக்கிற்கு அருணகிரி எனப் பெற்ற அருணகிரிநாதன் "வாக்கால் ஞானம் பெற்றினி வழிபட அருளாயே" என்பதுசொல்லினதும்பொருளினதும் திறங்கண்டோராயினும் அவர் செப்பும் வாக்கிலே ஞானம் எனும்மேன்மைசெறிந்திருக்கவேண்டும் என்பதேயாகும். ஆகவே அருணகிரிநாதர் தான்பெற்ற ஞான இன்பத்தை இம்மண்ணில் வாழ்கின்றவர்களும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆற்றுப்படுத்தலிலேயே வாக்கால் ஞானம் பெற்று வழிபட இவ்வாறு பாடியுள்ளார். ஆதலினால் அருணகிரிநாதன் நல்லைக் கந்தப் பெருமானை பாடியதற்கிணங்க எமது வாழ்க்கை முறைகளிலும் வழிபாட்டுமுறைகளிலும் பக்திபுணர்வை நிலைபெறச் செய்து உயரிய பக்குவமான ஞானநெறி மூலம் இறைவனை முன்னிலைப்படுத்தி வாழ்வோமானால் அந்தக் கந்தப் பெருமானே இந்த மண்ணில் எமக் கான நல்வாழ்வை நிலைபெறச் செய்வான்.

துரை- கணேசமூர்த்தி
ஆசிரியர்
யாழ்ப்பாணக் கல்லூரி.

கந்தபுராண அருள் நெறி விழா

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், கந்தபுராண கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம் என்ற தொனிப்பொருளில், நல்லூர், கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு கந்த புராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் கந்தபுராண எழுச்சி அருள்நெறி விழா-2018 நிகழ்வுகளை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்திலும் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்திலும் சிறப்புற முன்னெடுத்து வருகிறது.

அந்தவகையில், 17 ஆம் நாள் நிகழ்வுகள், இன்று சனிக்கிழமை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில், பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நாவடி வைரவர் குழுவினரின் பஜனை நிகழ்வும், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள் திருமுன்னிலையில், இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் இ.கர்ஜின் தலைமையில், யாழ். பல்கலைக் கழக ஆங்கில மொழித்துறைச் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்க, சங்கானைப் பிரதேச அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர், சைவப் புலவர் ஏ.அனுசாந்தனின் "நங்கை முடிக்கோர் நறுந்தொடை - தெய்வானை அம்மன் திருமணம்" எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும், திருமுறை நெறிச் செல்வர் மா.ந.பரமேஸ்வரன் திருப்புகழ் கச்சேரி ஆகியவை சிறப்பு நிகழ்வாகவும் இடம்பெறும்.

உற்சவ காலச் சிறப்புச் சொற்பொழிவின்போது பத்து வினாக்கள் அடங்கிய வினாக்கொத்து அன்றைய நிகழ்வுச் சொற்பொழிவினை உள்ளடக்கியதாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டு, அன்றைய தினமே விடைத்தாள்கள் மாணவர்களிடமிருந்து பெறப்படும். முதல் இருபது நாட்களிலும் விடையளித்த மாணவர்களில் முன்னிலை பெறும் ஐந்து மாணவர்களுக்கு ஐந்து துவிச்சக்கரவண்டிகளும் ஏனைய மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படும். (இ-7)

சாவகச்சேரி இளைஞர் சபை உறுப்பினர்களுக்கு சான்றிதழ்

(கொழும்பு)

இலங்கை -ஜக்கிய நாடுகள் நட்புறவு அமையத்தின் இளைஞர் தின நிகழ்வுகள் கடந்த 25 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அமையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தேசப்பிரிய விஜயதுங்க தலைமையில் இடம்பெற்றது.

இதில் விருது வழங்கும் நிகழ்வின் போது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான சிறந்த இளைஞர் சபையாக சாவகச்சேரி இளைஞர் சபை தெரிவு செய்யப்பட்டு உறுப்பினர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (இ-30)

நல்லூர் ஆலயச் சூழலில்

'தாரகன் வதம்' இசைப்பேருரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லை ஆதீன குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் நல்லை ஆதீன குருமகா சந்நிதானத்தின் அருளாசியுடன் நல்லூர் சைவ மகாசபை நடத்தி வரும் "கந்தவேற்புராணம்" பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு, மாவை ஆஸ்தான வித்துவான், கானகதாவாரிதி கலாபூஷணம் பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா "தாரகன் வதம்" பற்றி சிறந்த பக்க வாத்திய சகிதம் தெய்வீக தொடர்இசைப் பேருரை நிகழ்த்துவார். (இ)

தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் "தெய்வீக இசையரங்கு" நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் தினமும் மாலை 6.45 மணியிலிருந்து இரவு 8.15 மணிவரை நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று இசைக்கச்சேரி பாட்டு- அழகேசன் அமிர்தலோஜனன், அழகேசன் அமிர்தசிந்துஜன், வயலின்- கா.குக்பரன், மிருதங்கம்- க.கஜன், கெஞ்சிரா-நா.சிவசுந்தர சர்மா, கடம்- நா.மாதவன், முகர்சிங்- சி.செந்தூரன் ஆகியோர் வழங்குவர். (இ

அருணகிரிக்கு உற்சவம் அனைவரும் வாரீர்

திரு நிறைந்த நல்லூரில் வீற்றிருக்கும் முருகனே
தீந்தமிழில் உன் புகழ்தனைப் பலர் பாடினாலும்
திருமுருகப் பெருமானைப் புகழ்ந்து போற்றுகின்ற
திருப்புகழ் மாலைக்கு வேறேதும் நிகராமோ
திருமகளுலாவும் இரு புயமுராரி திருமருக நாமப்
பெருமாள் காண் எனிறெல்லாம் துதிபாடும்
திருப்புகழ் இயற்றிக் தந்த அருணகிரிநாதருக்கு
அற்புதமாய் உற்சவம் அனைவரும் காண வாரீர்!

ஏழாலை மு.இந்திராணி.

கடைக் கண் கொண்டு பாராயோ!

ஆலமுண்ட ஆதிசிவன்
அருட் புதல்வனே குருபரனே

இன்னல் தீர்க்கும்
ஈஸ்வரின் திருமகனே

துதிப்பவர் துயர் களையும்
தும்பிக்கையானின் சோதரனே

கருணைக் கடலே கந்தனே
கதியற்று நிற்கும் எங்களை
கடைக் கண் கொண்டு பாராது
நிற்பது ஏனோ! முருகா

பாரதிதாசன் சத்யா
அல்வாய் வடக்கு.

நல்லைக் குமரப் "பா"

ஏற்றங் கண்டே யெம்மகமும்
எல்லாச் செல்வ எழிலுடனே
போற்றும் பெருமை யனைத்திலுமே
புகழ்பெற் றோங்கி நிறைந்ததுவே
சாற்றும் சாபக் கேடிதுவோ
சகலது மிங்கே மறைந்ததுவே
ஆற்றி மீண்டு முயர்வுபெற
அருளிவாய் நல்லைக் குமரப்பா!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்

பாரதம்

ரஃபேல் விமான முறைகேடு

நாடாளுமன்ற கூட்டுக்குழு அமைக்க மத்திய அரசு தயங்குவது ஏன்?

ராகுல் காந்தி கேள்வி

(சென்னை)

ரஃபேல் விமான முறை கேடு தொடர்பாக நாடாளு மன்ற கூட்டுக்குழு அமை க்க, மத்திய அரசு தயங்கு வது ஏன்? என ராகுல் காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

பண மதிப்பு நீக்கம் என் பது பிழை இல்லை என தெரிவித்த ராகுல், இவ்வா றான நடவடிக்கையானது இந்திய பொருளாதாரத்தின் மீதான தாக்குதல் என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பணமதி ப்பு நீக்க நடவடிக்கை எடுத் தமை எவ்வாறு தோல்விய டைந்தது என்பது பற்றி நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி விளக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

பா.ஜ.கவின் இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் பணக் காரர்களே அதிகளவில் பலன் களை பெற்றுள்ளார்கள் என் றும் ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார். (7)

ஹெலிகொப்டர் வி

படைவீரர்கள் உட

(அடிஸ் அபாபா)

எதியோப்பியாவில் இரா ணுவ ஹெலிகொப்டர் கீழே விழுந்து நொருங்கியதில் அதில் பயணம் செய்த படை வீரர்கள் உட்பட 18 பேர் பரிதாபமாக பலியாகினர்.

எதியோப்பியா நாட்டின் கிழக்கு பகுதியில் உள்ள டைர் டிவா நகரில் இருந்து பிஷோவட் நகர் நோக்கி இரா ணுவ ஹெலிகொப்டர் ஒன்று பறந்து சென்று கொண்டி ருந்தது.

அதில் 15 படைவீரர்கள் மற்றும் பொதுமக்கள் 3 பேர்

இரட்டைவேடம் போடுவது தி.மு.கவின் இயல்பு

ஜெயக்குமார் காட்டம்



(சென்னை)

இரட்டை வேடம் போடு வது தி.மு.கவின் வழக்கம் என அமைச்சர் ஜெயக்கு மார் தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலை யத்தில், நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் மேற்படி தெரிவித் துள்ளார். இதன்போது மேலும் தெரிவித்த அவர்,

இரட்டை வேடம் போடு வது தி.மு.கவின் வழக்கம். நினைவேந்தல் கூட்டத்து க்கு அமித் ஷாவுக்கு அழை ப்பு விடுத்தமை காங்கிரஸ் கட்சிக்கான எச்சரிக்கை என்று கூட சொல்லலாம். இதுபற்றி காங்கிரஸ்தான் கவனமாக இருக்க வேண்டும்.

கூட்டணி மாறுவதற்கு வசதியாக தி.மு.க. திட்டம் வகுத்துக்கொள்ளும் என்ப தில் மாறுபட்ட கருத்து கிடை யாது. (7)

பேருந்து விபத்தில் 10 பேர் உயிரிழப்பு

தென்னாபிரிக்காவின் கேப் டவுனில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற பேருந்து விபத் தில் சுமார் பத்து பேர் உயி ரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் அதி காலை 2 மணியளவில் குறி த்த விபத்து சம்பவித்துள்ள துடன், விபத்தில் 30 பேர் வரை படுகாயமடைந்துள்ள னர்.

சாரதி வாகனத்தின் கட் டுப்பாட்டை இழந்ததை தொட ர்ந்து பேருந்து தடை சாய் ந்ததிலேயே குறித்த விபத்து சம்பவித்துள்ளது.



ஆபிரிக்க கண்டத்தில் மிக நவீன வீதி வலைய மைப்புகள் காணப்படுகின்ற போதிலும், தென்னாபிரிக்காவில் வீதிப் பாதுகாப்பு மிக மோசமாகவே காணப்படுகிறது. (7)

பண மதிப்பிழப்பால் செல்வந்தர்களே பயனடைந்துள்ளனர் -ராகுல் காந்தி

(டில்லி)

பிரதமர் மோடியால் அறி விக்கப்பட்ட பண மதிப்பிழ ப்பு நடவடிக்கையால் செல்வ ந்தர்கள் மாத்திரமே அதிக பயனடைந்துள்ளனர் என காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கடுமையாக விமர் சித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி யால் அறிமுகப்படுத்தப்பட்ட பண மதிப்பிழப்பு நடவடிக் கையால், மக்கள் பெருமள வில் பாதிக்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்து ள்ள நிலையில், காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி நேற்று முன்தினம் வியாழ க்கிழமை செய்தியாளர்க ளைச் சந்தித்தார்.

இதன்போது, பணமதிப்பு நீக்கம் என்பது பிழை அல்ல. ஆனால் மோடியின் இந்த பண மதிப்பிழப்பானது இந் திய பொருளாதாரத்தின் மீதான தாக்குதல் என்றும் கூறியுள்ளார்.

எனவே, பணமதிப்பு நீக்க நடவடிக்கை தோல்வியடைந்தமை குறித்து நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி விளக்க வேண்டும் எனவும் ராகுல்காந்தி வலியுறுத்தினார்.

மேலும், மத்திய பா.ஜ.க. அரசின் பணமதிப்பு நீக்க நடவடிக்கையால் செல்வந்தர்கள் மாத்திரமே பலன டைந்துள்ளதாகவும், பணமதிப்பு நீக்க நடவடிக்கை கறுப்பு பணத்தை நல்ல பணமாக மாற்ற உதவியுள்ளதாக வும் ராகுல்காந்தி குற்றம்சாட்டியுள் ளார். (7)

ஸ்டாலினை தலைவராக ஏற்றுக்கொள்ளத் தயார்

அழகிரி திடீர் மனமாற்றம்

(டில்லி)

'தி.மு.கவில் என்னை சேர்த்துக் கொண்டால், ஸ்டா லினை தலைவராக ஏற்றுக் கொள்ளத்தயார்' என, மு.க அழகிரி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வியா ழக்கிழமை ஊடகவியலா ளர்களை சந்தித்த அழகிரி மேற்படி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

"தி.மு.கவுடன் இணைய நாம் எப்பொழுதும் தயாரா கவுள்ளோம். எனவே கட்சி யில் இணைவதாக முடிவெ டுத்த நாம், நிச்சயம் தி.மு.க. தலைவராக ஸ்டாலினை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும்.

கட்சியில் சேர்த்துக் கொள் ளாவிட்டால் எதிர்வரும் செப்டெம்பர் ஐந்தாம் திகதி இடம்பெறவுள்ள ஆர்ப்பாட் டத்தின் பின்னர் அடுத்தகட்ட முடிவை எடுப்போம்.

அத்துடன் தொண்டர்கள் அனைவரும் எம்முடன் தான் உள்ளனர். ஆகையினால் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று குறித்த பேரணியில் ஒரு இலட்சத்திற்கும் மேற் பட்டோர் கலந்து கொள்வார் கள்" என அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிட த்தக்கது. (7)

இஸ்ரேலில் இரசாயன

பத்தாயிரம் பயங்கர

ஐ.நா.சபை எச்சரிக்கை

(ஜெனிவா)

மில்லியன் கணக்கான மக்களின் உயிர்களைக் காவு கொள்ளக்கூடிய குளோ ரின் வாயுவினைக் கொண்ட இரசாயன ஆயுதமொன்றை இஸ்ரேல் வைத்திருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை எச்சரிக்கை விடுத்து ள்ளது.

ரஷ்யா, ஈரான், துருக்கி ஆகிய நாடுகளுக்கு ஐக்கிய நாடுகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அழை

வெளிநாடு

நொருங்கியதில் டமட 18பேர் பலி



என மொத்தம் 18 பேர் பயணம் செய்தனர்.

ஒரோமியா பகுதியில் வந்தபோது, ஹெலிகொப்டர் திடீரென கீழே விழுந்து நொருங்கியது. இந்த விபத்தில் ஹெலிகொப்டரில் பயணம் செய்த 18 பேரும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியாகினர் என செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

ஹெலிகொப்டர் விபத்து குறித்து அந்நாட்டு இராணுவம் விசாரணை நடத்தி வருகிறது. (7)

வடகொரியாவுடன் நல்லுறவு; தென்கொரியாவுடன் போர்ப்பயிற்சி தேவையில்லை- ட்ரம்ப் தடாலடி



(வோஷிங்டன்)

வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னுடன் தனக்கு நல்ல உறவு உள்ளதாகவும், தென் கொரியாவுடன் போர்ப்பயிற்சியை மீண்டும் நடத்துவதற்கு அவசியம் ஏற்படவில்லை என்றும் ட்ரம்ப் டுவிட்டரில் கூறி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர்மைக்போம்பியோ, வடகொரியாவுக்கு இந்த வாரம் மேற்கொள்ள இருந்த பயணத்தை ஜனாதிபதி ட்ரம்ப் திடீரென ரத்து செய்தார்.

சிங்கப்பூர் உச்சி மாநாட்டில் அளித்த வாக்குறுதிப்படி, அணு ஆயுதங்களை முழுமையாக கைவிடுவது தொடர்பான வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் மேற்கொள்ளும் நடவடிக்கையில் முன்னேற்றம் இல்லை என்பதால்தான், மைக் போம்பியோ பயணத்தை ட்ரம்ப் ரத்து செய்தார் என தகவல்கள் வெளிவந்தன.

இந்த நிலையில், வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னுடன் தனக்கு நல்ல உறவு உள்ளதாகவும், தென் கொரியாவுடன் போர்ப் பயிற்சியை மீண்டும் நடத்துவதற்கு அவசியம் ஏற்படவில்லை என்றும் ட்ரம்ப் டுவிட்டரில் கூறி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

அதே நேரத்தில் வட கொரிய விவகாரத்தில் சீனாவை ட்ரம்ப் சாடி உள்ளார்.

இது பற்றி அவர் டுவிட்டரில் குறிப்பிடுகையில், "வட கொரியாவுக்கு சீனா மிகுந்த அழுத்தம் அளித்து வருகிறது என்று நம்புகிறேன்.

மேலும் பீஜிங், வடகொரியாவுக்கு எரிபொருள், உரம், பலசரக்குகள் சப்ளை செய்தும் வருகிறது" என கூறப்பட்டுள்ளது. (7)

மெக்சிக்கோவில் கோரவிபத்து 7பேர் உயிரிழப்பு

(நியூ மெக்சிக்கோ)

நியூ மெக்சிகோவில் பொதுமக்களை ஏற்றிச் சென்ற பேருந்தொன்று சிறிய ரக ட்ரக் வாகனமொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. குறித்த விபத்தில் 7 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை மெக்சிக்கோ தலைநகர் நியூ மெக்சிக்கோவின் நெடுஞ்சாலையில், அமெரிக்காவின் சென் பிரான்சிஸ்கோ மாநிலத்திலுள்ள கிரேஹவுன்ட் நகரை நோக்கிப் பயணித்த

பேருந்தே விபத்திற்குள்ளாகியுள்ளது.

குறித்த பேருந்தில் 49 பயணிகள் சென்றுள்ளனர். விபத்தில் சுமார் 7 பேர் உயிரிழந்தனர். (7)

நீட் தேர்வுக்கு அடுத்த ஆண்டில் இலவசப்பயிற்சி வழங்கத் திட்டம்

(டில்லி)

மருத்துவகற்கைக்குநுழைவதற்கான நீட் நுழைவுத் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு அடுத்த ஆண்டுகள் முதல் இலவச பயிற்சிகளை வழங்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

உயர்கல்வித் துறையில் நுழைவு தேர்வுகளை நடத்துவதற்கு தேசிய போட்டி தேர்வு முகமை என்ற அமைப்பை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது.

அந்தவகையில், நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள 2697 மையங்களை நீட் பயிற்சி மையங்களாக மாற்றி மாணவர்களுக்கு இலவச பயிற்சி வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. (7)

அமெரிக்க பாராளுமன்றத்தில் கலைஞர்



(வோஷிங்டன்)

அமெரிக்க பாராளுமன்றத்தில் மறைந்த தி.மு.க. தலைவர் கருணாநிதியின் மறைவுக்கு இலங்கை உட்பட பல நாடுகளும் அஞ்சலி செலுத்தின.

இந்த நிலையில் அமெரிக்க பாராளுமன்றத்தில் கருணாநிதிக்கு அஞ்சலி செலுத்தும் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இந்தத் தீர்மானத்தை அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர் டெனிகே டெவிஸ் கொண்டு வந்திருக்கிறார்.

அதில், "அமெரிக்க வாழ் தமிழர்கள் பலர் இந்த சிறந்த நபரைப் பற்றி எனது கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இது தொடர்பில் தி.மு.க. தனது டுவிட்டர் பக்கத்தில் அமெரிக்க பாராளுமன்றத்துக்கு நன்றி தெரிவித்து பதிவிட்டுள்ளது. (7)

ஐ.எஸ்.பயங்கரவாதிகளுக்கு உதவிய அமெரிக்க விமானப்படை அதிகாரிக்கு 25 ஆண்டுகள் சிறைத் தண்டனை

(வோஷிங்டன்)

ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு உதவிய குற்றத்துக்காக அமெரிக்க விமானப் படை அதிகாரிக்கு 25 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

அமெரிக்க விமான படையின் வான்வழி போக்குவரத்து கட்டுப்பாட்டு அதிகாரியாக பணிபுரிந்தவர் இகாய்கா எரிக்காங் (வயது-35).

இவர் ஈராக் மற்றும் ஆப் கானிஸ்தானில் அமெரிக்க படைகள் முகாமிட்டிருந்த போது அங்கு பணிபுரிந்தார். அப்போது ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு பல்வேறு வழிகளில் உதவி செய்தார்.

அதன் பிறகும் அவர் ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்பில் இருந்தார். அதை அமெரிக்காவின் 'எப்.பி.ஐ.' உளவு நிறுவனம் கண்டுபிடித்தது.

கடந்த ஆண்டில் ஒகுவில் உள்ள ஸ்கோ பீல்டு இராணுவ அலுவலகத்தில் கைது செய்யப்பட்டனர்.

அவர் மீது ஹவாய் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிமன்றம் இவரை குற்றவாளி என அறிவித்து 25 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது. (7)

ன வெடிபொருளுடன் ரவாதிகள் உள்ளனர்

ப்பு விடுத்திருந்த நிலையிலேயே ஐ.நா. இந்த எச்சரிக்கையினை விடுத்திருந்தது.

இஸ்ரேல் நாட்டின் இட் லிப் நகரில் உள்நாட்டு, வெளிநாட்டைச் சேர்ந்த 10 ஆயிரத்திற்கும் அதிகமான பயங்கரவாதிகள் இருப்பதாக தகவல் கிடைத்துள்ளன.

எனவே இவர்கள் தங்களுடன் இருக்கும் ஆயுதங்களை வைத்து பொது மக்களை கொலை செய்யக் கூடாது என்றும் மனிதாபிமானமாக செயற்பட வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகளுக்கான இஸ்ரேல் தூதுவரான ஸ்டெஃபென் டீ மிஸ்டூரா ஊடகங்களுடன் கருத்து தெரிவித்துள்ளார். (7)

உலக வர்த்தக அமைப்பிலிருந்து அமெரிக்காவை விலக்கிக் கொள்வேன் ட்ரம்ப் மிரட்டல்

(வோஷிங்டன்)

உலக வர்த்தக அமைப்பிலிருந்து அமெரிக்காவை விலக்கிக் கொள்ளவுள்ளதாக, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அச்சுறுத்தியுள்ளார்.

அமெரிக்காவை நடத்துகின்ற விதத்தில் உலக வர்த்தக அமைப்பு தோல்வியடையும் பட்சத்தில் தாம் இத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஓவல் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அமெரிக்க ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உலக வர்த்தக அமைப்பினால் அமெரிக்கா நியாயமற்ற விதத்தில் வழிநடத்தப்படுவதாக பாதுகாப்புவாத கொள்

கைகளை நடைமுறைப்படுத்திவரும் ட்ரம்ப் தெரிவித்தார்.

ட்ரம்பின் இந்த எச்சரிக்கையானது, ஜனாதிபதியின் வர்த்தக கொள்கைகளுக்கும், உலக வர்த்தக அமைப்பின் மேற்பார்வையிலான திறந்த வர்த்தக அமைப்பிற்கும் இடையிலான மோதலை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

உலகளாவிய வர்த்தகத்திற்கான விதிகளை ஏற்படுத்துவதற்காகவும், நாடுகளுக்கு இடையிலான முரண்பாடுகளை தீர்க்கும் நோக்கிலும் உலக வர்த்த அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

இராணுவத்தில் நாற்பது வீதமானோர் போர் முடிந்த பின் இணைந்தவர்கள்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் தற்போதைய ஆளணியிலுள்ள நாற்பது வீதமானோர் போர் முடிவுக்கு வந்த பின்னர் படையில் சேர்ந்து கொண் டவர்கள் என்று இராணுவத்தின் கிளி நொச்சி படைத் தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் நிசங்க ரணவான தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவம் நடத்தவுள்ள 'நீர்க்காகம்' கூட்டுப் பயிற்சி தொடர்பாக விளக்கமளிக்க கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

"இலங்கை இராணுவத் தில் தற்போதுள்ளவர்களில் நாற்பது வீதமானோர் 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னர் இணைத்துக் கொள்ளப்பட்டவர்களாவர்.

போர் முடிந்த பின்னர் இராணுவத்தில் இணைந்து கொண்ட இவர்களுக்கு 'நீர்க்காகம்' கூட்டுப் பயிற்சி, ஒரு பெறுமதி மிக்க இரா ணுவப் பயிற்சிக்கான சிறந்த அடித்தளமாக இருக்கும்.

எதிர்காலத்தில் நாட்டு க்கோ மக்களுக்கோ ஏற்படக் கூடிய சவால்களை எதிர் கொள்வதற்கு இராணுவப் பயிற்சிகள் அவசியம்" என் றும் அவர் தெரிவித்துள் ளார். (இ-7)

"கூட்டு எதிரணியின் பேரணியில் சில ஐ.தே.கவினரும் இணைவர்"

காஞ்சன விஜேசேகர எம்.பி.தகவல்

(கொழும்பு)

கூட்டு எதிரணியினர் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஏற்பாடு செய்துள்ள மக்கள் எழுச்சிப் பேரணியில் கூட்டு எதிர்க் கட்சியினர் மாத்திரமல்லாது, ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு தரப் பினரும் இணைந்து கொள் ளவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் காஞ்சன விஜே சேகர தெரிவித்துள்ளார்.

பொறளை என்.எம். பெரேரா நிலையத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கூட்டு எதிரணியின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்து ள்ளார்.

மேலும், கூட்டு எதிரணி யின் இந்தப் பேரணியால் செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதி முழுக் கொழும்பும் ஸ்தம்பிதமடைவதனால் அன்றையதினம் அலுவல கங்களில் தமது தேவை களைப்பூர்த்தி செய்வதற்கு எவராவது திட்டமிட்டிருப் பின் அவர்கள் அந்த பணியினை வேறு ஓர் தின த்திற்கு மாற்றிக் கொள் ளுமாறும் கேட்டுக் கொண் டுள்ளார்.

அத்துடன், அன்றைய தினம் பாடசாலைகளை நடத்துவதிலும் சிக்கல் ஏற்படும் என்றும் தெரிவித்த



அவர், மக்கள் எழுச்சிப் பேரணியை முடக்குவதற்கு அரசாங்கம் பல்வேறு சதி முயற்சிகளில் கவனம் செலு த்தி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

திருமண மண்டபமாக மாறிய அலரிமாளிகை

(கொழும்பு)

பிரதமரின் வாசஸ்தல மான அலரிமாளிகை தற் போது திருமணங்களை நடத்தும் மண்டபமாக மாறி யுள்ளது என கூட்டு எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பியல் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கை யில்,

அலரிமாளிகை தானம் வழங்கும் இடமாக மாற் றப்பட்டுள்ளது என கடந்த காலங்களில் குற்றம் சுமத் தினர்.

எனினும், தற்போது அது திருமணம் நடத்தப்படும் மண்டபமாக மாறியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பி னர் சத்துர சேனாரட்னவுக்கு திருமண வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கி றேன்.

மேலும் வரி செலுத்தும் மக்களுக்கு நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன் எனத் தெரிவித்தார். (இ-7)

சிங்கள பௌத்தன் என்ற வகையில் ஞானசாரரை சிறைசென்று சந்திப்பேன்

சு.க. அமைச்சர் துமிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

சிங்கள பௌத்தன் என்ற வகையில் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை பார் வையிடச் செல்வேன் என அமைச்சர் துமிந்த திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடக மொன்று எழுப்பிய கேள் விக்கு பதிலளித்த போது அவர் இதனை தெரிவித் துள்ளார்.

நீதிமன்றை அவமரி யாதை செய்த குற்றச்சாட்டின் பேரில் தண்டனை விதிக் கப்பட்டுள்ள ஞானசார தேரரை பார்வையிடத் திட்ட மிட்டுள்ளேன்.

எதிர்வரும் நாட்களில் சிறைச்சாலைக்குச் சென்று ஞானசார தேரரை பார்வை யிடுவேன்.

ஆளும் கட்சியின் அமை ச்சர் என்ற ரீதியில் நான் சிறைச்சாலைக்கு செல்லப் போவதில்லை.

சிங்கள பௌத்தன் என்ற வகையில் நான் ஞானசார தேரரை பார்வை யிடச் செல்வேன்.

ஏற்கனவே சிறைச்சா லைக்குச் சென்று ஞானசார தேரரை பார்வையிட் டேன்.

மீண்டும் ஒரு தடவை அவரை பார்வையிடுவதற்கு எவ்வித தடையும் கிடை யாது என துமிந்த திஸா நாயக்க மேலும் தெரிவித் துள்ளார். (இ-7)

இன்று ஒரு தகவல்

ஓசி கேட்பவர்களுக்கு சில கேள்விகள்

சிலருக்கு ஓசியில் ஏதும் கிடைத்தால் போச்சு! எல்லையோ வரையறையோ இல்லாமல் எதைப் பற்றியும் கவலைப் படாமல் அதைப் பயன்படுத்திக் கொள் வார்கள்.

பக்கத்து வீட்டிலிருந்து வாக்கியூம் கிளினர் (காற்றின் உதவியுடன் ஒட் டறை மற்றும் தூசியைச் சுத்தப்படுத்தும் கருவி) ஒன்றை ஓசியில் வாங்கி வீட்டைச் சுத்தப்படுத்தினார் இந்த வீட்டு அம்மணி.

குற்றுயிரும் குலையுயிருமாய் இய ங்கிக் கொண்டிருந்த அதன் மோட்டர், இந்த அம்மணி வாங்கிய நேரம் பார்த் துப் பிராணனை விட்டு விட்டது! நானாச்சு ரிப்பேர் செய்து தர! என்று சொல்லத் திராணியற்ற குடும்பக் கஷ் டம் வாங்கிப் போன அம்மணிக்குக் கொடுத்தவருக்கும் வாங்கி யவருக் கும் இடையே வார்த்தைகள் தடிக்க, உறவே அறுந்து விட்டது.

அந்த அம்மணிகள் இருவரும் இப் போது உர்உர் என்கிறார்கள். பேசாமல் துடைப்பத்தை மட்டுமே பயன்படுத்தியிரு க்கலாம்!

ஓசி கேட்பவர்களுக்குச் சில கேள் விகளை முன் வைக்கிறேன்.

• ஓசியில் உங்களுக்கு ஒன்றைச் செய்தவர்கள் உண்மையில் மனப்பூர் வமாகச் செய்தார்களா? அல்லது கட் டாயத்தின் பேரிலோ வேறு வழியில்லா மலோ செய்தார்களா?

• ஓசியில் கொடுத்து உதவியவர்கள், பதிலுக்கு உங்களால் செய்ய முடியாத உதவியைக் கேட்டால் என்ன செய்வீர் கள்?

• ஓசியில் கிடைக்கிறது என்பதற்காக ஒன்றைப் பெற்றுத்தான் ஆக வேண் டுமா? அது இன்றிச் சமாளிக்கவே முடியாதா?

• ஓசியில் கொடுத்து உதவியவர்க ளுக்கு பொன்னை வைக்கிற இடத்தில் பூவை வைப்பது போலக் கொஞ்சமா வது பதிலுக்கு ஏதாவது உதவுவது உண்டா, இல்லை ஒரு வழிப்பாதை தானா?

• கவலையேபடாமல், கொஞ்சங்கூட யோசிக்காமல் ஓசி கேட்கிற மனிதர் என்று நீங்கள் பெயர் எடுத்திருக்கிறீர் களா? அல்லது வழியில்லாவிட்டால் தான் அதுவும் தயங்கித் தயங்கித்தான் கேட்பார் என்று பெயர் எடுத்திருக்கிறீர் களா?

• ஓசி வாங்கிச் சென்று திரும்பத் தந்த பொருள் பற்றி, நீங்கள் நடந்து கொண்ட விதம் பற்றி அவர்களுக்குச் சிறு மன வருத்தம் கூட இல்லையா? இவற்றுக்கான பதில்கள் எதிராளிக்குச் சாதகமானவையாக இருந்தால் தாரா ளமாக ஓசி கேளுங்கள்.

லேனா தமிழ்வாணன்



யாழ். மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழுவால் யாழ். விருது - 2018 வழங்கிக் கௌரவிக்கப்பட்ட தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பொறுப்பாளர் செ.மோகனதாஸ் சுவாமிகளுக்கான பாராட்டு விழா நேற்று வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெற்றது. (படங்கள்:- மகாலிங்கம்)

நாடகமும் அரங்கியலும் மாணவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் இருநாள் பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் கடந்த பல ஆண்டுகளைப் போல் இவ்வாண்டும் க.பொ.த.உயர் தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் எழுத்துப் பரீட்சைக்கு தோற்றி விரைவில் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இருநாள் பயிற்சிப்பட்டறை இம்மாதம் (செப்டெம்பர்) 08 ஆம் , 09 ஆம் (சனி,ஞாயிறு) திகதிகளில் காலை 9 மணிமுதல் மாலை 2.30 மணிவரை இல. 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தாது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் இம்மாதம் 07 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் தமது பெயர், விபரங்களைப்பதிவுசெய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

நெல்கொள்வனவு அளவு அதிகரிப்பு

(கொழும்பு)

இம்முறை சிறுபோக நெற்பயிர்ச்செய்கை மூலம் அறுவடை செய்யப்பட்ட நெல் கொள்வனவின் போது ஒரு விவசாயியிடமிருந்து பெறும் நெல்லின் அளவு அதிகரிக் கப்பட்டுள்ளதாக விவசாயத் துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அதன்படி 2000 கிலோ கிராமிலிருந்து 3000 கிலோ கிராமாக அது அதிகரிக்கப் பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

'சுகானுபவம் VII' நடன அளிக்கை

(யாழ்ப்பாணம்)

வட மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் யாழ். இந்தியத் துணைத் தூதரகமும் இணைந்து வருடம் தோறும் நடத்தி வரும் " சுகானுபவம் VII" நிகழ்வில் நடனக் கலைஞர் ஸ்ரீமத் ஊர்மிளா சத்திய நாராயணன் குழுவினருடன் இணைந்து நடத்தும் நடன அளிக்கை மற்றும் பயிற்சிப் பட்டறை ஆகியன எதிர்வரும் 4 ஆம், 5 ஆம் மற்றும் 6 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல 12 மணிவரை பயிற்சிப் பட்டறையும் 5 ஆம் திகதி புதன்கிழமை யாழ். நல்லூர் சங்கிலியன்தோப்பில் மாலை 6.30 மணி முதல் வய்லின் கலைஞர் கோபிதாஸின் வயலின் இசைக் கச்சேரியும் நடனக் கலைஞர் ஸ்ரீமத் ஊர்மிளா சத்திய நாராயணன் நடன அளிக்கையும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி வியாழக்கிழமை வவுனியா நகர சபை மண்டபத்தில் முற்பகல் 10 மணிதொடக்கம் நண்பகல் 12 மணிவரை, மாலை 4.30 மணிமுதல் மாலை 6.30 மணிவரை என இரு அமர்வுகளாக பயிற்சிப்பட்டறையும் நடன அளிக்கையும் நடைபெறவுள்ளன. (இ-7)

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 03.08.2018 வெள்ளிக்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு
அமரர்
வல்விபுரம் சிவலிங்கம்

மண்ணில்:- 15.08.1955 விண்ணில்: 03.08.2018

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 02.09.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 4 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறுவதுடன் முற்பகல் 11 மணியளவில் சபிண்டீகரணக் கிரியைகள் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

விழுந்தாலடி
கரணவாய், கரவெட்டி.
077 918 5265

(சி-369)

தகவல் :
குடும்பத்தினர்

பாதிக்கப்பட்ட எம்மை சர்வதேசம் ஏற்க மறுப்பு; பாதிப்பை ஏற்படுத்தியவர்களை ஒருதரப்பாக ஏற்கிறது

அமைச்சர் அனந்தி ஆதங்கம்

(கண்டாவளை)

பாதிக்கப்பட்ட எங்களுடைய தரப்பை ஒருதரப்பாக ஏற்றுக்கொள்ள சர்வதேசம் தயாராக இல்லை. ஆனால் பாதிப்புக்களை ஏற்படுத்திய இலங்கை அரசாங்கத்தை ஒரு தரப்பாக சர்வதேசம் ஏற்கின்றதென வடக்கு மாகாண மகளிர்விவகார அமைச்சர் அகந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச காணாமலாக்கப்பட்டோருக்கான தினத்தையொட்டி கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச்சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு கூறுகையில்,

வருகின்ற செப்ரெம்பர் மாதம் ஐ.நா.மன்றத்தில் மனித உரிமைகள் தொடர்பான கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ளது.

போர் முடிந்தும் ஒன்பது வருடங்கள் கடந்த நிலையிலும் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான எந்த ஒரு வினைத்திறனான கடமையும் அரசாங்கம் செய்யாமல் ஒரு பொறுப்பு கூறல்களை செய்ய முடியாதவர்களாக பல அமைப்புக்களை தோற்றுவிப்பது மட்டுமல்ல பலகோடி ரூபா செலவில் ஆணைக்குழுக்களை நியமித்தும் எந்தவித முன்னேற்றத்தையும் காட்டவில்லை.

வருடந்தோறும் நடந்து கொண்டிருக்கின்ற ஐ.நா. மனித உரிமைக்கூட்டத் தொடரில் இந்த வருடமும் எந்தவொரு முன்னேற்றத்தையும் இந்த அரசு செய்து விடவில்லை என்று எடுத்துச் சொல்லப்போகின்றோம்.

ஆனால், தாமதிக்கப்படுகின்ற நீதி எங்களுக்கு நீதியை சொல்லாமல் செல்கின்ற ஒரு செயற்றிட்டமாக அரசு கொண்டு வந்திருக்கின்றது.

இன்று ஆயிரத்திற்கும் மேற்பட்ட எங்கள் உறவுகளை நாங்கள் காணாமலாக்கப்பட்டவர்களாக கொடுத்துவிட்டு இன்று எங்களுடன் இந்த பிரச்சினை தீரப்போவதில்லை. தொடர்ந்தும் எங்களது பிள்ளைகள் இந்த காணாமலாக்கப்பட்டவர்களுடைய போராட்டத்தையும் இந்த நீதி கோருகின்ற செயற்பாட்டையும் முன்னெடுக்க வேண்டியவர்களாகத்தான் இருக்கின்றனர்.

இன்று காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், தாய்மார்கள் நோய், ஏழ்மை, உளவியல் தாக்கம் என்று ஒட்டுமொத்த பாதிப்புக்களுக்கும் உள்ளாகியிருக்கின்றனர். ஆனாலும் கூட எத்தனை வருடங்கள் கடந்தாலும் தங்களுடைய பிள்ளைகளுக்கு தங்களது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை கண்டறிவதற்கு ஒன்று கூடியுள்ளனர்.

காணாமல் போனவர்களுக்கான அலுவலகம் நட்ட ஈடுவழங்குவதற்காகவா? அல்லது புள்ளிவிபர கணக்கெடுப்பிற்காகவா? ஒட்டுமொத்த சர்வதேசத்தையும் ஏமாற்றுகின்ற வகையில் இரண்டு வருட கால அவகாசம் எதிர்வரும் மார்ச் மாதத்தில் முடிவடைகின்றது.

பாதிக்கப்பட்ட எங்களுடைய தரப்பை ஒருதரப்பாக ஏற்றுக்கொள்ள சர்வதேசம் தயாராக இல்லை, ஆனால், பாதிப்பை ஏற்படுத்திய அரசாங்கத்தை ஒரு தரப்பாக சர்வதேசம் ஏற்றுள்ளது. எனவே இந்த நிலைமை மாற வேண்டும்.

பல சர்வதேச நாடுகள் எங்களுக்கு ஒருநீதியை பெற்றுத்தருவதாக ஒரு மாயையைக்காட்டி எங்களுக்குள் நுழைந்து இன்று ஐ.நா. அரங்கில் இருந்து வெளியேறிய வர்களாக இருக்கின்றனர்.

எங்களுக்காக தீர்வுகளுக்கு கலப்பு பொறிமுறை

என்றதை உருவாக்கி அதனை தீர்த்துப்போக செய்துவிட்டு தற்போது உள்நாட்டுப்பொறிமுறை என்ற அடிப்படையில் அதுவும் தீர்வுகளை பெற்றுத்தராத ஒன்றாக மாறியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

எண் 5 (புதன்)

(வியாபார வித்தகன்)

5 ஆம் எண்காரர்களின் அதிர்ஷ்டக் கையெழுத்து

பெயரை அதிர்ஷ்டமாக அமைத்துக்கொண்ட இவர்கள் தங்கள் கையெழுத்தையும் வசியமாக்கிக்கொண்டு வளமான தொழில், வசதியான வாழ்க்கையைப் பெறலாம். கையை எடுக்காமல் கையெழுத்திட வேண்டும். மிக நெருக்கமான கையெழுத்தால் விரயங்கள் குறையும். சுறுசுறுப்பு அதிகமாகும். சேமிப்புகள் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு, கருத்தொருமித்த காதல், நண்பர்களால் நன்மைகள், வியாபார விருத்தி, ஆட்சி செய்யும் யோகம் போன்றவையும் அமையும். ஆரம்பம் முதலே வலப்புறமாச் சுழித்துக் கையெழுத்திட வேண்டும். புதன் ஆதிக்க எழுத்துக்களை தெளிவாகக் குறியிட வேண்டும். 5 செ.மீ.நீளமுள்ள கையெழுத்து நீடித்த பலன்களைத் தரும். 23 டிகிரிக்குள் கையெழுத்திட வேண்டும். கீழ்நோக்கி எந்த எழுத்தையும் குறியிடக்கூடாது. உடுக்கை, ரம்பம், நடன மங்கை, நட்சத்திரங்கள் போன்ற குறியீடுகள் உயர்ந்த அந்தஸ்தான வாழ்க்கை வாழச் செய்யும். கையெழுத்தின் அடியில் புள்ளியோ, கோடுகளோ அமைத்துக் கையெழுத்திடக் கூடாது.

5 ஆம் திகதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்

சிறு வயதிலேயே பெரிய பெரிய விடயங்களால் கவரப்படுவார்கள். பிறரை மதிக்கும் பண்பு சிறு வயது முதலே அமைந்துவிடும். அனைத்து மேலான நற்பண்புகளையும் உடையவராக இருப்பார்கள். கலைகளில் மிகுந்த பிரியமுடையவராக இருப்பார்கள். அமானுஷ்ய சக்திகள் கொண்டவராக இருப்பார்கள். மனதில் பெரிய இலட்சியத்துடன் வாழ்வார்கள். நீண்டகாலமாகப் போராடி இலட்சியத்தை அடைவார்கள். தெய்வீக நம்பிக்கை அளவு கடந்து இருக்கும். பிறருக்குப் போதனைகள் செய்வார்கள். தெய்வீகமான வாழ்க்கை வாழ்வார்கள். ஆன்மீக விடயத்தில் அதிகமான நம்பிக்கை உண்டாகும். அனைத்துத் தரப்பினரையும் மதிக்கும் மனிதாபிமானம் உள்ளவராவார்கள். நல்ல வசிகரமான சக்தியிருக்கும். நண்பர்களிடத்தில் நன்மதிப்பு இருக்கும். மக்களை எளிதில் வசியப்படுத்துவார்கள். வாழ்க்கையில் முன்னேறக் கஷ்டப்பட்டு உழைப்பார்கள். அடிக்கடி தொழிலில் மாற்றத்தை உண்டு பண்ணுவார்கள்.

கவர்ச்சிகரமான தோற்றமும் பேச்சும் கம்பீரமும் தொழில் மேன்மையும் இருக்கும். தனது சுய அறிவைப் பயன்படுத்திக் காரியம் சாதிப்பார்கள். மற்றவர்களின் கருத்துக்குச் செவி சாய்க்க மாட்டார்கள். நட்பு உதவும். நல்ல அந்தஸ்து, புகழுடன் வாழ்வார்கள். அடிக்கடி பிரயாணங்கள் மேற்கொள்வார்கள். பலருக்கு ஆசானாக இருப்பார்கள். பண்டைய சாஸ்திரங்களில் நம்பிக்கை கொள்வார்கள். பல வித்தைகள் கற்றவர்கள். எதையும் விரைவில் அறிந்து கொள்ளும் மதிநுட்பமிக்கவர்கள்.

14 ஆம் திகதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்

பல கலைகளில் தேர்ச்சி பெற்ற இவர்கள் சுய முயற்சியால் பொருள் சேர்க்கும் அதிர்ஷ்டமுடைய நபர்கள். செய்தொழிலில் நிகரற்ற இலாபமடைவார்கள். புகழ் மிக்க தொழில் செய்வார்கள். மக்கள் தொடர்பு உடைய தொழில்கள் செய்வார்கள். பிரயாணத்தில் அதிக விருப்பமிருக்கும். ஒருவிதமான வித்தியாசமான பிடிவாத குணமிருக்கும். எவ்வளவு பெரிய வியாபாரமும் செய்து பொருள் ஈட்டலாம். பணப் புழக்கம் அதிகரிக்கும். இவர்களைச் சுற்றிலும் மக்கள் கூட்டம் இருந்து கொண்டேயிருக்கும். பிறரை நம்பினால் பெருத்த நட்டமுண்டாகும். நிகரற்ற இலாபத்தை ஈட்ட முடியும். காதல் விடயத்தில் எச்சரிக்கை தேவை. வீண் கெட்ட பெயரை உண்டாக்கும். அவமானம் வந்து சேரும். கொடுக்கல்-வாங்கல் அதிகமிருக்கும். எந்த நேரமும் கையிலும் பையிலும் பணம் புரண்டு கொண்டிருக்கும். சுற்றத்தவரும் தக்க சமயத்தில் உதவி செய்வார்கள். பல தொழில் செய்வார்கள். அடிக்கடி வெளியூர், வெளிநாடு பயணமிருக்கும். பொருள் சேர்ப்பதில் சாமர்த்தியசாலிகள். எப்போதும் மாறாத பிடிவாத குணமிருக்கும். இவர்களைச் சுற்றி ஒரு மக்கள் கூட்டம் எப்போதுமிருக்கும். அரசியல், சினிமா, கலைத்துறைகளில் பெரிதும் ஆர்வமிருக்கும். பெரியோரின் ஆதரவுகள் கிடைக்கும். பிறரை நம்பினால் பெருத்த நட்டம் உண்டாகும். தனது நேரடிப்



பார்வையில் தொழில் செய்ய வேண்டும். மன வேகம் அதிகம். எண்ணத்தின் கருத்திற்குச் செல்வடிவம் கொடுப்பார்கள். போட்டி பந்தயங்களில் ஆர்வமிருக்கும். புரட்சிகரமான கருத்துடையவர்கள். குடும்ப வாழ்க்கை இனிமையாக இருக்கும். மழை, மின்னல், இடி, வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களால் ஆபத்துக்கள் உண்டாகும். உயிருள்ளவரை பிறருடைய உதவி இவர்களுக்கு உண்டு. குன்றாத அதிர்ஷ்டசாலிகள்.

23 ஆம் திகதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்

மிகுந்த தன்னம்பிக்கை உடையவர்கள். இவர்களால் சாதிக்க முடியாதது என்று உலகில் எதுவும் இல்லை. செயற்கரிய செயல்கள் செய்து பலரது பாராட்டையும் பெறுவார்கள். இவர்களின் சொல்லுக்கு மற்றவர்கள் வசியமாகிவிடுவார்கள். கூட்டத்தின் தலைவன், மக்களின் மாவீரன் என்று பெயரெடுக்கும் ஆற்றலுடையவர்கள். மிதமிஞ்சின இராஜவசியமும் ஜனவசியமும் உடையவர்கள். இவர்களைவிட மேலான நிலையில் உள்ளவர்கள் இவர்களைப் புகழ்வார்கள். இவர்களின் உதவியை நாடுவார்கள். பெயர் சரியாக அமைந்தவர்கள் உலகையே ஆண்டு விடுவார்கள். சரித்திரம் போற்றும் மகான்களாவார்கள். ஆட்சியில் இருப்போரின் ஆதரவுகள் கிடைக்கும். பெரியோர்களின் பாராட்டுக்கள் கிடைக்கும். வரலாறு படைப்பார்கள். புரட்சி நாயகனாக இருப்பார்கள். கலைகளில் தேர்ச்சியுண்டாகும். இவர்களிடம் ஒருவித ஞானமிருக்கும். மற்றவருக்கு வழிகாட்டியாக இருப்பார்கள். தான தர்மங்களைத் தன்னால் முடிந்த அளவு செய்வார்கள். மற்றவர்களால் சாதிக்க முடியாததைச் சாதித்துக் காட்டுவார்கள். வரலாற்றில் இடம் பிடிப்பார்கள். மன சாந்தியை விரும்புவார்கள். ஆன்மீக ஈடுபாடு இருக்கும். தனிமையில் அதிக சிந்தனையிருக்கும். இயற்கைக் காட்சிகளையும் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களையும் சுற்றிப் பார்ப்பார்கள். எங்கு சென்றாலும் மதிப்பும் கௌரவமும் இருக்கும். சில நேரங்களில் எதிர்பாராத அதிர்ஷ்டம் கிடைக்கும். நல்ல நடத்தை உடையவராக இருக்க வேண்டும். தத்துவத்தில் ஆராய்ச்சியும் விஞ்ஞான அறிவுமிருக்கும். தானாகப் பல பெரிய பதவிகள் தேடிவரும். இராஜகம்பீரம் உடையவர்கள். பொதுவாழ்வில் தன்னை அர்ப்பணித்துக் கொள்வார்கள்.

(தொடரும்....)

இலங்கையில் தமிழர்

ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

33

கலாநிதி மு.குணசிங்கம்

> “தமிழர்கள் சைவத்தையும் பௌத்தத்தையும் ஆதரிப்பவர்களாகவும் அம்மதங்களைச் சார்ந்தவர்களாகவும் இருந்திருக்கின்றார்கள் என்பதனையும்இக்கல்வெட்டுகள்காட்டிநிற்கின்றன. அடுத்ததாக, தமிழர்கள் அநுராதபுர இராச்சியப் பிரதேசத்தில் அல்லது அநுராதபுர நகரில் செல்வாக்கும் அதிகாரமும் உடையவர்களாக அக்கால கட்டத்தில் இருந்திருக்கின்றார்கள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது”

ஓர் இருண்ட வரலாற்றுக்காலம் (கி.மு. 300-கி.பி. 900)

இதேபோன்று, தமிழ் கல்வெட்டுகளில் முக்கியமானது நான்கு நாட்டார் கல்வெட்டு. இதுவும் அநுராதபுரப் பகுதியில் உள்ள சைவசமய நிறுவனங்களின் அழிபாட்டுப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டது. இக்கல்வெட்டு, மாக்கோணப் பள்ளி என்னும் நிறு வனத்தின் அறக்கட்டளையின் விபரங்களை பற்றியதாகும். இதன் ஒரு பகுதி தமிழிலும் மறு பகுதி சமஸ்கிருத மொழியிலும் உள்ளது. இக்கல்வெட்டும் மிகவும் சிதைந்த நிலையிலேயே காணப்படுவதால் முற்றாக அதனை ஆய்வாளர்களால் வாசிக்க முடியவில்லை.

அடுத்து மிக முக்கியமாகக் குறிப்பிடக்கூடிய கல்வெட்டு அநுராதபுரத்தில் 1892ஆம் ஆண்டு அகழ்வு செய்யப்பட்ட போது எடுக்கப்பட்ட, குமார கணத்துப் பேரூராரின் தமிழ் கல்வெட்டு ஆகும். இது பொதுவாக கி.பி.750-கி.பி.850 காலப்பகுதிக்குரியது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இக்கல்வெட்டு முக்கியமாக சேக்கிழான் செட்டி சிங்கன், என்பவனும் சேக்கிழான் சென்னை என்பவனும் முப்பது குமார கணத்துப் பேரூரார்க்கு 30 ஈழக் காசும் நாள்தோறும் ஒரு திரு வமுதும் கொடுத்து அத்துடன் ஒரு நந்தாவிளக்கும் ஏற்று வ தாக ஒப்புக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை சம்பந்தமானதாகும்.

இதில் உள்ள சிறப்பம்சம் என்னவெனில், ஏனைய தமிழ் கல்வெட்டுகள் பௌத்த விகாரைகளை அண்மித்ததாகக் காணப்பட, இக்கல்வெட்டு நான்கு நாட்டார் கல்வெட்டுப் போன்று, சைவ நிறுவனங்களின் அழிபாட்டுப் பகுதியில் காணப்பட்டவையாகும். அத்தோடு இக்கல்வெட்டில் உள்ள குமார கணத்துப் பேரூரார் என்ற சொற்பதம், வேறு எங்கும் இது வரை பயன்படுத்தப்பட்டதாகத் தகவல்கள் இல்லை. எனவே இப்பெயரைக் குறிக்கும் ஊர் அநுராதபுரப் பகுதியிலுள்ள ஊரையும் ஓர் அதிகார வர்க்கத்தையும் குறிக்கும் ஒரு சொல்லாகவும் அமைகிறது என ஆய்வாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

மேலே கூறப்பட்ட கல்வெட்டுகளிலிருந்து சில விடயங்களை அறியக்கூடியதாக உள்ளது. முதலாவதாக மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் தமிழ் மொழி, அநுராதபுர இராச்சிய காலத்தில் முக்கியமான மொழியாக இருந்திருக்கின்றது.

மேலும், மேற்கூறப்பட்ட கல்வெட்டுகள் கி.பி.ஆறாம், ஏழாம் நூற்றாண்டுகளுக்கும், கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்திற்கு உரியவையாகக் காணப்பட்ட போதும் அதற்குப் பல நூற்றாண்டுகள் முன்பிருந்தே அம்மொழி வழக்கில் இருந்து வந்தபடியால் தான் மேற்குறிப்பிட்ட காலப் பகுதிகளில் எழுதும் அளவிற்கு வளர்ச்சிபெற்ற மொழியாக இருந்திருக்கின்றது என்பது தெளிவு.

அடுத்து, தமிழர்கள் சைவத்தையும்,பௌத்தத்தையும் ஆதரிப்பவர்களாகவும் அம்மதங்களைச் சார்ந்தவர்களாகவும் இருந்திருக்கின்றார்கள் என்பதனையும் இக்கல்வெட்டுகள் காட்டி நிற்கின்றன. அடுத்ததாக, தமிழர்கள் அநுராதபுர இராச்சியப் பிரதேசத்தில் அல்லது அநுராதபுர நகரில் செல்வாக்கும், அதிகாரமும் உடையவர்களாக அக்கால கட்டத்தில் இருந்திருக்கின்றார்கள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

எனவே, அநுராதபுரத்தில் மேற்குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் இவ்வாறான தமிழ் கல்வெட்டுகள் காணப்படும் போது, தமிழர்கள் வரலாற்றுக் காலத்திலிருந்து தொடர்ச்சியாக வாழ்ந்த வடக்கு, கிழக்கு, வடமேற்குப் பிரதேசங்களில் ஏன் அவ்வாறான கல்வெட்டுகள் இதுவரை கண்டுபிடிக்கவில்லை என்ற ஒரு கேள்வி எழுகின்றது.

ஏற்கனவே கூறியதுபோல் அநுராதபுரத்தில் அகழ்வாராய்ச்சிகளும் மேலாய்வுகளும், தொடர்ச்சியாகவும் விஞ்ஞான ரீதியாகவும் மேற்கொள்ளப்பட்டது போன்று, இப்பிரதேசங்களில் இதுவரை அவ்வாறு எதுவும் நிகழவில்லை.

எனவே, எதிர்கால அகழ்வாராய்ச்சிகளும், மேலாய்வுகளும் சுதந்திரமாக இப்பிரதேசங்களில் நடைபெறும் போது ஏராளமான தமிழ் கல்வெட்டுகளும் பல்வேறு தொல்பொருட்களும் நிச்சயமாகக் கிடைக்கும் என்பதில் எதுவித சந்தேகமும் இருக்க முடியாது.

கல்வெட்டுகள் போன்று, புராதன நாணயங்களும், அக்காலங்களுக்குரிய சமய, சமூக, பொருளாதார, அரசியல் என்பவற்றை அறிந்து கொள்வதற்கு வரலாற்றாசிரியர்களுக்குப் பெருமளவு உதவியாக உள்ளன. இவ்வாறான நாணயங்கள், பொதுவாக, அரச நிறுவனங்களாலும், வர்த்தக நிறுவனங்களாலுமே பெரும்பாலும் வரலாற்றுக் காலங்களில் இலங்கையில் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இவ்வரலாற்றுக் காலத்துக்குரிய இலங்கை நாணயங்கள் பிராமி எழுத்துப் பொறித்த நாணயங்களாகவே கி.மு. இரண்டாம் நூற்றாண்டிற்கும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்துக்கு உரியவையாகக் காணப்படுகின்றன.

அண்மைக்காலத்தில் நடைபெற்ற ஆய்வுகளின்போது, குறிப்பாக வட இலங்கையில் கந்தரோடை, பூநகரி போன்ற இடங்களில் புராதன நாணயங்கள் மேற்குறிப்பிட்ட காலத்துக்கு உரியனவாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்நாணயங்கள் அக்காலத்துக்குரிய தமிழ் மன்னர்களாலும் தமிழ் வணிகர்களாலும் வெளியிடப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

ஆனால், கி.பி.பதின்மூன்றாம் நூற்றாண்டுகளில், யாழ்ப்பாண அரசு காலத்தில் யாழ்ப்பாண மன்னர்கள் சேது நாணயங்களை வெளியிட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்ட விடயமாக உள்ளது.

இந்நாணயங்களில் இலச்சினைகளும், தமிழ் எழுத்துக்களும் உள்ளன. புராதனமொழி பற்றி ஆராய்ந்து சரியான வரலாற்று முடிவைக் கொடுப்பதற்கு இலங்கை பற்றிய ஆய்வில் பாளி, சிங்கள, சமஸ்கிருத, தமிழ்மொழி போன்றவற்றில் ஆழ்ந்த அறிவும் வரலாறு பற்றிய ஆழ்ந்த புலமையும் நவீன விஞ்ஞான ரீதியான கண்ணோட்டமும் மிக அவசியம்.

இலங்கையில் தமிழ்ப் பிரதேசங்களிலும் ஏனைய பிரதேசங்களிலும் கிடைக்கப்பெற்ற புராதன தமிழர் தொடர்பான நாணயங்களைப் பற்றிய ஒரு தெளிவான விளக்கத்தைப் பெறக்கூடிய வகையில் அவ்வாறான ஒரு முயற்சி தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெற்று, ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் தமிழர் வரலாறு பற்றி மேலும் பல தெளிவான தகவல்களையும் விளக்கத்தினையும் பெற முடியும்.

(தொடரும்)

நோய்த் தாக்கத்திலிருந்து பாதுகாத்து தென்னையிலிருந்து பயன்பெறுவோம்

14.18.1. தண்டுக் கசிவு நோயும் கட்டுப்படுத்தலும்
Stem bleeding disease and its control

தென்னைகளுக்கு தண்டுக் கசிவு ஒரு பொதுவான நோயாகும். மின்னல், மேலதிகமாக உரமிடல், தீயினால் ஏற்படும் சேதம், பெரும் மழை அல்லது வெள்ளம், செவ்வண்டுத் தாக்கம் ஆகிய காரணிகளால் அடி மரத்திலிருந்து தண்டுக்கசிவு ஏற்படும். இச் சந்தர்ப்பத்தில் எல்லா தென்னை மரப் பட்டையில் நீளப்பாடான வெடிப்பு தோன்றும் ''செரேரோசிஸ்ரிஸ் பரடொக்சா'' (Ceratocystis paradoxa) என்னும் பங்கஸ் பலவீனம் அடைந்த இழையங்களைத் தாக்கி ஊடுருவும் பங்கஸ் தாக்கம் கசிவை அதிகரிக்கச் செய்யும்.

அறிகுறிகள்:

தென்னைமரத்தின் அடியில் (தண்டில்) நீளப்பாடான வெடிப்பு தோன்றி செங்கபில துரு நிறமான திரவம் கசிவதே ஆரம்ப அறிகுறியாகும். இப் பகுதி கருமையாகி முடிவில் நரை கலந்த சிவப்பாக மாறும். இந் நோய் பல பகுதிகள் ஒன்று சேர்ந்து பெரிய பகுதிகளை உண்டாக்கும். நாட்செல்ல இப்பகுதியில் இருந்து திரவம் கசியாது. திரவம் கூழ்போல் தடித்து பிசின் போல் தோன்றும். கீறுகளாகக் கட்டிபடும். தொற்றல் ஏற்பட்ட பகுதியின் சிறு துண்டைக் கூரிய கத்தியினால் மேலாக வெட்டி எடுத்தால் கீழ் உள்ள நார்த் தன்மையான இழையம் கறுப்பு நிறமாகவும் உக்கியும் காணப்படும்.

உருண்டையாக பருத்த அடி கொண்டு வீரியமாக வளரும் இளம் மரங்களில் இதேபோல வெடிப்பினைக் கெண்டிருக்கலாம்.

● தீயினாலும் மின்னலினாலும் ஏற்பட்ட பாதிப்பை இலகுவில் கண்டுபிடிக்கலாம். பரிகாரத்தினைத் தொடங்கும் முன்பு மரத்தில் செவ்வண்டுத்தாக்கம் உள்ளதா எனப்பார்ப்பது முக்கியமானதாகும். (வண்டு வெளிவரும் துவாரங்கள் அரிக்கப்பட்ட தும்பு, வண்டரிக்கும் சத்தம் முதலியன அறிகுறிகள்)

● போசணைகளினதும் நீரினதும் சடுதியான உள்ளெடுப்பும், மரப்பட்டையில் வெடிப்பினை ஏற்படுத்தி பங்கஸ் உட்செல்ல வழிவகுக்கும்.

● தண்டுக்கசிவினால் இளம் மரங்களே கூடியளவு தாக்கப்படுகின்றன. சிகிச்சை செய்யாவிடின் மரம் விரைவில் பட்டு விடும்.

தண்டுக் கசிவுக்கான ஏனைய காரணிகள்

'' கனோடேமா'' (Ganodema boninians) என்ற பங்கஸினால் தாக்கப்பட்ட தென்னைகளிலும் தண்டுக் கசிவு ஓர் அறிகுறியாகும். மரத்தின் அடிப்பகுதியில் அடைப்புக்குறி போன்ற பங்கஸ் இழைகள் இந்நோயின் பிரத்தியேக அறிகுறி ஆகும். இன்னோர் வகையான பங்கஸ் (Ganodema lusi dam) இனாலும் ஏற்படலாம்.

● போசணைகளினதும் நீரினதும் சடுதியான உள்ளெடுப்பும், மரப்பட்டையில் வெடிப்பினை ஏற்படுத்தி பங்கஸ் உட்செல்ல வழிவகுக்கும்.

● தண்டுக் கசிவினால் இளம் மரங்களே கூடியளவு தாக்கப்படுகின்றன. சிகிச்சையினை உடனடியாக செய்யாவிடின் மரம் விரைவில் பட்டுவிடும்.

''தெங்கு தினம்'' நாளை அனுஷ்டிக்கப்படவுள்ளதை முன்னிட்டு இக் கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

● தண்டுக் கசிவினால் தாக்கப்பட்ட மரத்திலிருந்து குரும்பைகள் வாடி விழுவதுடன் ஓலைகள் கருகி தண்டின் அநேகமான பகுதிகள் உக்கியும் காணப்படும். இந்த நிலையில்தான் மரம் இறப்பு ஏற்படும்.

கட்டுப்பாட்டு முறைகள்

● இந்நோயினை ஆரம்பத்தில் கண்டுபிடித்தால் குணமாக்குவது சுலபம்.

● பாதிக்கப்பட்ட கரிய நிறப் பரப்புக்களை அல்லது பிசின் வடிகின்ற பகுதிகளை கூரிய கத்தியினாலோ, உளி, கைக்கோடரி உதவியுடனோ ஆரோக்கியமான இளம் சிவப்பு நிற இழையங்கள் வெளிப்படும்வரை (மேற்பட்டை மட்டும்) உக்கிய கரித்தன்மையான, நார்த்தன்மையான பட்டையும் முற்றாக அகற்றப்படல்வேண்டும். இதனை, உடனேயே ஓரிடத்தில் போட்டு எரித்து விடவேண்டும். பின்பு, தாக்கப்பட்ட பகுதி வெட்டப்பட்டு தொற்றல் ஏற்பட்ட இழையம் துப்புரவாக்கப்பட்டு ''போடாக்ஸ்'' கலவையினை (Bordeaux Mixture) தும்பினால் அல்லது பிரஷினால் தாராளமாக பூச வேண்டும். போடாக்ஸ் பசையும் பாவிக்கலாம்.

● மேற்கூறப்பட்ட செயன் முறைகளுடன் மேலதிகமாக கசிவு ஏற்பட்ட இடத்திற்கு ஒரு அடிக்கு மேலாக இரண்டு அங்குல அளவு அகலத்திற்கு மரத்தில் சுற்றிவர மேற்பட்டையினை வெட்டி அகற்றிய பின்பு போடோகலவையினை பூசவேண்டும். இதனால் பங்கஸ் தாக்கம் மேற்பட்டையினூடு தென்னை மரத்தின் நுனிக்கு (வட்டுப்பகுதிக்கு) செல்வதனைத் தடுக்கமுடியும்.

● 10 நாட்களின் பின்பு வேறு தொற்றலோ அல்லது கசிவோ கவனிக்கப்படாத இடத்து காயங்கள் மேல் கரித்தார் அல்லது சொலிக்கணம் பூசலாம்.

● இப்படியான சில சந்தர்ப் பங்களில் கறையான்கள் துணைப் பீடைத் தாக்கத்தினையும் உண்டாக்கலாம்.

● தண்டுக்கசிவு மின்னலினால் ஏற்பட்டிருக்குமாயின் தண்டின் அடிப்பகுதியில் சரிவான துவாரங்களை ஏற்படுத்தி திரவங்களை வெளிப்படுத்தல் நல்ல பயனளிக்கும். பின்பு அந்தத் துவாரங்களை சீமெந்தினால் மூடி விடலாம்.

● கட்டுப்பாடு செய்ய முயற்சிக்கும் முன்பு தென்னைச் செய்கையாளர்கள் தண்டுக் கசிவிற்கான காரணத்தினை கவனமாக ஆராய்ந்து கட்டுப்பாடு செய்யுமாறு கேட்கப்படுகின்றனர்.

போடாக்ஸ் பசை
(Bordeaux Paste)

2.25 லீற்றர் நீரில் 450 கிராம் செப்பு சல்பேற் (துருசு) கரைத்து பெறப்பட்ட கரைசலுடன் 450 கிராம் சுட்ட சுண்ணாம்பு சேர்த்து கரைத்து பெற்ற பசை தான் ''போடாக்ஸ் பசை''(Bordeaux Paste) ஆகும்.

''போடாக்ஸ்'' கலவை
(Bordeaux Mixture)
தயாரித்தல்

மட்பாண்டங்களைப் பாவித்து பின்வருமாறு கலவை தயாரிக்கவும்.

செப்புசல்பேற் (துருசு) - 200 கிராம்

நீறிய சுண்ணாம்பு- (Quick lime) 200 கிராம்

நீர்- 25 லீற்றர்.

14.19. தென்னையில் குருத்தழுகல் நோயும் அதன் கட்டுப்பாடும்
Bud rot disease and its control method

குருத்து முளை அழுகல் நோய் தென்னையைக் கொல்லக் கூடிய ஒரு நோய் ஆகும். வளரும் முளையைத் தாக்கும் "பைற்றோப் தொறா பாமிவோறா" (Phytopththora pamivora) எனும் பங்கஸால் இந் நோய் ஏற்படும். வளரும் முளை தாக்கப்பட்டால் மரம் குணமடையாது. இலங்கையில் இந் நோய் அதிகளவு இல்லை. ஆயினும் இந்நோய் தூரம் ஒரு மரத்தில் அங்கும் இங்குமாக இருக்கலாம்.

● ஏனைய பங்கஸ்களைப் போல் ஈரலிப்பான சீதோஷ்ண நிலையின் போது முளை அழுகல் அதிகமாக இருக்கும்.

● கீழ் நடுகை செய்யப்பட்ட தென்னைகளில் இது அதிகமாகவும் அடிக்கடி வெள்ளத்திற்குள்ளாகும் ஆற்றங்கரைகளிலுள்ள தென்னை மரங்களிலும் அதிகமாகக் காணப்படும்.

● 3-45 வருட வயதுடைய தென்னைகளைத் தாக்கும்.

அறிகுறிகள்

அழுகி முளை சரிந்து விழும் போதுதான் இந்நோய் வெளியாகும். இந்நிலையில் குணமாக்க முடியாது. முளைப்பகுதியைக் கூர்ந்து சோதித்தால் ஈட்டிபோல் தோன்றும். குருத்தின் அடியில் கறைபிடித்து வாடியிருக்கும். சுற்றியிருக்கும் இளம் ஓலைகளும் மஞ்சளாக மாறக்கூடும். குருத்தினைக் கையால் இழுக்கும் போது கையுடன் வந்துவிடும். அத்துடன் துர்நாற்றம் வீசும்.

● வாடிய தென்னோலை கபில நிறமாக மாறி காய்ந்து போகும். அதேவேளை கீழ்ப் பகுதி தென்னோலைகள் ஆரோக்கியமானதாக இருக்கும். இப் பருவத்தில் பூந்துணர் கருகுதலும், முதிராத காய்கள் (குரும்பை) விழுதலும் ஏற்படும்.

கட்டுப்பாடு

●நோய்வாய்ப்பட்டமரங்களைத்

தறித்து உடனடியாக வட்டுகளை எரிக்கவும். முளை அழுகல் நேரத்துடன் அவதானிக்கப்பட்டால், முளைப்பகுதியை ''போடோ கலவை'' அல்லது 1% வீதம் செப்பு பங்கஸ் நாசினியைக் கொண்டு நன்றாக வட்டினை நனைக்க வேண்டும்.

● காய்க்கின்ற, முதிர்ந்த மரங்கள் தாக்கப்பட்டால், காய்கள் முதிரும் வரை குலைகளை வைத்திருக்கலாம்.

● இருந்தாலும் பங்கஸை கொல்வதற்காக முளைப் பகுதியை ''போடோ'' கலவையினால் நனைக்கவும்.

தடுப்புமுறை

நோய் வாய்ப்பட்ட மரத்தினைக் குணப்படுத்துவது மிகவும் கடினமாயினும் நோய் பரவுவதனைத் தடுக்கலாம். தாக்கப்பட்ட மரங்களைச் சுற்றி வரவுள்ள மரங்களுக்குத் தடுப்பு முறையாக ''போடோ'' கலவை அல்லது 1% செப்பு பங்கஸ் கொல்லி அல்லது மிகவும் வசதியாக பங்கஸ் கொல்லி பொட்டலங்களையும் பாவிக்கலாம். ''போடோ'' கலவை அல்லது செப்பு பங்கஸ் நாசினி பாவித்தல் , மரத்தின் முளைப் பகுதியை 2-3 கிழமைகளுக்கு ஒருமுறை நன்றாக நனைக்கவும். பங்கஸ் கொல்லிப் பொட்டலங்களைப் பின்வருமாறு தயாரிக்கலாம்.

முதலில் செப்புசல்பேற்றை (துருசு) 5 லீற்றர் தண்ணீரில் ஒரு சாக்குப் பையில் போட்டு கரைவதற்காக ஓர் இரவு முழுவதும் தொங்க விடவும். கரையும் சுண்ணாம்பினை வேறாக 20 லீற்றர் நீரில் கரைத்து மெல்லிய துணியின் ஊடாக வடிக்கவும். செப்பு சல்பேற் கரைசலுடன் ஒன்றுசேர்த்து நன்றாகக் கலக்கவும்.

குறிப்பு (Note)

● கலவை தயாரிக்கப்பட்டவுடன் பாவிக்க வேண்டும்.

● சகல பங்கஸ் நாசினிகளும் ஆபத்தானவை கவனமாகப் பாவிக்க வேண்டும்.

● வேறு செப்பு பங்கஸ நாசினிகளையும் பாவிக்க லாம்.

இலங்கையில் பெருமளவு செப்பு பங்கஸ் நாசினிகள் சந்தைப்படுத்தப்படுகின்றன.

இவற்றில் ஏதாவது ஒன்றினை போத்தலில் எழுதியுள்ள வழிகாட்டி முறையில் பாவிக்கலாம்.

குறிப்பு:

● இந்தியாவில் தண்டுக் கசிவு நோய் தென்னைகளுக்குவரும்முன்பே அறிந்து கொள்ளும் உபாயமாக தென்னந் தோப்புகளில் தென்னையினைச் சுற்றியுள்ள வட்டப் பாத்திகளில் துவரைச் செடிகளை வளர்த்து வருகின்றனர். அந்த துவரைச் செடிகளை கவனமாக கண்காணித்து வர வேண்டும். அந்தத் துவரைச் செடியின் தண்டுப் பகுதியிலுள்ள பட்டைகளில் பிளவு (வெடிப்புத் தோன்றினால் அந்த தென்னந்தோட்டத்தில் தென்னைகளுக்கு சாறு வடிதல் நோய் (தண்டுக் கசிவு நோய்) வர வாய்ப்புள்ளது என முன் கூட்டியே அறிந்து கொள்கின்றனர்.

செ.சத்தியேந்திரன்,
சிரேஷ்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை.

யாழ்.மண்ணிற்கு பெருமை சேர்த்த "தமிழ்த்தூது" தனிநாயகம் அடிகள்

105 ஆவது நினைவு தினம் இன்று

ஈழத்தின் வடபால் யாழ்ப் பாணக் குடாநாட்டிலுள்ள தீவுக் கூட்டங்களில் தொலை விலுள்ள யாழ்.நெடுந்தீவைச் சேர்ந்தவர் ஆசிரியர் நாக நாதர் கணபதிப்பிள்ளை. இவர் சிறு வயதில் கத்தோ லிக்க மதத்தைத் தழுவி யாழ். சம்பத்திரிசியர் கல்லூரியில் பயின்று, பின்னர் அக்கல் லூரியின் ஆசிரியராகவும் பணியாற்றினார். இவர் திரு மணப் பருவத்தை அடைந்த தும் ஊர்காவற்றுறை கரம் பன் நல்லூர் என்னும் கிரா மத்தைச் சேர்ந்த கத்தோலிக்க சமயத்தவரான செசி இரா சம்மா என்பவரைத் திரும ணம் புரிந்தார். இவர்களின் மூத்த மகனாக 1913 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் இரண்டாம் நாள் பிறந்தவரே தனிநாயகம்அடிகளார்ஆவார். இருக்கு சேவியர் என்ற திரு மறைப் பெயர் இடப்பட்டது. எனினும் தந்தையின் குலமு றையை நினைவுபடுத்துவ தற்காக தனிநாயகம் என்ற பெயர் செல்லப் பெயராகச் சூட்டப்பட்டது.

சேவியர் தனிநாயகம் யாழ்.புனித பத்திரிசியார் கல் லூரியில் தமது கல்வியைத் தொடர்ந்து கற்றார். பாடசா லையில் படிப்பிலும் ஒழுக் கத்திலும் சிறந்து விளங்கிய தனிநாயகம்தமிழ், ஆங்கிலம், பொதுத் திறமை என எல்லா வற்றிலும் முதல் மாணவ னாகத் திகழ்ந்து போட்டிக ளில் பங்கு பற்றிப் பல பதக் கங்களையும் பரிசில்களை யும் பெற்றார். கல்லூரிமாணவ வெளியீட்டு இதழின் ஆசிரிய ராக இருந்தார். தனது 16 ஆவது வயதில் உயர் வகுப்புப் பரீட்சையில் விசேட திறமை யுடன் சித்தி பெற்றார்.

இவர் உயர் பட்டப்படிப் புப் பெறும் தகுதி இருந்தும் உத்தியோகம் பெறும் வாய் ப்பு இருந்தும் கூட இவற்றை எல்லாம் விடுத்து இறையருள் பெற்று துறவு பூண திட மனங் கொண்டு துறவு பூண்டு தனது 17 ஆவது வயதில் கொழும்பு புனிதர் பேணாட் திருமறைக் குருகுலப் பயிற்சி நிலையத்தில் துறவுப் பயிற் சியைஆரம்பித்தார். பெற்றோர் களின் வளர்ப்பும் கல்லூரிக் குருக்களின் அறிவுரையுமே இவரைத் துறவு நிலை பெறச் செய்தன.

தனிநாயகம் சமய இறை யியல், தத்துவ இயல், மனித உரிமை இயல் ஆகிய பாட நெறிகளை ஆர்வத்துடன் பயின்று வந்தார். தமிழ், சிங் கள, லத்தீன், ஆங்கில மொழி களை ஆய்வு முறையில் கற் றறிந்தார். இவரது கற்கைக் காலத்தில் பலதடைகள், இன் னல்கள் ஏற்பட்ட போதும் இறையருளால் தென்னிந் திய ஆயர் ஒருவரின் ஆதரவு கிடைக்கப் பெற்று ரோமாபுரி சென்று "ஊர் பான்" குருத் துவப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து 6 ஆண்டுகள் பயி ன்று சமய உயர் பட்டங்க ளைப் பெற்றுக் கொண்டார்.

இக் காலத்தில் இவருடன் பல நாட்டிலுமுள்ள பல மொழி கள் பேசும் குரு மாணவர்கள் பலர் பயின்றுவந்தனர். இவ்க ளுடன் நட்புக் கொண்ட தனி நாயகம் ஒவ்வொரு நாட்ட வரின் மொழிகள், பண்பாடு, பழக்க வழக்கங்களை அறி ந்து கொண்டார். அத்தோடு எமது தாய்மொழியாம் தமிழ் மொழியின் பெருமையை யும், தூய்மையையும் தமிழர் பண்பாட்டையும், மற்றோரு க்கு அறிமுகப்படுத்தினார். ''வத்திக்கான்'' வானொலி நிலையத்தில் முதன் முதலில் தமிழில் ஒலிபரப்புச் செய்த போது இவருக்கு இச் சந்தர் ப்பம் கிடைத்தது.

1938 ஆம் ஆண்டு பங் குனித்திங்கள் 19 ஆம் நாள் "குருத்துவம்" என்னும் பட்டத் தைப் பெற்றுக் கொண்ட இவர் அன்று முதல் சுவாமி சேவியர்தனிநாயகமாகஅழை க்கப்பட்டார். இவர்தனதுமுதல் மறைப் பணியை தென்னிந் திய தூத்துக்குடி மேற்றிரா சனத்தில்தொடங்கினார். அங்கு வடக்கன் குளத்தில் உள்ள புனித தெரேசா உயர்நிலைப் பள்ளியின் அதிபராகவும், பங் குத் தந்தையாகவும் பதவி பெற்றுச் சிறப்பாகப் பணி புரிந்து வந்தார். சமயத்து றையில்கலாநிதிப்பட்டம் பெற்ற இவர் தமிழ்த்துறையிலும் உயர்பட்டம் பெற வேண்டும் என்று சென்னை அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் உயர் கலை பயின்று முது மாணி (M.A) பட்டத்தை யும், இலக்கிய முதுமாணிப் பட்டத்தையும் (M.L) பெற் றுக் கொண்டார். தமிழிலும், கல்வி முறையிலும் ஆய்வு நடத்தி ஆற்றல்பெற்று விளங் கினார். வெளிநாடுகளில் தமி ழின் தனிப்பெருமை பற்றி விளக்கவுரைகள் வழங்கும் வாய்ப்பு அடிகளாருக்கு கிடை த்தது.

உலகத் தமிழ்த்தூதுப் பணியில் முதற்கட்டமாக 1950-51 ஆம் ஆண்டுக ளில் வட தென்னமெரிக்க, ஜப்பானிய பல்கலைக்கழ கங்களுக்குச் சென்று சொற் பொழிவாற்றினார்கள். 1951 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத் தில் நடைபெற்ற தமிழ் விழா வில் இலக்கியச் சிறப்பியல் புகள் பற்றிய ஆய்வுரையை நிகழ்த்தி பல பேரறிஞர்களின் பாராட்டைப் பெற்றார்.

1952 இல் இலங்கைப் பல்கலைக்கழக தத்துவ இயல், கல்வி இயல் இவற்றிற்கு உதவி விரிவுரையாளராகப் பதவி ஏற்றுப் பணி புரிந்ததுடன் முதுமாணிப் பட்டதாரி வகுப் புப் பேராசிரியராகவும் கடமை யாற்றினார். 1954 இல் இந் தியா, மலாயா, இங்கிலாந்து போன்றநாடுகளுக்குச் சென்று தமிழ் மொழிக் கலாசாரம் பற்றி சொற் பொழிவுகள் நடத் தினார். 1955 இல் கம்போ டியா, மலாயா, இந்தோனே ஷியா, தாய்லாந்து, வியட் நாம் முதலிய நாடுகளுக்குச் சென்று தமிழ்த்தூது விரிவு ரைகள் ஆற்றினார். 1957 இல் இங்கிலாந்து சென்று ஆய்வு நடத்திக் கலாநிதி (P.hd) பட்டத்தைப் பெற் றார். 1961 இல் மலாயாப் பல்கலைக்கழகத்தில் இந்திய கலைப்பீட விரிவுரையாளரா கவும், பேராசிரியராகவும் கடமை புரிந்தார்.

அத்தோடு, மலாயாவில் உயர் வகுப்புக்களில் தமிழ்ப் பாடப் பிரதம பரீட்சகராகவும், சர்வகலாசாலை மாணவர் ஒன்றிய முக்கிய உறுப்பின ராகவும், நூற்குழு அங்கத்த வராகவும், மலாயாக் கல்வி த்துறை ஆலோசகராகவும் இருந்து பல பணிகளைச் செய்து வந்தார். 1964 இல் ஜேர்மனி கல்விப் பரிமாற்ற நிறுவன ஆதரவில் ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ரஷ்யா ஆகிய நாடுகளில் விரிவுரை கள் நிகழ்த்தினார். அத்தோடு இவர் தமிழ் வளர்ப்பு நிறுவ னங்கள், இயக்கங்களை உரு வாக்கி சாதனை படைத்து அழியாப் புகழை ஈட்டிக் கொண்டார்.

1941 இல் இவர் அமைத்த தமிழ் இலக்கியக் கழகம் இன் றும் சிறப்பாகத் தமிழ்ப்பணி களை புரிந்து வருகின்றது. 1964 இல் இந்தியாவின் தலை நகர் டில்லியில் நடைபெற்ற உலகக் கலைகளின் 24 ஆவது மாநாட்டில் அனைத் துலகத் தமிழாட்சி மன்ற த்தை உருவாக்கினார். 15 நாடுகளைச் சேர்ந்த 60 உறுப் பினர்கள் இம் மன்றத்தின் முதல் உறுப்பினர்களாக இணைந்தார்கள். இம்மன்றம் இலங்கை, இந்தியா, மலாயா போன்ற நாடுகளில் நிறுவப் பட்டது. இம் மன்றத்தின் மகா நாடு மலேசியாவின் தலை நகர் கோலாலம்பூரில் நடை பெற்றது. தொடர்ந்து பிரான்ஸ், இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் மகாநாடுகளை நடத்தி வந்தார். பல்வேறு நாடுகளிலும் தமிழ் விருத்திச் சங்கங்களையும், பண்பாட் டுக் கழகங்களையும் நிறுவி தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஊக்கமளித்து வந்தார் தனி நாயம் அடிகள்.

1952 இல் கத்தோலிக்க எழுத்தாளர் சங்கத்தை ஏற் படுத்தி அதன் இயக்குநராக இருந்து பல சமயப் பணி களைப் புரிந்து வந்தார். அத் தோடு மொழி, சமயம், பண் பாடு, வரலாறு பற்றிய பல நூற்றுக்கணக்கான ஆராய் சிக் கட்டுரைகளை எழுதி வெளி யிட்டு வந்துள்ளார். 1952 இல் தமிழ்ப் பண்பாடு எனும் ஆங்கில முத்திங்கள் வெளி யீட்டை ஆரம்பித்து உலகப் பேரறிஞர்கள் பலரது ஆக்கங் களையும் பிரசுரித்து வந்தார். 15 ஆண்டுகள் தொடர்ந்து இப் பந்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்து பெருந் தொண்டாற்றி வந்தார்.

மேலும் ''தமிழ்த்தூது'' என்னும் நூலையும் தமிழில் வெளியிட்டார். இந்நூல் சென் னைப் பல்கலைக்கழகப் பாட நூலாக இருந்தது. இந்நூல் ஒரு மொழி ஒப்பியல் நூலா கக் கூறப்படுகின்றது. 1966 இல் "ஒன்றே உலகம்" எனும் உலக சுற்றுலாச்செய்திகளைத் தரும் நூல்ஒன்றையும் வெளி யிட்டார். இவர் பல ஆராய் ச்சிக் கட்டுரைகளையும் நூல் வடிவில் பதித்தார்.

கல்வியில் உயர் பட்டங் கள் பெற்று, துறவியாகி, பன் மொழிப் பண்டிதராகி பிரசா ரம், பிரசுரப் பணிகளைச்செய்து நல்லாசிரியராகி, பேரறிஞ ராகி தமிழ்த்தூதுவராய் தரணி யெங்கும் சென்று தமிழ் முழக்கம் செய்த தமிழ்த்தூது தனி நாயகம் அடிகளார் 1980 ஆம் ஆண்டு புரட்டாதி திங்கள் முதல் நாள் இறை பதம் அடைந்தார். இன்று அடிகளாரது சிரார்த்த தினம் ஆகும்.

வலன்டினா

செய்தித்துளிகள்

மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் வீணாகானம்பதி உறையும் ஸ்ரீமஹா சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவில் ஸ்ரீதேவி, பூமிதேவி சமேத ஸ்ரீமன் வெங்கடாசலபதி பெருமான், ஸ்ரீஆஞ்சநேய சுவாமி ஆகிய பரிவார தெய்வங்களுக்கு நாளை காலை 9 மணிக்கு மஹா கும்பாபிஷேகம் நடை பெறும். இக்கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இன்று காலை 7 மணிமுதல் மாலை 6 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெறும். (இ

பெற்றோர் சந்திப்பும் சிரமதானமும்

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் பெற்றோர் சந்திப்பும் சிரமதானமும் நாளை காலை 9 மணியளவில் கல்லூரி அதிபர் ம.மணிசேகரம் தலைமையில் நடை பெறும். அனைத்து பெற்றோர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (இ

சின்மயா மிஷனில் அருளுரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தாவால் "முருகப்பெருமானின் பூர்வ அவதாரம்" என்ற தலைப்பில் இன்று இரவு 7.30 மணி முதல் 8 மணி வரை இல.700 பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் அருளுரை நடைபெறும்.(இ-7)

காந்தி ஜெயந்தி தின பேச்சுப்போட்டி விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் மகாத்மா காந்தியடிகளின் 149 ஆவது ஜெயந்தி தினத்தை முன் னிட்டு வடமாகாண பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடத்துகின்ற பேச்சுப்போட்டிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதி வரை நீடிக்கப் பட்டுள்ளது. மேலதிக விபரங்களை 078 913 5935, 077 662 4377 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என அகில இலங்கை காந்தி சேவா சங்கப் பொதுச் செயலாளர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி அறிவித்துள்ளார். (இ-7)

போலி நாணயத்தாள்களை வைத்திருந்தவர் கைதானார்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து பொலநறுவை நோக்கிப் பயணித் துக்கொண்டிருந்த, தனியார் பேருந்தில் 500 ரூபாய் போலி நாணயத்தாள்கள் இரண்டை வைத்திருந்த நபரொருவர், ஹபரண பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். பொலநறுவை பகுதியைச் சேர்ந்த, 30 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட் டுள்ளார். கைது செய்யப்பட்ட நபர் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் கொழும்பு அலுவலகத்தில் உதவியாளராக பணியாற்றுபவரென தெரியவந்துள்ளது.

குறித்த பேருந்தில் பயணி ஒருவர் ஹெரோயின் வைத்திருப்பதாக, பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து பொலிஸார் பயணிகளை சோத னையிட்ட போது போலி நாணயத்தாள்களுடன் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-7)

தீவிரவாத செயற்பாட்டுடன் தொடர்பு இலங்கைப் பிரஜை ஆஸியில் கைது

(சிட்னி)

பயங்கரவாத குற்றச்சாட்டில் இலங்கைப் பிரஜை ஒருவர் அவுஸ்திரேலியாவில் கைது செய்யப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 25 வயதுடைய இளைஞர் ஒருவரே அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் வைத்து இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன. (இ-7)

தந்தை-மகள் சடலமாக மீட்பு

(மஹியங்கனை)

மஹியங்கனை, தம்பகொல்ல பிரதேசத்தில் வீடொன் றில் உயிரிழந்திருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை மற்றும் மகளின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மஹியங்கனை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

31 வயதுடைய தந்தை மற்றும் 11 வயதுடைய மகள் ஆகிய இருவரே உயிரிழந்துள்ளனர். குடும்பப் பிரச்சினை காரணமாக இவர்கள் தற்கொலை செய்து கொண்டிருக்க லாம் என்று சந்தேகிக்கும் மஹியங்கனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7)

சிட்டுக்குருவியும் குட்டி யானையும்



ஒரு காட்டில யானைக்குட்டி இருந்தது. அதுக்கு தான் பெரிய ஆள் என்று நினைப்பு. தினமும் காட்டில நடந்துகிட்டே தும்பிக்கைக்கு எட்டுகிற மரக்கிளைகளை ஒடிச்சு சாப்பிட்டுக்கிட்டே போகும். அப்படி ஒரு நாள் ஒரு மரத்தை நெருங்கினப்போ அங்கே இருந்த சிட்டுக் குருவி கையை ஆட்டி 'வணக்கம் யானை நண்பா' என்று கூறியது.

அதைக் கேட்ட யானைக்குட்டி அலட்சியமாகச் சொன்னது. 'உன்னோட உருவம் எவ்வளவு? என்னோட உருவம் எவ்வளவு? நாம எப்படி நண்பர்களா இருக்க முடியும்?'

உடனே குருவி பதில் சொன்னது ஏன் முடியாது. நட்புக்கு உருவம் முக்கியம் இல்லை. மனசு தான் முக்கியம். நான் இந்த மரத்தில் ரொம்ப நாட்களாக இருக்கேன். நீ இதை ஒடிச்சேன்னா, நானும் இங்கே இருக்கிற மற்ற பறவைகளும் எங்கே போவது? என்று கேட்டது.

அதுக்கு யானை கேலியான குரலில் சொன்னது. இந்த மரம் உங்களுக்கு வேணும்னா வீடா இருக்கலாம். ஆனா எனக்கு இது தான் சாப்பாடு என்றது.

அதைக்கேட்ட குருவி சொன்னது, "அப்படீன்னா நமக்குள்ளே ஒரு போட்டி வைத்துக்கொள்ளலாம். அதில் நீங்கள் வெற்றி அடைந்தாள், இந்த மரத்தின் கிளைகளை உடைத்து சாப்பிட்டுக்கொள்ளலாம். நான் வெற்றி அடைந்தால் மரத்தை ஒடிக்கக்கூடாது" என்றது சிட்டுக்குருவி. 'பொடிப் பயல் உன்னோடு போட்டியா? சரி சொல்லு' என்றது யானைக்குட்டி.

"நாம ரெண்டு பேரும் அந்த மலை வரைக்கும் பறக்கணும். யார் முதலில் அங்கே போய்ச் சேர்கிறோமோ அவங்கதான் வெற்றி அடைந்த மாதிரி" என்றது சிட்டுக்குருவி.

யானை தன்னாலே பறக்க முடியாதுன்னு தெரிஞ்சாலும் வீம்புக்காக இவ்வளவு தானா பறந்துட்டா போகுது என்று போட்டிக்கு ஒப்புக் கொண்டது.

போட்டி ஞாயிற்றுக் கிழமை காலை நடைபெறும் என்று நாள் முடிவு செய்யப்பட்டது. இப்போ யானைக்கு ஒரு பிரச்சினை, நாலு நாளைக்குள்ளே எப்படியாவது பறக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். என்ன செய்வது, யாரிடம் கற்றுக் கொள்வது எனக் குழம்பியது.

பறக்கிறது என்பது பெரிய விடயமா என்ன, லேசாகக் கத்துக் கொள்ளலாம் என்று நினைத்த யானை வழியிலே ஒரு கோழியைப் பார்த்தது.

"கோழி கோழி, எனக்கு ஒரு உதவி செய்யணும். நான் எப்படியாவது பறக்கணும். அதுக்கு ஒரு வழி சொல்லு" என்றது. அதைக்கேட்ட கோழி சொன்னது "அது ரொம்ப சுலபம் அண்ணே. நான் என்ன செய்றேன்னு கவனி! அதே மாதிரி செய்தேன்னா நீயும் பறக்கலாம்" என்றது.

யானையும் ஒத்துக் கொண்டது.

கோழி அங்கே இருந்த ஒரு பாறை மேலே ஏறி நின்னுக்கிட்டு சட சடன்னு இறக்கை அடித்தபடியே தாவியது. சில நொடிகள் அந்தரத்தில் பறந்தவாறு கீழே வந்து சேர்ந்துச்சு. 'இவ்வளவுதான், சுலபம், எங்கே நீ பறபாக்கலாம்' என்றது.

யானையும் கஷ்டப்பட்டு பாறை மீது ஏறி நின்று கோழி மாதிரி காலை விரிச்சுக்கிட்டு தாவியது. அவ்வளவு தான், தொபுக்கடீர்னு கீழே விழுந்து நல்ல அடி. தொப்பை கலங்கிப்போச்சு.

அம்மா, அப்பான்னு கத்திக்கிட்டே டேய் பறக்குறதுக்கு வழி கேட்டா இடுப்பை முறிக்கிறதுக்கு வழி சொல்றேன்னு சொல்லிக்கிட்டே எழுந்து நின்றது.

எங்கே யானை தன்னை அடித்து விடுமோ என்று பயந்து போன கோழி ஒரே ஓட்டமா ஓடிப்போனது.

யானை வலியோடு சே, அவசரப்பட்டு போட்டிக்கு ஒப்புக்கிட்டோமோ? சிட்டுக் குருவியிடம் தோற்கக் கூடாது. எப்படியும் ஜெயிச்சுடணும் என்று நினைச்சது.

அப்போ, அந்தப் பக்கமாக ஒரு காகம் பறந்து வந்தது. அதை நிறுத்திய யானை, விடயத்தைச் சொல்லிச்சு. யானையை மேலே இருந்து கீழே வரைக்கும் பார்த்த காகம், 'உன்னோட வெயிட்தாண்ணே பிரச்சினையே. நாலு நாள் சாப்பிடாம கிடந்தால் நல்லாப் பறக்கலாம்' என்று சொல்லிவிட்டுப் பறந்து போச்சு'

யானை எதுவும் சாப்பிடாமல் பட்டினி கிடந்து நாலு நாளில வாடி வதங்கிப் போச்சு, எழுந்து நிக்கவே முடியலை, சரி எப்படியாவது பறந்து பாக்கலாம்னு தாவினா கண்ணைக்கட்டி கிட்டு மயக்கம் வந்து விழுந்திருச்சி.

காக்கா பக்கத்தில வந்து உட்கார்ந்து, இதுக்கே உன்னாலே தாங்க முடியலையா, அப்போ நீ பறந்த மாதிரித்தான்னு கேலி செய்தது.

அதைக்கேட்ட யானை கோபத்தில அடிக்க தும்பிக்கையை சுழற்றியதும் காக்கா பறந்து போய்கிட்டே, உன்னாலே என்னை ஒண்ணும் பண்ண முடியாது, எனக்கு இறக்கை இருக்கு, உனக்கு இறக்கையில்லைனு சொல்லிச்சுது.

யானைக்கு கோபம் அதிகமாகி கத்தியது, அதைக்கேட்ட கழுகு கிட்டே வந்து சொன்னது.

'ஏன் அண்ணே கோப்படுறே, பறக்கிறது சாதாரண விடயம் தான், அதுக்கு நீ என்ன செய்யணும்னா, அதோ தெரியுதே உயரமான மலை, அது மேலே ஏறு. உச்சிக்குப் போனதும், அங்கே இருந்து நான் பறக்கணும்னு சொல்லிக்கிட்டே கண்ணை மூடிக்கிட்டு குதி, தானா பறந்துடுவே என்றது. யானைக்கு அப்படி குதித்தால் பறக்க முடியுமா என்று தயக்கமாக இருந்தது.

கழுகு சொன்னது, என்னை நம்பினா உடனே நீ பறந்துடலாம் என்றது. யானை மூச்சுவாங்க மலை மேல ஏற ஆரம்பிச்சது. உச்சிக்கு போறதுக்கு முன்னாடி மூச்சு தளர்ளிப் போச்சி, அங்கேயிருந்து கீழே பார்த்தா அவ்வளவு பெரிய காடு மரம் எல்லாம் குட்டியா தெரியுது, கண்ணை மூடிக்கிட்டு கீழே குதிக்க எட்டிப் பார்த்தா தலை சுத்துச்சி. வேற வழியில்லை என்று குதிக்கப் போகும் போது குருவி பறந்து வந்து சொன்னது.

யானை அண்ணே, இங்கே இருந்து குதிச்சா நீங்க காலி. இவ்வளவு உயரத்துல இருந்து பாருங்க காடுங்கிறது எவ்வளவு அழகா இருக்கு. இதுக்குள்ளே ஒவ்வொரு உயிரினத்துக்கும் ஒரு வாழ்க்கை இருக்கு. இதுல யாருமே பெரிய ஆளும் இல்லை, யாரும் சின்ன ஆளும் இல்லை.

இந்த காடு மனுசன் உண்டாக்கினது இல்லே. காலம் காலமாக இருந்துகிட்டே வர்ற இயற்கை. உங்களாலே பறக்க முடியாது, என்னால சின்ன கல்லைக்கூட தூக்க முடியாது, அவங்க அவங்க பலம் திறமை அவங்களுக்கு, இப்போ கூட ஒண்ணும் ஆகிடலை, நாம நட்பாக இருக்கிறதா இருந்தா போட்டியே வேண்டாம் என்றது

யானை யோசித்துப் பார்த்தது.

குருவி சொல்றது சரி தான், நம்மாலே பறக்கமுடியாது, குருவியாலே மரத்தை தூக்கமுடியாது, நாம ஏன் தேவையில்லாமல் அது கூட போட்டி போடணும்னு நினைச்சது, சே நான் தான் பெரிய ஆளுனு திமிரா நடந்துகிட்டேன், நாம இனிமே நண்பர்கள் ஆகிடலாம்னு சொல்லிச்சுது. குருவியும் அதை ஏத்துக்கிட்டது. அன்று முதல் யானையும் சிட்டுக் குருவியும் காட்டில நண்பர்களாக இருந்தார்கள்.

நாம எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும் நம்மால முடியாத ஒரு விடயம், இன்னொருவரால் லேசாக செய்ய முடியும். அதனால், யாரையுமே நாம அலட்சியமா நினைக்கக் கூடாது, எல்லோர்கிட்டேயும் அன்பாகவும் நட்பாகவும் நடந்துக்கணும்

பழமொழிகள்

☆தண்ணீரையும் தாயையும் பழிக்காதே.

☆நல்லவன் என்று பெயர் எடுக்க நெடுநாள் செல்லும்.

☆நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்.

☆நெல்லுக்குப் பாய்கிற தண்ணீர் புல்லுக்கும் பாயும்.

☆பகைவர் உறவு புகை எழு நெருப்பு.

☆பொய் சொன்ன வாய்க்குப் போசனம் கிடையாது.

☆மன்னுயிரை தன்னுயிர்போல் நினை.

☆முகத்துக்கு முகம் கண்ணாடி

☆வரவுக்குத் தக்கபடி செலவை வரையறு.

☆வாழ்கிறதும் கெடுகிறதும் வாயினால்தான்.

☆வட்டி ஆசை முதலுக்கு கேடு.

❖1798-இலங்கையில் முதலியார் வகுப்பை பிரித்தானிய இலங்கையர் மீண்டும் உருவாக்கினர்.

❖1897-வட அமெரிக்காவின் முதலாவது சுரங்கத் தொடரூந்து சேவை பொஸ்டனில் ஆரம்பிக்கப்பட்டது.

❖1984 - யாழ்ப்பாணம் திக்கத்தில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் 20 இலங்கை இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

❖2007 - மன்னாரில் பாசித்தென்றலில் இலங்கை இராணுவத்தினர் நடத்திய கிளைமோர் தாக்குதலில் 8 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

பிறப்புகள்

❖18 77-அ. வரதநஞ்சைய பிள்ளை, தமிழறிஞர் (இ. 1956)

❖1895-செம்பை வைத்தியநாத பாகவதர், கர்நாடக இசைக் கலைஞர் (இ. 1974)

❖1896-பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா, இந்திய ஆன்மீகவாதி, உலக கிருஷ்ண பக்திக் கழகத்தை நிறுவியவர் (இ. 1977)

❖1925-ராய் கிளாபர், அமெரிக்க இயற்பியலாளர்

❖1929-ஜி. நாகராஜன், தமிழக எழுத்தாளர் (இ. 1981)

❖1930-சார்லசு கோர்ரியா, இந்திய கட்டடக்கலைஞர் (இ. 2015)

❖1932-பத்மநாதன் இராமநாதன், இலங்கைத் தமிழ் வழக்கறிஞர், நீதிபதி, அரசியல்வாதி (இ. 2006)

❖1933-தா. திருநாவுக்கரசு, இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (இ. 1982)

❖1947-பி. ஏ. சங்மா, இந்திய அரசியல்வாதி (இ. 2016)

❖1970-பத்மா லட்சுமி, இந்திய-அமெரிக்க நடிகை

❖1980-கரீனா கபூர், இந்திய நடிகை

இறப்புகள்

❖1980-சேவியர் தனிநாயகம், இலங்கைத் தமிழறிஞர் (பி. 1913)

❖1983-மறை. திருநாவுக்கரசு, தமிழகத் தமிழறிஞர், இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி. 1907)

❖1988-லூயிஸ் வால்டர் அல்வாரெஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர் (பி. 1911)

❖2014-பாலா தம்பு, இலங்கை இடதுசாரித் தொழிற்சங்கவாதி (பி. 1922)

❖2017 - அனிதா (மருத்துவம்) தமிழக மாணவி இந்திய மருத்துவ கல்வி உரிமைக்கு போராடியவர் (பி. 2000)

சிறப்பு நாள்

❖இடர் தவிர்ப்பு நாள் (ஜப்பான்)

❖விடுதலை நாள் (உசுபெக்கிசுத்தான், சோவியத் ஒன்றியத்திடம் இருந்து 1991)

❖அறிவு நாள் (உருசியா, உக்ரைன், ஆர்மீனியா)

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி	மருதனார்மடம்	சாவகச்சேரி	கொழும்பு	தினநெருசி	நெல்லியடி
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	100	70	50	90	120	100
உருளைக்கிழங்கு	80	120	100	95	120	100
பச்சைமிளகாய்	120	160	100	100	120	120
தக்காளி	50	140	60	60	80	40
மரவள்ளிக்கிழங்கு	40	50	40	40	40	30
கோவா	140	80	140	60	160	160
கரட்	300	300	360	220	400	400
பூசணி	80	80	60	50	80	50
புடோல்	50	100	60	40	80	50
வாழைக்காய்	100	100	80	70	80	100
சின்ன வெங்காயம்	120	80	100	80	120	100
பெரிய வெங்காயம்	100	120	100	90	120	100
பாகற்காய்	100	180	120	100	120	120
வெண்டிக்காய்	50	80	30	40	80	100
கருணைக் கிழங்கு	80	80	80	60	120	100
பயற்றங்காய்	100	60	50	40	80	50
லீக்ஸ்	140	180	120	90	100	150
பீற்றூட்	80	80	80	60	60	100
கறிமிளகாய்	120	120	140	120	120	160
முருங்கைக்காய்	80	50	80	60	80	40
போஞ்சி	200	160	180	130	160	250
கத்தரித்தம்புள்ள	100	80	—	60	100	20
கீரை - 1 பிடி	30	20	20	30	30	20
தேசிக்காய்	80	40	70	70	80	20
தேங்காய் (ஒன்று)	60	50	40	45	30-50	30-40
இராசவள்ளி	160	150	140	110	200	200
வெங்காயப்பூ	100	100	120	90	160	100
முள்ளங்கி	50	80	40	30	80	100
பொன்னாங்காணி	40	30	40	20	30	40
வல்லாரை	15	40	20	20	20	20
ஈரப்பலா	60	80	50	120	80	30

நன்மையைச் செய்யுங்கள்,
யாருக்கென்று மட்டும் கேட்காதீர்கள்.
– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

கபடத்தனங்களை முறியடிக்க மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்

தமிழினத்துக்கு மிகப்பெரும் சதிவேலைகளைச் செய்வதற்கான ஏற்பாடுகள் நடந்த வண்ணமுள்ளன.

இவற்றில் இருந்து தமிழினம் பாதுகாக்கப்பட வேண்டுமாக இருந்தால், அதற்கான ஒரே வழி தமிழ் மக்கள் எதிலும் விழிப்பாக இருப்பதாகும்.

அதாவது அரசியல் புலத்தில் வெளிவரக்கூடிய அத்தனை செய்திகளினதும் உண்மைத் தன்மை தொடர்பில் தமிழ் மக்கள் மெய்ப் பொருளைக் கண்டறியக்கூடியவர்களாக இருப்பது இங்கு கட்டாயமானதாகும்.

ஏனெனில் தமிழினத்துக்காக நேர்மையாகப் பாடுபடக்கூடியவர்களை ஓரங்கட்டுவதற்கான நடவடிக்கைகள் திரைமறைவில் நடப்பது தெரிகிறது.

அதிலும் குறிப்பாக வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகளைப் பார்க்கும்போது அதன் பதவிக்காலம் முடிவதற்குள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களுக்கு மிகக் கடுமையான நெருக்கடிகளைக் கொடுக்கின்ற முயற்சிகள் நடப்பது தெரிகின்றது.

இந்த முயற்சிகளின் பின்னணியில் யார் யாரெல்லாம் செயற்படுகின்றார்கள் என்பது மக்கள் அறிந்தவிடயமாயினும் வடக்கு மாகாண அரசின் இயங்குநிலை முடிவுறுவதற்கு இன்னும் சொற்ப காலமே இருக்கிறது என்ற நிலையில்,

மிகப்பெரும் குழப்பங்களை ஏற்படுத்தி; வடக்கின் முதலமைச்சர் மீது கடுமையான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி, அவரை தமிழர் அரசியலில் இருந்து வெளியேற்றுவதற்கான ஏற்பாடுகள் நடக்கிறது என்பது உறுதி.

இதனைத் திட்டமிட்டுச் செய்வதில் முஸ்லிம் இனத்தைச் சார்ந்த உறுப்பினர் ஒருவரே முதன்மைப்படுத்தப்படவுள்ளார் என்ற தகவல்களும் வெளிவரத் தொடங்கியுள்ளன.

எதுஎவ்வாறாயினும் வடக்கு மாகாண சபையைக் குழப்பியவர்களுக்கு தக்க பதிலடி வழங்க தமிழ் மக்கள் தயாராக இருக்க வேண்டும்.

இதற்கு மேலாக, தமிழ் மக்களின் பிரச்சினைகளை எடுத்துரைப்பதிலும் இலங்கை அரசின் போக்கைக் கண்டிப்பதிலும் தமிழ் மக்களின் அரசியலில் நம்பிக்கைக்குரியவராகவும் இருக்கக்கூடிய முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களுக்கு கடுமையான அழுத்தத்தை வடக்கு மாகாண சபையில் யார் செய்ய நினைத்தாலும் அதற்கான பதிலடி பலமாக இருக்க வேண்டும்.

இப்பதிலடி பலமாக இருக்கும்போதுதான் தமிழர்களுக்குத் துரோகம் செய்த அத்தனை பேரும் திருந்துவதற்கு அல்லது அரசியலில் இருந்து வெளியேறுவதற்கு வழிவகுக்கும்.

எனவே மண் மீட்புப் போராட்டத்தில் எத்தனையோ தியாகங்களைச் செய்த தமிழ் மக்கள், கயமைத்தனம் நிறைந்தவர்களின் கொடூரங்களிலிருந்து தங்களுக்கான அரசியலை பாதுகாக்க வேண்டும்.

இல்லையேல் எங்கள் தமிழினத்தின் எதிர்காலம் எங்கள் முன்னேயே விற்றுத் தீர்ந்து போகும்.

ஆகையால் வடக்கு மாகாண சபையில் இருந்து கொண்டு எம்மினத்துக்கு யார் கெடுதி செய்தாலும் அவர்களுக்குப் பதில் வழங்குகின்ற பொறுப்பு தமிழ் மக்களுக்கு உரியதாகையால் மக்கள் விழிப்பாக இருப்பது கட்டாயமானதாகும்.

சிங்களவர்கள் கணக்குவிடுவதை கட்டுப்படுத்த ஒரு தமிழ்த் தலைமை உருவாக வேண்டும்

வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் வலியுறுத்து

அரசியல் தீர்வு 2016க்குள் வரப்போகின்றது என எமது தமிழ்த் தலைவர்கள் கணக்குப் போட்டார்கள், இதுவரையில்அவர்கள்போட்ட கணக்கு எடுபடாமல் பெரும்பான்மையின சமூகம் கணக்கு விட்டுக் கொண்டே இருக்கின்றது என தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், கணக்கு விடுவதைக் கட்டுப்படுத்தக்கூடிய, கண்காணிக்கக்கூடிய ஒருதமிழ்த்தலைமை உருவாக வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு என சுட்டிக்காட்டியுள்ளார்.

வட மாகாண நிதி முகாமைத்துவ செயற்றிறன் விருது வழங்கும் விழா - 2017 யாழ் சரஸ்வதி மண்டபத்தில நேற்று முன்தினம் நடைபெறறது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டுஉரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒவ்வொரு நிறுவனத்திலும் அல்லது திணைக்களத்திலும் மற்றும் அமைச்சிலும் நிதி முகாமைத்துவ செயற்பாடுகள் சிறப்பாக அமைகின்றபோது அந்த நிறுவனம் பயனுறுதி மிக்க சிறப்பான ஒரு நிறுவனமாக மாற்றமடையும். சுமார் 2 தசாப்தங்களுக்கு முன்னர் நிதி முகாமைத்துவம் என்பது வெறுமனே நிதியை மட்டும் முகாமைத்துவம் செய்கின்ற ஒரு அமைபபாகவும் செலவீனங்களைக் குறைப்பதற்காக அல்லது மட்டுப்படுத்துவதற்காகமுனைப்புடன் செயற்பட்ட ஒரு தனிப்பிரிவாகவும் அமைந்திருந்தது. அப்போது ஒவ்வொரு திணைக்களமும் அதன் முன்னேற்றகரமான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இந்த நிதிப்பிரிவுகள் பெரும் சவாலாக அமைந்திருந்ததுடன் நிதிச் செலவீனங்களை தடுத்து நிறுத்துகின்ற ஒரு முட்டுக்கட்டையாகவும்காணப்பட்டன.

இதனால் அநேகமான அமைச்சுக்களில், திணைக்களங்களில் அல்லது நிறுவனங்களில் அங்கு பணிபுரிகின்ற நிர்வாகப் பிரிவு அதிகாரிகளுக்கும் கணக்காளர்கள், பிரதம கணக்காளர்களுக்குமிடையில் ஒரு சுமுகமான உறவு காணப்படவில்லை. இதன் காரணமாக இரு பகுதியினரும் ஒருவரோடு ஒருவர் முரண்பட்டுக் கொள்வதும் கொடுப்பனவு ரீதியாக வாய்ப்புக்கள் ஏற்படுகின்ற போதெல்லாம கணக்காளர்கள் நிர்வாகப் பகுதியினரை பழி தீர்க்கின்ற செயற்பாடுகளும் பரவலாகக் காணப்பட்டன.

ஆனால் இன்று அந்த நிலைகள் மாறி முன்னேற்றகரமான ஒரு நிர்வாக நடைமுறையை முன்னெடுத்துச் செல்வதற்கு உதவுகின்ற ஒரு கிளையாக இந்த நிதிக் கிளை மாற்றம் பெற்றிருப்பது மகிழ்விற்குரியது.

ஒதுக்கீடுகளைச் செலவு செய்யாது வைத்திருப்பதும் அல்லது ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளை விட மிகக் கூடுதலான செலவீனங்களை மேற்கொள்கின்ற இரண்டு நடவடிக்கைகளும் பிழையான நடவடிக்கைகளாகவே கொள்ளப்படுகின்றன.

எமது ஒதுக்கீடுகளைச் செலவு செய்யாது திருப்பி அனுப்பியுள்ளோம் என்ற கருத்தை யாரோ உலகம் பூராகவும் பரவச் செய்துள்ளார். நேற்றைய தினம் கூட என்னை எனது கொள்கைகளுக்காக வானளாவப் புகழ்ந்து விட்டு ஒரு வெளிநாட்டு எம்மவர் "நீங்கள் உங்கள் ஒதுக்கீடுகளின் ஒரு பகுதியை மத்திய அரசாங்கத்திற்குத் திருப்பி அனுப்புவதுதான எமக்கு வருத்தத்தைத் தருகின்றது" என்றார். "ஐயா! நாங்கள் எங்கள் அபிவிருத்திக்குப் பத்து அல்லது பன்னிரெண்டு மில்லியன் பணம் கேட்டால் அரசாங்கம் 1600 அல்லது 1800 மில்லியன் பணத்தையே தருகின்றது. அதிலும் மிச்சம் பிடித்து அரசாங்கத்திற்குத் திருப்பி அனுப்பி வருகின்றோம் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? எமக்குப் பணம் போதாதென்பதைச் சுட்டிக்காட்டி வருகின்றோமே தவிர ஒரு சதத்தையேனும் திருப்பி அனுப்பிவைக்கவில்லை என்று ஆணித்தரமாக அவருக்குக் கூறி வைத்தேன்.

எமக்குத் தரவேண்டிய பணத்தை மத்திய அமைச்சரமார் தம் கைவசம் வைத்துக் கொண்டு தமது கைப்பொம்மைகளுக்கூடாக முறையாகச் செலவு செய்ய முடியாதால் அவை திருப்பி அனுப்பப்பட்டு வருகின்றதோ என்பதை நான் அறியேன் என்றும் கூறினேன்.

கடைத்த பணத்தை வைத்துச் சிக்கனமாகக் குடும்பம் நடத்த பழக்கப்பட்டவர்கள் வட மாகாணத் தமிழர்கள். இப்போதைய நிலை வேறாக இருப்பினும் 1940களில் என் பெற்றோர் ரூ.67 இலங்கை அரசாங்க சம்பளத்தில் மிகக் கச்சிதமாகக் குடும்பம் நடத்தினார்கள். சிக்கனமாக வாழ்க்கை நடத்துவதில் அவர்கள் வல்லவர்களாக இருந்தார்கள். அதே போல்தான் எமது நிறுவன செயற்பாடுகளும் கிடைத்த ஒதுக்கீடுகளுக்கு அமைவாக சிக்கனமாக இடம்பெற நாங்கள் நடவடிக்கைகள் எடுத்து வந்துள்ளோம். ஆனால் அவற்றை மிஞ்சிய எதிர்பார்க்கப்படாத செலவுகள் வரும் போது மட்டும் நாம் மேலதிக ஒதுக்கீடுகளை நாடுகின்றோம்.

பொதுவாகவே வட பகுதியைச் சார்ந்த தமிழ் உத்தியோகத்தர்கள் கணக்கீட்டு முறைமைகளில் வல்லவர்கள். இன்று நேற்றல்ல பல காலமாக ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்து இன்று வரை இது உணரப்பட்டுள்ளது. இன்றும் பல தொழிற் சங்கங்களிலும் ஏனைய பொது அமைப்புக்களிலும் தலைவர், செயலாளர் பதவிகளைப் பெரும்பான்மையின மக்கள் தம்மகத்தே கையகப்படுத்துகின்ற போதும் பொருளாளர் பதவியை ஒரு தமிழ் உத்தியோகத்தருக்கு வழங்கவே விருப்புடையவர்களாக இருப்பது காலம் காலமாக உணரப்பட்டுள்ளது. பொதுவாகவே நேர்மைத்தனம் மிகுந்த இவர்களின செயற்பாடு மதம் கடந்து, மொழி கடந்து தமிழ் மக்கள் மீது நம்பிக்கையை ஏற்படுத்தக் காரணமாகவிருந்து வந்துள்ளது.

அரசியல் ரீதியாகவும் கணக்கு வைப்பதில் நாம் சிறந்தவர்களாகவும் கணக்கு விடுவதில் பெரும்பான்மையினர் பெரும் வல்லவர்களாகவும் இருப்பது உணரப்பட்டுள்ளது. எமது பண்டா - செலவா உடன்பாட்டை எடுத்துப் பாருங்கள். கணக்காகத் தமக்கு வேண்டியவற்றை ஆவணப்படுத்தினார்கள் எமது தமிழ்த் தலைவர்கள். பண்டாரநாயக்காவின் கொழும்பு றொஸ்மிட் பிளேஸ் இல்லத்திற்கு 200 பௌத்த பிக்குகள் சென்றதில் பண்டார நாயக்க கணக்கு விட்டுவிட்டார். உடன்பாட்டை கிழித்தெறிந்து விட்டார்.

அண்மைய காலத்தில் 2016இல் இந்தா அரசியல் தீர்வு வரப்போகின்றது என்று எமது தமிழ்த் தலைவர்கள் கணக்குப் போட்டனர். இது வரையில் போட்ட கணக்கு எடுபடவில்லை. கணக்கு விட்டுக் கொண்டே இருக்கின்றது பெரும்பான்மையின சமூகம். கணக்கு விடுவதைக் கட்டுப்படுத்தக் கூடிய, கண்காணிக்கக் கூடிய ஒரு தமிழ்த் தலைமை உருவாக வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு என மேலும் தெரிவித்தார். (இ-9)

வடக்கு மாகாணத்திற்கான சின்னங்களை உருவாக்க குழு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்துக்கான சின்னங்களை உருவாக்குவதற்கு குழு அமைக்கப்பட்டதுடன்வடக்குமாகாண சபையில் தீர்மானமாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 130ஆவது அமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் மேற்குறித்த விடயம் தொடர்பாக மாகாண சபை உறுப்பினர் பொ.ஐங்கரநேசன் பிரேரணையை முன்மொழிந்தார். குறித்த பிரேரணையில் இலங்கையில் மாகாணசபைமுறைமை தோற்றம் பெற்ற பின்னர் மாகாண அரசாங்கங்கள் தங்களுக்கான மாகாண மரம், பூ, விலங்கு, பறவை என்பவற்றைத் தெரிவு செய்துள்ளன.

வட மாகாணத்திற்கெனவும் வட மாகாண சபை உருவாகுவதற்கு முன்பாக மாகாண மரமாக மருதமரமும் மாகாண பூவாக வெண்தாமரையும் மாகாண பறவையாகபுளுனியும்மாகாண விலங்காக ஆண் மானும் தெரிவு செய்யப்பட்டன.

வட மாகாண சபை ஜனநாயக ரீதியாகத் தோற்றம் பெறுவதற்கு முன்பாக தீர்மானிகப்பட்ட மாகாணத்துக்கான இக் குறியீடுகளில் வடக்கின் சிறப்புக்கள் பெரிதும் வெளிப்படவில்லை. எனவே இது தொடர்பாக மாகாண சபை உறுப்பினர்களதும் துறைசார் அறிஞர்களதும் பொதுமக்களினதும் கருத்துக்களை உள்வாங்கி இவற்றை மீளாய்வு செய்து தேவை ஏற்படின் மாற்றங்களை ஏற்படுத்தவும் வட மாகாணத்துக்கான பாரம்பரியத்தைப் பறைசாற்றும் விதமாக பழம் ஒன்றைத் தெரிவு செய்யவும்வடமாகாண சபை ஆவன செய்ய வேண்டும் என முன்மொழிந்தார்.

அதேவேளை வடக்கு மாகாண சபைக்குரிய கீதம் உருவாக்கும் செயற்பாடு எந்தவகையில் இருக்கிறது என்றும் இந்த சபை நிறைவடைவதற்கு முன்னர் ஒரு முறையாவது கீதம் இசைக்கப்படவேண்டும் என உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அதற்கு பதிலளித்த அவைத்தலைவர் கீதம் இயற்றப்பட்டு அதற்கு இசையமைக்கும் பணிகள் இடம் பெற்று வருகின்றன. விரைவில் கீதம் இசைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து மேற்குறித்த பிரேரணை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் குறித்த சின்னங்களை தெரிவு செய்வதற்கு உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது. அக் குழுவினர் சின்னங்களை தெரிவு செய்வார்கள் என அவைத் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.(இ-9)

ஆட்டோ புரண்டு கோர விபத்து மூவர் படுகாயம்

(கரணவாய்)

தொண்டைமானாறு பகுதியில் இடம்பெற்ற கோர விபத்தில் மூவர் படுகாயமடைந்த நிலையில் ஊரணி வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் தொண்டைமானாறு மூனறாம் சந்திப் பகுதியில் இவ் விபத்து இடம்பெற்றது.

முனனால் சென்ற ஆட்டோ சந்தியால் திருப்ப முற்பட்ட போது பின்னால் வந்த ஆட்டோவை சடுதியாக நிறுத்த முற்பட்டபோது புரண்டு விபத்திற்குள்ளானது.

இதில் ஆட்டோவில் பயணித்த மூவர் படுகாயமடைந்த நிலையில் வல்வெட்டித்துறை ஊரணி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ் விபத்து தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸார விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர். (இ-60)

கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி கோண்டாவில் கிங்ஸ்ரார் சம்பியன்

ஸ்ரீமுருகன் ஜக்கிய விளையாட்டுக் கழகத்தின் 45 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்திய ஆண்களுக்கான ஓவர்கேம் முறையிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி அண்மையில் ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் உடுவில் அம்பாள் விளையாட்டுக் கழக அணி எதிர் கோண்டாவில் கிங் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் மோதியது.

முதற்சுற்றினை 15:13 என்ற புள்ளிகளுடன் உடுவில் அம்பாள் விளையாட்டுக் கழகம் வெற்றி கொண்டது.எனினும் வீறு கொண்டெழுந்த கோண்டாவில் கிங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் அடுத்த மூன்று சுற்றுக்களையும் 15:9 , 15:13 , 15:12 என்று வெற்றிபெற்று தொடரின் சம்பியனாக முடி சூடிக் கொண்டது.

போட்டியின் ஆட்டநாயகனாக கோண்டாவில் கிங்ஸ்ரார் அணியின் சுதா தெரிவா னார். (க)

கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கரப்பந் தாட்ட சங்கத்தின் ஸ்தாபகர்களாகிய அமரர்களான கப்டன் டி. எ.எம். குணசிங்கம், க. இராசரட்ணம் நினைவாக யாழ். மாவட்ட கரப் பந்தாட்டச் சங்கம் நடத்தும் கரப்பந் தாட்டச் சுற்றுப் போட்டி அச்சுவேலி ஸ்ரீ விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக மைதானத்தில் நாளை நடை பெறவுள்ளது என விழா ஏற்பாட்டா ளர்கள் அறிவித்துள்ளனர். (க)

வளர்மதி விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி சம்பியனாகியது டெல்ரா அணி

சாவகச்சேரி -பெரிய மாவடி சித்தி விநாயகர் கலை மன்றத்தின் 41ஆவது ஆண்டு நிறைவு விழா வினை முன்னிட்டு இடம் பெற்ற கரப்பந்தாட்ட போட்டியில் டெல்ரா விளையாட்டுக் கழகம் சம்பியனா னது.

விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் இடம்பெற்ற கரப்பந் தாட்ட போட்டியின் இறுதிப் போட்டி யில் அல்லாரை டெல்ரா விளை யாட்டுக் கழகத்தை எதிர்த்து வளர் மதி விளையாட்டுக் கழகம் மோதி யது. இதில் அல்லாரை டெல்ரா அணி சம்பியனானது.

இரண்டாவது இடத்தினை வளர்மதி விளையாட்டுக் கழகம் தனதாக்கிக் கொண்டது.

இவர்களுக்கான வெற்றிக் கேடயம் வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை சாவகச்சேரி பெரிய மாவடி சித்தி விநாயகர் கலை மன்றத்தில் இடம்பெற்றது.

சாவகச்சேரி நகரசபை உறுப் பினர் தர்ஷன் வெற்றிக் கேட யத்தை வெற்றி பெற்ற அணிகளுக்கு வழங்கி வைத்தார். (க-30)

இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் பதிவு செய் யப்பட்ட கழகங்களுக்கிடையி லான கரப்பந்தாட்ட இறுதிப்போட் டியும் பரிசளிப்பு விழாவும் நாளை இரவு 7 மணியளவில் அச்சு வேலி விக்னேஸ்வரா விளை யாட்டுக்கழக மைதானத்தில் யாழ். மாவட்ட கரப் பந்தாட்டச் சங்கத்தலைவர் இமனோ கரன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக கஜமு கன் ஹாட்வெயார் உரிமையாளர் தொழிலதிபர் ஈ.எஸ்.பி. நாகர த்தினம், கிருபா லேணர்ஸ் உரிமை யாளர் அ. கிருபாகரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினராக அச்சு வேலி விக்னேஸ்வரா விளையாட் டுக்கழக தலைவர் கிருஷ்ணராஜா கலந்து கொள்வார். (இ)

அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது
076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு
அனுப்பிவையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

கரைச்சி கணேசபுரம் வட்டாரத்தில் அமைந்துள்ள ஜெயந்தி நகர் கிராமத்தின் விளையாட்டுக்கழகத்திற்கு நிரந்தரமான விளையாட்டு அரங்கு ஒன்றை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு கடந்த 28 ஆம் திகதி நடைபெற்றது.

அவ் விளையாட்டு கழக தலைவர் அப்பனின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன், பிரதேச சபையின் உறுப்பினர் ப.குமாரசிங்கம், கிராம அலுவலகர், பொருளாதார உத்தியோகத்தர் மற்றும் சனசமூக நிலைய உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர், விளையாட்டுக் கழக உறுப்பினர் ஆகியோர் கலந்து கொண்டி ருந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் விளையாட்டுத் துறை அமைச்சோடு ஏற்படுத்திக்கொண்ட தொடர்பின் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள லக்கி ஸ்டார் விளையாட்டுக் கழகத்திற்கும் ஜெயந்தி நகர் விளையாட்டுக் கழகத்திற்கும் தலா 10 இலட்சம் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த பகுதியில் இருக்கின்ற இந்த விளையாட்டுக்கழகத்தில் பார்வையாளர் அரங்கினை நிர்மாணிப்பதற்காக முதலாம் கட்ட நிதியாக ஒரு மில்லியன் ரூபாய்களை விளையாட்டுத்துறை அமைச்சிடமிருந்து பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் பெற் றுக்கொடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

கைதடி தென் கிழக்கு ச.ச.நிலையத்தின் மின்னொளியின் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டி

கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 71ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி ரீதியிலான மாபெரும் தாச்சி சுற் றுப் போட்டியின் மூன்றாம் நாள் போட்டியில் இன்று சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு பெண்கள் பிரிவுப்போட்டியில் கைதடி கிழக்கு நவசக்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டுக்கழகம் மோதவுள் ளது.

அதேவேளை ஆண்கள் பிரி வுப் போட்டியில் இரவு 8.30 மணி க்கு கோவிலாக்கண்டி மகா விஷ்ணு விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கைதடி ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது.

இதேவேளை கடந்த 30 ஆம் திகதி வியாழக்கிழமை நடை பெற்ற முதல்நாள் போட்டியில் கைதடி மின்னொளி A விளை யாட்டுக்கழகம் 8:3 எனும் புள்ளி கள் அடிப்படையில் கைதடி மத்தி குமரநகர் B விளையாட்டுக் கழக த்தை வென்று அடுத்த சுற்றுக்கு தெரிவாகியுள்ளமை குறிப்படத்தக் கது. (க)

உத்தியோகபூர்வ...

யோகபூர்வ அலுவலகம் திறந்துவைக்கப்பட்டது. இந்த அலுவலகத்தில் இனிவரும் காலங்களில் பொதுமக்கள் சந்திப்பு இடம் பெறுவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படும் என தமிழ் மக்கள் பேரவையினர் அறிவித்துள்ளனர்.

இந்த நிகழ்வில் மதத்தலைவர்கள், இணைத்தலைவர்களான வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், இரு தய வைத்திய நிபுணர் பு.லக்ஸ்மன், த.வசந்தராஜா உட்பட பேரவையின் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். இந்த திறப்புவிழா நிகழ்வைத் தொடர்ந்து பேரவையின் 12 ஆவது கூட்டம் இணைத்தலைவர்கள் தலைமையில் புதிய பணிமனையில் நடைபெற்றது. (ம-9)

முஸ்லிம்களை...

யானது வடக்கிலிருந்து முஸ்லிம் மக்களை விடுதலைப் புலிகள் வெளியேற்றியமை அந்த நேரத்தில் சரியானது என்பதை மறைமுகமாக ஏற்றுக்கொள்வதாக அமைகிறது என அரசியல் விமர்சகர்கள் கருத்துரைத்துள்ளனர். (ம)

இராணுவ மயமாக்கல்...

டுள்ளார்.

ஜ.நா.வின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் பதவியில் இருந்து விலகிச் செல்லும் அவர், இலங்கை தொடர்பாக அவர் நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இலங்கை அரசாங்கம் காணிகளை விடுவிப்பதற்கு அர்ப்பணிப்பை கொண்டிருக்கின்றபோதும் இராணுவம் அதற்குக் கீழ்ப்படிய மறுத்து வருகின்றது.

இதனால், இடம்பெயர்ந்த அப்பாவி மக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருவதாக நேற்றுடன் பதவியிலிருந்து விலகும் செயிட் அல் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

மேலும் பல தசாப்தங்களுக்கு முன்னர் இராணுவத்தினரால் தமது நிலங்களை விட்டு எழுப்பப்பட்ட மக்கள் இன்னமும் மிகவும் மோசமான சூழ்நிலையில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டு இருப்பதாகவும் அவர் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

கழுத்திலிருந்த பட்டியைக்...

வாக்கு மூலத்தில் குறித்த பெண்ணுடன் தனக்கு தொடர்பு இருந்தது. அவரது வயிற்றில் வளர்ந்த குழந்தை என்னுடையதுதான். அதனால் அவள் தன்னை கூட்டிச் செல்லுமாறு வற்புறுத்தினாள். பின்னர் நாம் இருவரும் நஞ்சு குடித்து இறந்துவிடுவோம் என்று முடிவெடுத்து 28.08.2018 அன்று அவள் கடமை முடிந்து தொழிற்சாலையை விட்டு வெளியில் வந்ததும் நான் எனது வீட்டில் இருந்து நடந்து வந்து அவளது மோட்டார் சைக்கிளில் ஏறிக்கொண்டேன். பின்னர் அம்பாள் குள வீதியூடாக கிளிநொச்சி வந்து உள்பாதைகளால் கரடிப்போக்கு வந்து பின்னர் மீண்டும் உள் பாதைகளால் சம்பவ இடத்திற்கு சென்றோம். வரும்போதே அவள் மருந்துப் போத்தல் ஒன்றை வாங்கிவந்தாள். அங்கு சென்றதும் குடிப்போம் என்றதும் எமக்குள் சிறு பிரச்சினை வந்துவிட்டது. அதன் பின்னரே அவள் பாதுகாப்பு உத்தியோகத்தரின் உடையில் வந்தமையால் அவளது கழுத்தில் பட்டியில் அவளது தொழில் அடையாள அட்டை தொங்கிக் கொண்டிருந்தது. கழுத்தில் இருந்த பட்டியைக் கொண்டே அவளது கழுத்தை நெரித்துக் கொலை செய்தேன்.

பின்னர் இறந்தவள் பாதுகாப்பு உத்தியோகத்தர் என அடையாளம் காணக் கூடாது என்பதற்காக அவளது பாவாடை, மேற் சட்டை எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு அவளது உடலை அருகில் இருந்த வயல் கால்வாய்க்குள் இழுத்துச் சென்று போட்டு விட்டு மோட்டார் சைக்கிளில் வந்து கனகபுரம் பகுதியில் அவளின் பாவாடையை எறிந்து விட்டு காண்பாக் மற்றும் மேல் சேட்டு என்பவற்றை அம்பாள் குளப்பகுதியில் எறிந்துவிட்டு மோட்டார் சைக்கிளில் நள்ளிரவு போல் வீட்டுக்கு வந்தேன். வந்து பின்பக்கமாக இருக்கும் அறையில் மோட்டார் சைக்கிள் கெல்மெற் என்பவற்றை ஒளித்து வைத்து விட்டு மருந்துப் போத்தலைக் கொண்டுவந்தேன். குடித்து நானும் சாவோம் என்று, பிறகு பிள்ளைகள் நினைவு வந்ததால் அதனையும் வீட்டுக்குள் ஒளித்துவைத்துவிட்டேன். சம்பவ இடத்தில் பெலிற் மற்றும் சில தடயங்களைத் தவிர மற்றது எல்லாவற்றையும் நானே கொண்டு வந்தேன். இக்கொலையை நான் மட்டுமே செய்தேன். என்னால் சம்பவ இடம் மற்றும் பொருட்கள் வீசப்பட்ட இடங்கள் என எல்லாவற்றையும் என்னால் காட்ட முடியும். நான் தான் இதனை செய்தேன் என குறித்த வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது

தொலைபேசித் தரவுகள் என்பவற்றைக் கொண்டு குறித்த பெண்ணின் தொலைபேசியின் தரவை பரிசீலனை செய்த பொழுது குறித்த பாதுகாப்பு உத்தியோகத்தரின் தொலை பேசியில் இருந்தே இறுதியாக அழைப்பு எடுக்கப்பட்டுள்ளதுடன் தொலைபேசியில் இவருடனே அதிகளவாக தொடர்பில் இருந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும் சம்பவம் நடைபெற்ற அன்று இரு தொலை பேசிகளும் நீண்ட நேரமாக ஒரே கோபுர அலையிலையே நகர்ந்துள்ளமை என்பவற்றைக் வைத்து நேற்று மதியம் குறித்த ஆடைத் தொழிற்சாலையில் கடமையில் இருந்த குறித்த உத்தியோகத்தரை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்திய பொழுதே சந்தேக நபர் மேற்கண்டவாறு ஒப்புதல் வாக்குமூலத்தினை வழங்கியுள்ளார்.

வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட பின்னர் அவரால் வீசப்பட்ட இடமான கனகபுரம் பகுதியில் இருந்து குறித்த பெண்ணின் பாவாடை போன்றவற்றை மீட்ட பொலிஸார் அவரது வீட்டுக்கு சென்று மோட்டார் சைக்கிள் அவர் பாவித்த தொலைபேசி, கெல்மெற் மற்றும் மருந்துப் போத்தல் என்பவற்றை மீட்டுள்ளனர். அம்பாள்குளம் பகுதியில் விடப்பட்ட மேற்சேட் என்பவற்றை சம்பவம் நடைபெற்ற மறுநாளே பொலிஸார் மீட்டிருந்தனர். பின்னர் அவரது மனைவியின் வாக்குமூலம் என்பன பதிவு செய்யப்பட்டு குறித்த விசாரணை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. சந்தேக நபர் கிளிநொச்சிப் பொலிஸ் நிலைய தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன் சட்ட ரீதியான ஆவணங்கள் தயார் படுத்தப்பட்டு கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-312,281,315)

வட மாகாணத்தில்...

நிறுத்தவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் 12ஆவது கூட்டம் நேற்று பலாலி வீதி, கந்தர்மடத்தில் உள்ள அலுவலகத்தில் இடம்பெற்றது. இணைத்தலைவராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதாவது மாகாண சபைத் தேர்தல்கள் வரப் போகின்றன. எமது பதவிக்காலம் முடிந்ததும் ஆளுநர் ஆட்சி நடத்தப் போகின்றார். அவர் ஆட்சியின் போது எமக்குப் பாதிப்பான நடவடிக்கைகள் நடைபெறப்போவதைத் தடுத்து நிறுத்த வேண்டியிருக்கும். முக்கியமாக பௌத்த விகாரைகளைத் திறந்து வைக்க இருப்பது தெரியவந்துள்ளது என தெரிவித்தார். (ம-9)

முல்லை குமுழமுனையில் அபாயகரமான வெடிபொருள் அடையாளம் காணப்பட்டுள்ளது

(பனிக்கன்குளம்)

குமுழமுனை ஆறாம் வட்டாரப்பகுதியில் தனியார் காணி ஒன்றில் இருந்து வெடி பொருட்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது!

முல்லைத்தீவு குமுழமுனை ஆறாம்வட்டாரத்தில் அமைந்துள்ள தனியார் காணி ஒன்றினை துப்புரவு செய்யும் போது ஆர்.பி.ஜி எறிகணை மற்றும் கைக்குண்டு ஒன்றும் காணப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து காணியின் உரிமையாளரினால் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து குறித்த வெடிபொருள் காணப்படும் இடத்தினை பொலிஸார் அடையாளப்படுத்தியுள்ளனர்.

வெடிபொருட்களை அகற்றுவதற்கான சட்ட நடவடிக்கையில் முல்லைத்தீவு பொலிஸார் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்கள். (ம-281)

தமிழ்த் தலைமைத்துவ...

இதற்குப் பதில் அளிக்க வேண்டிய கடப்பாடு எனக்கு இருப்பதை ஏற்றுக்கொள்கின்றேன்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் பேரவையின் 12ஆவது கூட்டம் நேற்று பலாலி வீதி, கந்தர்மடத்தில் உள்ள அலுவலகத்தில் இடம் பெற்றது. இணைத்தலைவராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்

பலரும் எனது வருங்கால அரசியல் பயணம் பற்றிய கேள்வியை விடுத்த வண்ணமே உள்ளார்கள். என்னிடம் தற்போது நான்கு மாற்றுவழிகள் தரப்பட்டுள்ளன. ஒன்று திரும்ப என் வீட்டிற்குச் சென்று எனது ஓய்வு வாழ்க்கையைத் தொடர்வது. மற்றையது ஒரு கட்சியுடன் சேர்ந்து தேர்தலில் நிற்பது, மூன்றாவது புதிய கட்சி ஒன்றைத் தொடங்குவது.

நான்காவது கட்சி அரசியலை விட்டு எமது தமிழ் மக்கள் பேரவையை ஒரு உண்மையான மக்கள் பேரியக்கமாக மாற்றி உள்நாட்டு வெளிநாட்டு தமிழ் மக்களை ஒன்றிணைத்து அரசாங்கத்துடன் எமக்கேற்ற தீர்வொன்றை முன் வைத்துப் பெற முயற்சிப்பது. நான்காவது மாற்று வழி என்னைச் சிந்திக்க வைத்துள்ளது.

கட்சி சாரா பேரியக்கங்கள் பல நாடுகளில் மக்களின் ஒத்துழைப்புடன் பல அரசியல் மாற்றங்களை கொண்டு வந்திருக்கின்றன. அத்துடன் புதிய கட்சி தொடங்குவது பற்றியும் உங்கள் எல்லோரதும் கருத்தை அறிய ஆவலாய் உள்ளேன். கட்சி தொடங்குவது இலகுவானது. அதை நடத்துவது சிரமானது. மேலும் கட்சிகளைப் பதிவு செய்யப் பல காலம் எடுக்கும். தேர்தல்கள் வந்தால் எந்தச் சின்னத்தின் கீழ் போட்டியிட வேண்டும் என்ற கேள்வி எழும்.

எனினும் 2009 இல் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஏற்றுக்கொண்ட தலைமைப் பாத்திரம் மற்றும் அதன் அணுகுமுறை போன்ற வற்றில் அது தோல்வி அடைந்து விட்டது என்றே கூற வேண்டியுள்ளது. வரலாறு உங்களுக்கு வழங்க முன்வந்துள்ள தலைமைப் பாத்திரத்தை நீங்கள் ஏற்று முன்னெடுக்கத் தயாரா என தமிழ் மக்கள் பேரவையும் மக்களும் நீண்ட காலமாக என்னிடம் கேட்டு வருகின்றார்கள். இதற்குப் பதில் அளிக்க வேண்டிய கடப்பாடு எனக்கு இருப்பதை ஏற்றுக் கொள்கின்றேன்.

60 வருடத்துக்கு மேற்பட்ட தமிழ்த்தேசிய அரசியல் போராட்ட வரலாறு எனக்கு வகுத்து அளித்திருக்கும் பொறுப்பை நான் தெளிவாக உணர்ந்திருக்கின்றேன். இதில் எள்ளளவும் சந்தேகம் வேண்டாம். ஆனால் 2013-ம் ஆண்டில் இருந்து ஆரம்பித்த வடக்கு மாகாண சபை தலைமைப் பதவி அதிகார பூர்வமாக இன்னமும் சில வாரங்களில் முடிவுக்கு வருகிறது. இதை அடுத்து தமிழ் தேசிய அரசியல் தொடர்பில் நான் ஆழமாக ஆராய்ந்து வருகின்றேன். இது தொடர்பில் உங்களுடனும் (பேரவை) அனைத்து தமிழ் தேசிய கொள்கை சார் அமைப்புக்களுடனும் இணைந்து உரிய முடிவை விரைவில் அறிவிக்கவே உங்கள் கருத்தறிய ஆவலாய் உள்ளேன் என்றார். (ம-9)

திருமுறுகண்டியில் பாடசாலை மாணவி சடலமாக மீட்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு திரு முறுகண்டி இந்து புரம் பகுதியில் 14 வயது பாடசாலை மாணவி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

திருமுறுகண்டி சிவபாத கலையகம் பாடசாலையில் தரம் 9இல் கல்விகற்கும் 14அகவையுடைய முருகேசு அபிசாளினி என்ற மாணவியே அவரது வீட்டில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ம-281)

புகையிரதம் மீது கல்வீச்சுத் தாக்குதல் . ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த கடுகதி புகையிரதம் மீது மேற்கொள்ளப்பட்ட கல்வீச்சில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒருவர் காயமடைந்துள்ளார். யாழ்.வடமராட்சி கிழக்கு தாளையடியை சேர்ந்த 64 வயதுடைய பா.சிவச்செல்வம் என்பவரே கல்வீச்சுக்கு இலக்காகி காயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

குருநாகலில் இருந்து யாழ்.நோக்கி வருவதற்காக புகையிரதத்தில் குறித்த நபர் பயணித்துக்கொண்டிருந்தவேளை மதவாச்சிக்கு அண்மித்த பகுதியில் புகையிரதம் மீது கல் வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டது.

அதன் போதே அவர் கல்வீச்சுக்கு இலக்காகி காயமடைந்துள்ளார்.

காயமடைந்த நபர் தற்போது அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உள்ளதாக தெரிவிக்கின்றனர்.

குறித்த கல்வீச்சு தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

ஈர மண் சரிந்து...

ருப்பு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட போது உயிரிழந்துள்ளார்.

பாவாடைக்கல்லு ஆற்றில் நிலத்தினை குடைந்து மணல் ஏற்றிக்கொண்டிருந்த வேளை மணல் இடிந்து வீழ்ந்ததில் உழவு இயந்திரத்தின் பெட்டிமோதியபோது விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

நாகர்கோவிலை சொந்த இடமாகவும் வெள்ளப்பள்ளம் சுதந்திரபுரத்தினை தற்போதைய முகவரியாக கொண்ட 41 அகவையுடைய சுதாகரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவரது உடலம் மாஞ்சோலை மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றார்கள். (ம-281)

தேவை

பொதி போக்குவரத்து சேவை நிறுவனத்துக்கு யாழ் மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் வாகன சாரதி தேவை. Light vehicles licence holders. கணக்காளர் வேலைக்கு பெண் ஊழியர்களும் தேவை.

077 756 0682

(C-3689)

பயிற்சியுடன் வேலை வாய்ப்பு

பயிலுனர்கள் - 2018 இல் A/L எடுத்தவர்கள்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

ஊது கிளைகள்
கிளிநொச்சி சுன்னாகம்
சாவகச்சேரி மானிப்பாய்
நெல்லியடி பருத்தித்துறை
திருகோணமலை வல்வெட்டித்துறை

- எமது அனைத்து கிளைகளிலும் 6 மாத கால வேலை வாய்ப்பு பயற்சிகள் உண்டு.
- விரும்பியவர்கள் பயற்சி முடிவில் வேலையில் சேரலாம்.
- பயிற்சிக்கான கைக்கத்தொகை 7500/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0768226236
v2vacancies@gmail.com

(5436)

ஆடம்பர வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு

யாழ்.நகரில் அமைதியான சூழலில் புதிய வீடு நாள், கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்கு உண்டு. திருமண நிகழ்வுகள், சுபகாரியங்கள், வெளிநாட்டிலிருந்து வருபவர்கள், வெளிமாவட்டத்திலிருந்து வருபவர்கள் தங்குவதற்கு சகல வசதிகளும் உண்டு. A/C, Non A/C, தளபாட வசதிகள், இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் சமையல் பாத்திரங்கள் என அனைத்து வசதிகளும் உண்டு.

தொடர்புகளுக்கு: **0773110015, 0777110015**

(5527)

வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

ஓய்வின் பின் வாழ்க்கையை AIA உடன் தொடங்குங்கள்...

ஓய்வு ஒவ்வொருவருக்கும் வித்தியாசமானதாகும். எமது வாழ்க்கையை நிம்மதியாக தொடர்வதற்கு தேவையான போதிய நிதிவளத்தை எவரிலும் தங்கி வாழாது கொண்டிருக்க வேண்டும் என்பது அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

எமது AIA நிறுவனத்தின் ஓய்வூதிய திட்டத்தில் இணைவதன் மூலம் பல பெறுமதிமிக்க பரிசில்களை வென்று தங்கள் ஓய்வூதிய காலத்தை நீண்டகாலம் மகிழ்ச்சியாக வாழ்வதற்குரிய அடித்தளத்தை இன்றே ஆரம்பித்திடுங்கள்.

தொடர்புகளுக்கு: **AIA**
No. 62/6, Stanly Road, Jaffna.
076 330 4127, 021 222 1215

(5533)

விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

DELIVERY IN 3-5 DAYS

UK- 550	/=Kg
கனடா-900	/=Kg
ஜேர்மனி- 700	/=Kg
நெதர்லாந்து-700	/=Kg

(நிபந்தனைகளுக்கட்டுப்பட்டது)

மானிப்பாய் 0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

(C-3689)

கடைகள் வாடகைக்கு

கிளிநொச்சி, கனகபுரம் பகுதியில் விசாலமான கடைகள் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
021 206 0107

(C-3687)

VCM INSTITUTE

மனோகராச் சந்தி அருகாமை, யாழ்ப்பாணம்.

A/L 2018 REPEAT

இணைந்த கணிதம்

B. ரவீந்திரன் B.Sc

ஆரம்பம் **05.09.2018** புதன் காலை 7.00 மணி

(5530)

KINGS ELECTRONICS(PVT) LTD

★SPECIAL★ ★OFFERS★

ELECTONICS | FURNITURES | BABYCARE | TOYS

மாபெரும் மலிவு விற்பனை SEPTEMBER 15 வரை

மின் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் குழந்தைகளுக்கான பொருட்கள்

LED TELEVISIONS

WARRANTY 3 YEARS

Samsung 32"	-28,750/=
LG 32"	-29,600/=
Hisence 32"	-22,400/=
Sony 32	-34,500/=
VideoConn 32"	-22,900/=
Innovex 24"	-17,400/=
Panasonic 32"	-26,250/=
Abans 32"	-21,900/=
Maxmo 32"	-18,750/=
Haier 32" smart	-28,900/=
Unic Ulta	-19,900/=
Haier 32"	-20,500/=
Innovex 20"	-12,250/=
JVC 24"	-16,750/=

MAXMO 40" LED TV 48900/= Free DVD PLAYER

INNOVEX AC

41,900/=	9000BTU
44,900/=	12000BTU
55,900/=	18000BTU
74,900/=	24000BTU

No Warranty Without installation

SISIL SL-EC0192 REFRIGERATOR RS.36900/= FIVE YEAR WARRANTY

6KG INNOVEX WASHING MACHINE 34500/= FIVE YEAR WARRANTY

SOFA SET 3+1+1 39,900/= ONLY

IG Dual Inverter AC

99,900/= 12000BTU

5.5KG Abans FULLY AUTOMATIC WASHING MACHINE RS.32500/=

LG TOP LOADER WASHING MACHINE 12KG LGWM2312VSAM INVERTER 64,500/=

LG INVERTER REFRIGERATOR GL-B272SM 63,900/=

SAMSUNG 55" 4K SMART RS.164,000 ONLY

Hisense 55 4K SMART RS.126,900 ONLY + DVD PLAYER FREE

SAMSUNG 43" 4K SMART RS.94,000 ONLY

WARRANTY 3 YEARS

021-4546699 | 076-3594665 | kingsjaffna | 12, Point Petro Road, Jaffna

(C-3692)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.09.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.